**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
> Criminal Cases
> Civil Litigation
> Family
> Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG, Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ, Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ◆ ISSUE - 155 ◆ 07 FRIDAY OCTOBER 2011

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
Driver / Passenger – within last 3 years
(Neck, Back & Shoulder Pain)
NO WIN NO FEE
(Terms & Conditions Apply)
Mini cab "PCO"
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**TOP MARKS FOR MATHS – A* TUTOR**
GCSE, A/S, A/2, Maths, Statistics and Mechanics Students
All examinaton boards Covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams.
For further details call
KAMALANATHAN BSC (HONS)
Tel : 020 8883 3126
Mobile: 079 7083 9507
E-Mail: rasiah.nathan@yahoo.co.uk
North, North-West & East London areas

**வாகன விபத்தா? உடன் அழையுங்கள்**
INJURY CLAIMS ADVICE BUREAU LTD
● உங்களுக்கும் உங்கள் பயணிகளுக்கும் ஏற்பட்ட காயங்களுக்கு 100 % நட்டஈட்டை துரிதமாக பெற்றுத்தர வேண்டுமா?
● உடன் தரமான புதிய மாற்று வாகனம் பெற்றுத்தர வேண்டுமா?
● வேலைத்தளம் பொது இடங்களில் ஏற்பட்ட விபத்துகளுக்கு 100 % நட்ட ஈடு பெற்றுத் தர வேண்டுமா?
0208 933 7921 / 0793 276 2452
REGUS HOUSE, 30 LOCKET RD, HARROW, HA3 7LZ

**தீபாவளித் திருநாளை முன்னிட்டு**
50% விலைக் கழிவு!
Thinesh Jewellers & Textiles
276 Lewisham High Street, Lewisham, London SE13 6JZ | Tel : 020 8613 9569
www.thinesh-jt.com

• மார்ச் 2007ம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் பின்னர் அகதி அந்தஸ்து கோரி இதுவரை எதுவித முடிவுகளும் கிடைக்காது இருப்பின்,
• தற்போதைய புதிய சட்டவிதிகளுக்கமைய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரக்கூடிய வகையில் புதிய விண்ணப்பம் செய்து தரப்படும்.
• கைது செய்யப்படுதல் தடுத்து வைத்தல் மற்றும் நாடு கடத்தலுக்கு எதிராக உயர்நீதிமன்ற விண்ணப்பம் மற்றும் தடை உத்தரவு பெற்றுத் தருவதற்கென,
• அனுபவம் வாய்ந்த சட்டத்தரணி குழுவினர் ஆலோசனை பெற, தொடர்பு கொள்ளவும்.
இலவச ஆலோசனை!
Vincent Solicitors
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838

**Science & Mathematics**
- All Ages (KS2, Pre-GCSE, GCSE & A-Level)
- Mathematics, Physics, Chemistry & Biology
- Groups Up to 3 & Individual Lessons
- Home Visits for Students With Disabilities
- Very Affordable Rates per 1 ¼ hours
- We have over 30 years of experience as educators

We are accepting NEW STUDENTS
Please call
Sutharshan or Dr.Gan at 07986 141 604
or email nectar.education@gmail.com
to make an appointment
Location: Raynes Park, minutes from rail station

**இலவச ஆங்கில வகுப்புக்கள்!!!**
Free English Classes for Women
Does the following apply to you:
- Been in the UK for less than 10 years
- Not a refugee or asylum seeker
- Not in the UK on a student or tourist visa
- Not a European Union or European Economic Community National

56 Tooting High Street First Floor, Tooting, London SW17 0RN, (Entrance on Garratt Terrace)
Tel : 020 8672 4445 Mob : 079 60 327 404

**SELVA SALOON**
- Hair cuts, Hair Tints, Hair Styles, Hair Highlights, Hair Perms, Hair Straightening, Hair Rebounding, Hair Ironing
- Facial, Face Bleaching, Face Cleaning, Eye Brow Plucking & Head Massage

( திறந்திருக்கும் நேரம் 9.00am to 8.00pm)
No. 1 Waston Avenue, Est Ham, London, E6 2AJ.
Tel: 02084724017 / Mob: 07931269203

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Citizenship Test முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

### Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 190 .00 மட்டுமே

(பரீட்சைக் கட்டணம் உட்பட)

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261 www.prime citizenshiptest.co.uk

**North London Branch**
104 Millennium Business Centre Humber Road, Staple Corner, NW2 6DW

**Prime citizenship Test**
unit 28, unix House, Abbe Road, Park Royal, London, NW10 7TR

**Head Office**
14 Lombard Business Park, 2 Purely Way, Croydon CR0 3JP.

## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் தமிழ் உறவுகளுக்கு ஓர் இனிய செய்தி..!
விடுமுறையைப் பயனுள்ளதாக்க ஓர் அரிய சந்தர்ப்பம்.!

MATHS
ENGLISH
SCIENCE
£10 per subject

எதிர்வரும் அரைத் தவணையை முன்னிட்டு GCSE பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப் படுத்துவதற்காக விஷேட கருத்தரங்கு மற்றும் திறன் விருத்தி வகுப்புகள் நடைபெறவுள்ளது

காலம்: 24/10(திங்கள்) முதல் - 29/10 (சனி) வரை

திங்கள்-வெள்ளி மாலை 4 முதல் 7 மணி வரை

சனி 9 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

பதிவுகளுக்கு முந்தவும்

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

பிரதி ஞாயிறு தோறும்

- தொடர்புகளுக்கு -
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ

## M&K MALIKS & KHAN SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease.

**FAMILY LAW**
Divorce, Child Contact Orders, Injunction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

## SPICELAND

பசித்திடும்போதே புசித்திட நாடுங்கள்.

*Tamil food Restuarant and Takeaway Fully Licenced & Air Conditioned*



212 London Road, Croydon, Surrey, CR0 2TE
Tel: 020 8667 1700 / 020 8649 8895
Mob: 07984 038 757

## ELLALAN SUPER MARKET



- Off Licence
- மீன் வகைகள்
- பலசரக்கு வகைகள்
- இறைச்சி வகைகள்
- இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்!!
020 8681 7485
Group of Spice Land
234-236, London Road, Croydon CR0 2TF

## UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

## INTELLIGENT DEBT MANAGEMENT

எங்கள் சேவையும்
உங்கள் தேவையும்
இணைந்தால்......
உங்களுக்கு என்நாளும்
நன்நாள் தான்!!



உங்கள் கடன் சுமைகளை இன்றே அகற்றுங்கள்!

எம்மை அணுகி உங்கள் பிரச்சினைகளைச் சொல்லுங்கள்............

1. கடன் வழங்கிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகள் மற்றும் கடிதங்கள் என்பவற்றை நாம் கையாள்கிறோம்.
2. உங்களுக்கு கடன் வழங்கிய நிறுவனங்களிற்கான மாதாந்தக் கட்டுப்பணத்தை தனித்தனியாக கட்டாது ஒரு மாதாந்த கட்டணம் மூலம் அனைத்து நிறுவனங்களிற்கும் சென்றடையச் செய்தல்.
3. மேலும் மேலும் கடனுக்கான வட்டி அறவிடப்படாமல் தடுக்க முயற்சித்தல்
4. Bankruptcy என்னும் வங்குறோத்து நிலையை அடைய முதல் சரியான பரிகாரம் காணுதல்.
5. கடன் தந்த நிறுவனங்களுடன் ஆலோசனை செய்ய மூலக்கடனில் ஒரு பகுதியை மட்டும் செலுத்தி முழுக்கனையும் நிவர்த்தி செய்தல்.

நீங்கள் எங்கிருந்தாலும் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

Personal Loans, Student Loan, Bank O/D, Credit Cards, Store Cards போன்ற கடன்களை கையாள்கிறோம்.

Office: 17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
020 8459 5812
Sivakumar 075 8874 5506
Muralee 079 0321 7854

Email:info@intelligentdebtmanagement.com Website:www.intelligent-debtmanagement.co.uk

UK COOL


# பூராயம்




## அடுக்கு வசனங்களா முக்கியம்?

விஷயத்துத் தகுந்த முக்கியத்துவம் கொடாது அடுக்கு வசனங்கள் எழுதும் தரங்கெட்ட கூட்டம். ரி ராஜேந்தரின் வாரிசுகளா? அடுக்குமொழி 'பறிபோகும்... துணைபோகும்..' மிகுதியாக உள்ள காணி முக்கியம் இல்லையா? அந்த 500 மெகவாட்ஸ் மின்சாரம் முக்கியம் இல்லையா? அடுக்கு வசனம் எழுதியவருக்கு 500 மெகாவாட்ஸ் என்றால் அதன் அளவு புரியுமா?

*மாதவன்*

## அவர்களை பி.ரி.எப் வெளியேற்றியுள்ளதா?

அண்மையில் ஜீரிவியில் தோன்றி தாங்கள் மாவீரர்நாளின் உபயகாரர்கள் எனக் கூறிய திரு. சுகந்தகுமாரன், திரு. சுப்பிரமணியம் ஸ்கந்த தேவா ஆகியோரை பி.ரி.எப். வெளியேற்றியுள்ளதாக வெளியில் கதை அடிபடுகிறது இதுவிடயமாக பிரிஎப் அறிக்கை எதனையும் விடவில்லை. ஆகவே . உண்மையா?

*நிர்மலன்*

## யார் இந்தத் தாமரா?

எங்கள் குலத்தின் நாயகமோ குணத்தின் நாயகமோ, தற்போதைய இலங்கையின் நிரந்தரத் தூதுவராக ஐ நாவில் அமர்ந்திருப்பவர். இடம் பெயர்ந்து மேல் நாட்டில் இருந்து எமக்கு ஆதரவாகப்பல கட்டுரைகள் எழுதினவவாமே. இன்று யார் கண்ணூறோ, யார் வழி நடத்தலோ கடவுள் (காசு) பாசமோ எங்களுக்கு எதிராக இந்தத் துள்ளுத் துள்ளுகிறார். இதை நாம் யாரிடம் சொல்லி அழ?

*சிவராசா.*

## லால் அங்கிள்

சுபேஸ் எழுதிய லால் அங்கிள் சிறுகதை நன்றாகவும் பல செய்திகளைக் கூறுவதாகவும் அமைந்திருந்தது. அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கீறேன்.

*சீலன்*

## ஜிலேபி சாமியார் எங்கிருக்கிறார்?

இந்தியாவிலிருந்து ஜிலேபி சாமியார் என்ற ஒருவர் இங்கு வந்து பலரது துன்பங்களை தீர்த்து வருவதாக அறிகிறேன். பெயர் என்னவோ தின்பண்டம் மாதிரி இருப்பதனால் நான் சரியாகப்பெயரை உச்சரிக்கிறேனோ தெரியவில்லை. தயவு செய்து யாராவது இந்தச் சாமியாரின் விபரங்களை தெரியப்படுத்த முடியமா. நான் இந்த விபரங்களை ஹோம் ஒபிசுக்கு கொடுக்கமாட்டேடன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

*-பஞ்சலிங்கம்*

## பிரிந்து நின்று அகவணக்கம் செய்வோம்.

எம் தாயகத்தின் விடுதலைக்காய் இன்னுயர்களையே அர்ப்பணித்த தெய்வங்களுக்கு ஒருங்கிணைந்து அகவணக்கம் செலுத்தவே முடியாத கூட்டமா எம் தமிழ் ம(ா)க்கள் கூட்டம். பரவாயில்லை ஒருங்கிணைந்து சண்டையிடுவதைவிட பிரிந்து நின்று அமைதியாக அக வணக்கம் செலுத்துவோம். மாவீரர்கள் எம் அமைதி வணக்கம் கண்டு பூரிக்கட்டும்.

*கௌரிமைந்தன்*

## கோயில்

கோயிலை வியாபாரமாக்கும் முயற்சி பற்றிப் பார்த்தேன். ஏய்க்கிற கூட்டம் ஏய்க்கத்தான் செய்யும். காசை அடிப்பது வேறு அதை விரயமாக்குகின்றது வேறு. காசை விரயமாக்குவது தங்கள் அந்தஸ்தைக் காப்பாற்ற. அப்போ அம்மனைக் காப்பாற்ற பக்தர்கள்தான் படையெடுத்து ஏதாவது செய்யவேண்டும்.

*தேவிகா*

## யாரையும் அவமதிக்காதீர்கள்

கோவில்களையும் ஆன்மீகப்பணிகளில் ஈடுபட்டவர்களை கேலி பண்ணுவதன் மூலம் ஏற்படும் சிற்றின்பத்திற்காக அவர்களது பணியை அவமதிக்காதீர்கள். சில தவறுகளை அவர்கள் விட்டிருக்கக் கூடும் அதற்காக நீண்டதூர நலனைக் கவனத்தில் எடுத்து அவர்களை அவமதிக்கும் கட்டுரைகளை பிரசுரிக்காதீர்கள்.

*கயல்விழி*

## ஒரு பார்வை!!!

எம் கையில் தற்போது ஒரு பேப்பர்-155 இதழ் உண்டு எட்டு வருடமாக இதை வெற்றிகரமாக நடத்தியவர்கள், வாழ்த்தப்பட வேண்டியவர்கள். விளம்பரத்தையே நம்பி, மனச் சோர்வோ, தளர்வோ இல்லாமல் தேவையை உணர்ந்து. இன்னல்களைப் பொருட்படுத்தாது செயல் பட்டவர்கள் தான். இந்த, அவர்களின் செல்லப் பேச்சில் கூறும் ஒரு பேப்பர் காரன்கள்+காரிகளுக்கு எங்கள் வாழ்த்துக்கள் என்றென்றும் உண்டு.....

*நமசிவாயம் அகிலன்*

## நன்றிகள்........

முள்ளிவாய்க்காலுக்குப் பின் எல்லாம் முடிந்து விட்டது என்று தோல்வி மனத்துடன் இருந்தவருக்கு சரியான நியாயங்கள் விளக்கங்கள் மூலம் இந்த ஒரு பேப்பர் சரியான திசையைக்காட்டி புத்துயிர் கொடுத்து எழுச்சியைப் புதுப்பித்ததற்கு என் மனமார்ந்த நன்றிகள்.

*துர்க்கா*

## வேண்டுகோள்!

எங்கும் பண நெருக்கடி வேலை இல்லாப் பிரச்சினை, வியாபாரம் வீழ்ச்சி என்ற கதைகள் தான். இதற்குள் ஒரு ஒரு பேப்பர் ஐ வெளிக்கொணர்வது எவ்வளவு சிரமம் என்று நாம் எப்போதாவது சிந்தித்திருக்கின்றோமா? எம் வியாபார நண்பர்கள் தான் ஒரு பேப்பர் வெளி வருவதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

*நாதன்*

## காலை முறித்துவிட்டு வாடா..!

தாயகத்தில் நடந்த போரில் விரல்களை இழந்த ஒரு இளைஞர் இங்கு வந்துள்ளார். அவர் தனது அகதித் தஞ்சம் கோருவதற்காக லண்டனிலுள்ள தமிழ் சொலிசிற்றரிடம் சென்றாராம். அவரது கதையைக் கேட்ட சொலிசிற்றர் விரல்போனதுக்கு எல்லாம் அசைலம் தரமாட்டார்கள் போய் கையைக் காலை முறித்துவிட்டு வா என ஆலோசனை செய்தாரம்.

இதனைநான் நண்பருக்குச் சொல்ல அவர் சொன்னார் இதிலென்ன புதினம் இருக்குது, இங்குள்ள தமிழ் பெண் சொலிசிற்றர் ஒருவர் தன்னிடம் வருபவர்களுக்கு தானே சித்திரவதை அடையாளங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறார் தெரியுமா என்றார். ஆண்டவா இதுகள் எல்லாம் உண் மையில் நடக்கிறதா? நினைக்கவே தலை சுத்துகிறது!

*சுரேன் (தொலைபேசி வாயிலாக)*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் நீங்கள் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

# அருந்ததி... அருந்ததீ...



ஒரு பேப்பர் 154ல் பக்கம் 19இல் பிரசுரிக்கப்பட்டிருந்த வீணை அரங்கேற்றம் ஒன்றினைப் பற்றிய செய்தியில், 'இலண்டன் இசைப்பிரியர்களுக்கு ஷாமினியின் குரு அருந்ததி காண்பித்த 'அருந்ததி' நட்சத்திரம் ஷாமினி என்றே கூறிவிடலாம்' எனக் குறிப்பிடப்படுள்ளது. இதை எழுதியவர் அருந்ததி என்ற ஆசிரியை புகழ்வதற்காக இவ்வாறு எழுதியிருக்கலாம், ஆனால் அருந்ததி நட்சத்திரத்தைப் பற்றி அறிந்தவர்களுக்கு, இது ஒரு அதிகப் பிரசங்கத்தனமான பொருத்தமற்ற கருத்து என்பது புரிந்திருக்கும்..

'அருந்ததி' நட்சத்திரம் என்பது திருமண வைபவங்களில் மணமக்களுக்கு ஐயரால் காட்ப்படுவது என்பது பலருக்கும் தெரியும். காட்டுகின்ற ஐயரோ, அல்லது அவரால் காட்டப்பட்ட மணமக்களோ இந்நட்சத்திரத்தை ஒரு போதும் கண்டதில்லை என்பதும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இருந்தாலும், இந்து மத நம்பிக்கையின் படி, அருந்ததி நட்சத்திரம் என்படுவது இரண்டு நட்சத்திரங்களின் சோடி. இவ்விரு நடசத்திரங்களும் ஒன்றை ஒன்று சுற்றி வருகிறது. இந்நட்சத்திரங்களைப்போல் மணமக்களும் இணைபிரியாது ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழவேண்டும் என்பதுதான இதன் தத்துவ விளக்கமாக அமைகிறது.

வானத்தின் வடதிசையில் கூட்டமாகக் காணப்படும் ஏழு நட்சத்திரங்கள் கொண்ட தொகுதியை இந்துக்கள் சப்தரிசி மண்டலம் எனக்குறிப்பிட்டு அவற்றுக்கு புராணக்கதைகளில் வரும் ரிசிக்களின் பெயரினைச் சூட்டியுள்ளார்கள். அவற்றுள் ஒன்றுதான் அருந்ததி அதன் அருகில் இருக்கும்' நட்ச்சத்திரம் வசிட்டர் என பெயரிடப்பட்டுள்ளது. பிரம்மரிசி வசிட்டரும், தேவலோக அழகி அருந்ததியும் இணைபிரியாது வாழ்ந்தார்களாம். மற்றய தேவலோக அழகிகளான ரம்பை ஊர்வசி போன்றோர் தேவேந்திரனின் காம வலையில் விழுந்தது போல் அருந்ததி வழி தவறவில்லை என்றும் கூறப்படுகிறது. அதனால் அழகி அருந்ததி ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறார். இவையெல்லாம் வெறும் கட்டுக்கதைகளாக் கூட இருக்கலாம், ஆனால் இவ்வாறான நட்சத்திரச் சோடி ஒன்று இருப்பது பிற்காலத்தில் வானமண்டல ஆராய்ச்சியாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மிசார் (Mizar) - அல்கோர் (Alcor) என அழைக்கப்படும் இரண்டு இரட்டை நட்சத்திரக் கூட்டு இருப்பதாக வானமண்ட ஆராச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இச்சொற்கள் அரேபிய இலக்கியங்களிலிருந்து எடுக்கப்ட்டவை. ஜப்பானியர்கள் அல்கோர் நட்சத்திரத்தை jumyoubosh என அழைக்கிறார்கள். ஆகவே இது கீழைத்தேசங்களில் ஏற்கனவே கண்டறியப்பட்ட ஒன்றாக இருந்துள்ளமையைக் அறியக்கூடியதாக உள்ளது.

இப்பொழுது சொல்லுங்கள் ஆசிரியை ஒருவர் தனது மாணவியை திறமையானவராக உருவாக்கினால் அதனை அவர் கண்டுபிடித்த 'அருந்ததி' நட்சத்திரம் என்று கூறுவதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?

இது மட்டுமல்ல, 'வரலாற்றுப் பதிவாக நடந்த நிகழ்வு', 'பொன்னெழுத்துக்களால் பொறிக்கபடவேண்டியது' போன்ற சொற்களை பொருத்தமான இடங்களில் பாவிக்காமல் சாதாரணமாக விடயங்களில் பாவிக்கும் போது அதன் முக்கியத்துவம் இழந்துவிடுவது கவலைக்குரியது,

*இராகினி*




TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400



Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
➡International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test

• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

National Centres

| BIRMINGHAM | SHEFFIELD | LEICESTER |
| --- | --- | --- |
| 7 Washington Street, Birmingham, B1 1IR, 01216339919 | Sorby House, 42 Spital Hill, Sheffield, S4 7LG, 01143034303 | Imperial House, St Nicholas Circle, Leicester, LE1 4LF, 01163260248 |
| LUTON | SLOUGH | NEWCASTLE |
| 169 A, Dunstable Road, Luton, Beds – LU1 1BW, 01582723123 | 18-24 Stoke Road, Slough, Berkshire, SL2 5AG, 01753722056 | 51-52 Victoria Avenue, Whitley Bay, Tyne & Wear, Newcastle Upon Tyne – NE26 2BA, 01912525265 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, OCTOBER 07, 2011, ISSUE 155

## தமது குடிமக்கள் விடயத்தில் பிரித்தானிய அரசின் பாராமுகம்

பிரித்தானிய குடியுரிமை பெற்ற ஐந்து தமிழர்கள் சிறிலங்காவின் சிறைகளில் நீதி விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சுக்கு நெருக்கமானவர்களினால் வெளியிடப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களுள் ஒருவர் இவ்வருடம் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட திருமதி. வாசுகி கருணாநிதி என்ற இரண்டு பிள்ளைகளின் தாயார். மேற்கு லண்டன் பகுதியை வதிவிடமாகக் கொண்ட திருமதி. கருணாநிதி இதுவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

சிறிலங்காவின் அதிமோசமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில், வழமையான நீதிக்குப் புறம்பான வகையில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றபோதிலும், தண்டனைக்குரிய எந்தவொரு குற்றச்சாட்டும் இவர்கள் மீது சுமத்தப்பட்டாதகத் தெரியவில்லை. திருமதி. கருணாநிதியின் கைது விடயமாக பிரித்தானிய வெளியுறவுத்துறை பணியகத்துடன் ஒரு பேப்பர் தொடர்பு கொண்டபோது, அவர்களிடமிருந்து விபரங்கள் எதனையும் அறிய முடியவில்லை. ஆனால் அவரை விடுவிப்பது தொடர்பில் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

தடுத்து வைக்கப்படடுள்ளவர்கள் விடயத்தில், சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களது உறவினர்கள் அச்சப்படுகிறார்கள். அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள், உயிரச்சுறுத்தலுக்கு உள்ளாவர்கள், மற்றும் அவர்களது விடுதலை மேலும் தாமதிக்கப்படும் போன்ற காரணங்களுக்காக இவ்விடயத்தை இரகசியமான முறையில் வைத்திருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். சிறிலங்கா அரசாங்கத்தின் கடந்த கால நடவடிக்கைகளை நோக்குமிடத்து இவ்வாறான அச்சம் நியாயமானதாகவே உள்ளது.

இந்நிலையில் தடுத்துவைத்திருப்பவர்களை விடுவிக்க அவர்களுக்கு நெருக்கமானவர்கள் சட்டத்திற்கு புறம்பான வழிகளில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனை வாய்ப்பாக பயன்படுத்தி, சிறிலங்காவின் அதிகாரிகளும், அவர்களுடன் இணைந்து செயற்படும் 'தலையாட்டிகளும்', வெளிநாட்டில் உள்ள சில தமிழ் முகவர்களும் பணமீட்டி வருகிறார்கள்.

இவ்விடயத்தில் தமது இராசதந்திர வழிமுறைகளினூடாக அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய நிலையில் உள்ள பிரித்தானிய வெளியிறவுத்துறை மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பது இங்கு வாழும் தமிழர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இரண்டு மூண்டு பேப்பருக்கு முன்னம் சொன்ன மாதிரி எங்கடை இணையதளம், மூஞ்சிப்புத்தகம், ருவிற்றர்குருவி எல்லாம் இப்போ தவறாமல் இற்றைப்படுத்தப்படுகிறது. (அப்டேற் பண்ணுறதுக்கு இதுதான் தமிழ்).ஆனபடியாலை அதுகள் மூலமாயும் உங்கடை கருத்துகளை அனுப்பலாம். ஆனால் பாருங்கோ லொள்ளு விடுறதுக்குளங்கடை மூஞ்சிப் புத்தகத்தை பாவிச்சு போடாதேங்கோ. ஏற்கனவே இளசுகளை வீட்டிலை வச்சிருக்கிற தாய்மார் எங்களிலை கடுப்பாய் இருக்கினம். எங்களை வம்பிலை மாட்டாமல் உங்கடை கருத்துகளை நல்லமாதிரி பதியுங்கோ.அதுகளின்ரை முகவரி இதுதான் www.facebook.com/orupaper ருவிற்றர் குருவியின்ரை orupaper.*

***ஒரு பேப்பர்** லை சோதிடம் போட்டால் இன்னும் கூட ஆக்கள் வாசிப்பினம் எண்டு ஒரு பெரியாள்சொன்னார். நாங்களும் அது சரியோ எண்டு இங்கையிருக்கிற ஒண்டு இரண்டு சாத்திரிமாரிட்டை (எங்கடை ஆஸ்தான 'சாத்திரி 'ஐ தவிர) கேட்டிட்டம் அவையள் ஒருதரும் உடன்படுகினம் இல்லை. அதுக்கு அவர்கள் சொல்லிற காரணம், நாங்கள் சாத்திர விசயங்களை போட்டால் சனம் பேப்பர் படிக்காமல் விட்டுவிடும் பிறகு தாங்கள் விளம்பர போடமாட்டினமாம். இதுவிசயமாய் நீங்கள் என்ன நினைக்கிறியள்.*

*எங்கடை பத்தி எழுத்தாளர் இதயச்சந்திரன் அண்ணன், வ.கணேஸ் அண்ணன் ஆகியோர் சுகயீனம் காரணமாக இந்தமுறை எழுதவில்லை, அடுத்த முறை எழுதுகிற தாய் சொல்லியிருக்கினம். இவை இரண்டுபேரும் கெதியிலை சுகமடையவேணும். மட்டைக்கிளப்பான் ஒரு பயணம் போன படியாலை அவரும் இந்த முறை 'அலசுவாரம்' எழுதேல்லை.*

*நொவெம்பர் மாதத்திலை வாற இரண்டு பேப்பரும் மாவீரர் சிறப்பிதழ்களாக வெளியிட விரும்புகிறோம், உங்களது ஆக்கங்களை வேளைக்கே அனுப்பி வையுங்கோ!*

*அஞ்சாம்ப பக்கதிலை இருக்கிற எங்களுக்கு உறுதுணையாகவிருப்பவர்கள் பட்டியல் அப்பிடியே நிண்டுட்டுது.அதை நீட்டிறது உங்கடை நீண்ட கைகளினாலை முடியும். அதையும் ஒருக்கால் தயவு செய்து கவனத்தலை எடுங்கோ.*

*வேறை என்ன?*

*மீண்டும் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# The death penalty in India Fatally flawed



ARPUTHAM AMMAL, a pensioner with curly silver hair and a wheezing cough, is an abolitionist. Perched in a gloomy warehouse in Chennai, capital of Tamil Nadu, as young men bustle over an exhibition against the death penalty, she explains why. "It is not needed. The ultimate victims of the death sentence are the backward, the minorities and the weak."

*She has another reason for her opposition:* in a few weeks a hangman is due to slip a noose around her son's neck. Known as Perarivalan, he was convicted with 25 others of killing Rajiv Gandhi in 1991. Judges ruled that he supplied a battery for the suicide bomber who blew up the former prime minister. Yet for over a decade he has languished in jail awaiting a response to his plea for mercy. In August President Pratibha Patil rejected the plea, and those of two co-conspirators.

The three were to be hanged on September 9th. But a local court issued a further stay, ironically to decide if the years of delay, largely in solitary confinement, were a cause for commutation. Delays are universal in India; 16 similar pleas are now before the president. Of 300 people on death row, many have waited for years. The lawyer for an Assamese murderer says of these repeated, last-minute postponements: "You are virtually killing him every day."

India has imposed a near-moratorium on capital punishment since the Supreme Court ordered in 1983 that it be used only for the "rarest of rare" cases. Only one convict has been hanged since 1995. (The neighbours, too, have grown shy of the noose, resulting in crowded death rows: 357 await execution in Sri Lanka, 400 in Bangladesh and some 8,000 in Pakistan.) The news that Gandhi's assassins would hang spread consternation, especially in Tamil Nadu where resentment of the distant, northern rulers in Delhi is palpable.

> The state assembly also voted unanimously against them. Activists talk of spreading opposition. A prominent politician, Vaiko, roars in his office that the hangings would be a "betrayal of the Tamils", and would provoke popular fury.

Locals grumble that India does nothing for their fellow Tamils in near by Sri Lanka, who are seen as victims of an ethnic assault by the Sinhalese-run government. Now Tamils have another cause. On August 28th a woman in Tamil Nadu burned herself to death to protest against the imminent hangings. The state assembly also voted unanimously against them. Activists talk of spreading opposition. A prominent politician, Vaiko, roars in his office that the hangings would be a "betrayal of the Tamils", and would provoke popular fury.

Few doubt that the three now facing execution were involved at a lowish level in Rajiv Gandhi's murder. But serious questions persist over the investigation and trial, carried out under a now-defunct anti-terrorist law. The convictions rested on confessions, later retracted, that were beaten out of the suspects by the police.

A retired police inspector, Mohan Raj, also wants the hangings called off. He says ruefully that he would testify that he assaulted the condemned to make them talk. Mrs Ammal's son, Perarivalan, was "beaten blue-black" he admits. "What do you expect? The country's leader was blown faceless. We were all very furious against these fellows." The convicts call this torture. Perarivalan, who was 19 at the time, has written of how Mr Raj and others attacked him with plastic pipes filled with concrete, kicked and punched him, denied him sleep and water, put him in agonising positions and stuck pins into his fingernails until he signed statements of guilt.

With such abuses widespread in Indian custody, retired judges and others are now campaigning for outright abolition of the death penalty. The risk of hanging an innocent person is too great, they say. At the same time, the rarity of execution means it is no deterrent. K.T. Thomas, who presided over the Supreme Court that upheld the death penalty in the Gandhi case, now calls its use "inhuman" and merely "vengeful".

> Locals grumble that India does nothing for their fellow Tamils in nearby Sri Lanka, who are seen as victims of an ethnic assault by the Sinhalese-run government.

Yet the ruling Congress party may conclude otherwise. Taking the death penalty off the books might encourage more police to serve as illegal executioners, in a practice known as staging "fake encounters": shooting suspects dead and claiming afterwards there had been a firefight. Hanging may be unpopular abroad, or blocked by courts or regional politicians sensitive to local feelings. But it can still secure a populist boost from voters, especially those angered by official failures to prevent terrorist attacks. A big test will be the fate of a Pakistani prisoner, Ajmal Kasab, who is the sole surviving attacker from the November 2008 assault on Mumbai that killed some 170. Last year he was sentenced to death four times over. It will be a brave Indian who demands that he be spared.

*(Courtesy: The Economist)*

# கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும்.

## — தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடும் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான நவசமசாஜக்கட்சிக்கும் ஆதரவு வழங்குமாறு தமிழ்தேசியத்திற்கான மக்கள் முன்னணி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது ஆதரவினை வெளிப்படையாக தெரிவிக்காத நிலையில் அதில் அங்கம் வகிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இதே கருத்தை வெளிட்டுள்ளார்கள். எனினும் கட்சியில் தீரமானம் எடுக்கும் நிலையில் உள்ள சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் தமது நிலைப்பாட்டை வெளயிடவில்லை. மனோ கணேசனை வெளிப்படையாக ஆதரிப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி வாய்ப்பை பாதித்து விடக்கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியக் கூடிதாகவுள்ளது.

*தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணயின் அறிக்கையின் சுரக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.*

தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு தொடர்ந்து வரும் இன அழிப்பு விவகாரம் இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ள சூழலில் தமிழ்த்தேசிய அரசியலை உலகரீதியாக வலுப்படுத்த வேண்டிய கடைமைப்பாடு தமிழ் மக்கள் அனைவருக்கும் உள்ளது. புலம் பெயர் தமிழ் மக்கள், தமிழ்நாட்டு தமிழ் மக்கள் உட்பட உலகில் வாழும் சகல தமிழ் மக்களும் இப்பணியில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். எல்லாச்சந்தர்ப்பங்களிலும் தாம் ஒரு தனித்துவமான அரசியல் சமூகம் என்பதையும் நிரூபித்து வருகின்றனர். அந்த வகையில் அவர்கள் தேர்தல்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.

கனடாவில் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை நாம் எல்லோரும் அறிந்ததே. நோர்வே, இலண்டன், பிரான்ஸ் ஆகிய புலம் பெயர் நாடுகளிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களது வெற்றி தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்து வருகின்றது.

தமிழ் நாட்டு அரசியல் நிலைமையும் தமிழீழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மாறிவருவதனையும் நாம் அறிவோம். மூவரது தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்குமளவுக்கு தமிழக மக்கள் தமது இன ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழ் மக்களது ஒற்றுமையான செயற்பாடுகள் இன்று தமிழ் மக்களது ஜனநாயகக் குரலை வலுப்படுத்தி வருகின்றது.

எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இன அடையாளத்தின் கீழ் தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து வருகின்றனர். இந்த ஒருங்கிணைவைக் காட்டுவதில் இராணுவ நெருக்குவாரங்களுக்குள் வாழும் தாயக மக்களும் பின்னிற்கவில்லை. நடந்து முடிந்த தேர்தல்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கும் தாம் தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுக் கொண்ட ஒரு கட்டுறுதியான அரசியல் சமூகம் என்பதை வெளிக்காட்ட வேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது. இதற்கான ஒரு சந்தர்ப்பம் நடைபெறவிருக்கின்ற மாநகரசபைத் தேர்தல் மூலம் கிடைத்திருக்கின்றது. இதனை சரியாகப் பயன்படுத்த கொழும்புத் தமிழ் மக்கள் தவறக்கூடாது. தமிழ்த் தேசியத்தினை வலுப்படுத்துவதற்காகவும் இன ஒருமைப்பாட்டை பேணுவதற்காகவும் செயற்படுகின்ற கட்சி மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியாகும். இக்கட்சிக்கு கூட்டாக வாக்களிப்பதன் மூலம் மட்டுமே கொழும்புத் தமிழ்மக்கள் தங்களது அரசியல் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த முடியும்.

மனோகணேசன் அவர்களும் அவருடன் அணிசேர்ந்துள்ள விக்கிரமபாகு கருணாரட்ண அவர்களும் தமிழ்த் தேசம் தனித்துவமான இறைமை கொண்டது என்பதனையும், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனையும் வெளிப்படையாக ஆதரிக்கும் துணிச்சலான அரசியல் தலைவர்கள். இவர்கள் இருவரும் எந்தவொரு பேரினவாதக் கட்சிகளின் செல்வாக்கிற்கும் உட்படாத நேர்மையான தலைவர்கள்.

இவர்களுடைய ஆழமான தர்க்கரீதியான, துணிச்சலான கருத்துக்களும், அவைதொடர்பான செயற்பாடுகளும் தமிழ்த்தேசிய அரசியலை வலுப்படுத்துவதற்கு அதிகளவில் உதவியிருக்கின்றன. ஆபத்துக்கள் தம்மை நோக்கி வந்த காலத்திலும் துணிச்சல்களை வெளிக்காட்ட அவர்கள் தயங்கியதில்லை. துணிச்சலான இந்த அரசியல் தலைவர்களையும் அவர்களது கட்சியையும் மேலும் பலப்படுத்த வேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும்.

தமிழ்த்தேசிய அரசியல் என வருகின்றபோது இரட்டை வேடங்களுக்கு ஒருபோதும் இடமிருக்கக் கூடாது. புதுடில்லி மாநாட்டிலும், அரசுடனான பேச்சுவார்த்தைகளிலும் இரட்டை வேடம் காட்டியவர்கள் இன்று கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலும் இரட்டை வேடம் காட்டுகின்றனர். இது தமிழ்த் தேசத்தின் இருப்பை அழிக்கும் செயற்பாடாகும்.

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் இரண்டு லட்சம் வரையான தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் ஒருங்கிணைந்து வாக்களிப்பார்களானால் அது வழங்கும் செய்தி தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு புதிய பரிமாணத்தை கொடுக்கும் என்பதை கொழும்புத் தமிழ் மக்கள் மறக்கக்கூடாது. ஏனெனில் இத் தேர்தலை வெறும் மாநகரசபைத் தேர்தலாக சர்வதேச சமூகம் பார்க்கவில்லை மாறாக தமிழ்த்தேசியத்தோடு கொழும்புத் தமிழ் மக்கள் இருக்கின்றார்களா? என்பதை அளவிடும் ஒரு கருத்துக்கணிப்பாகவே நோக்குவார்கள்.

# Sri Lanka Lies and the World Pretends to Listen!

**By: Nadarajah Balasubramaniam (PFLT)**

"When one lies, one should lie big,and stick to it," wrote Joseph Goebbels,Germany's Reich minister of propa ganda, in 1941.

The much awaited UNHRC September 2011 sessions began recently with the Eelam Tamils expectantly looking forward to some tangible progress in addressing the excesses of the genocide trauma that the Rajapakses inflicted on them. Unlike in the Colombo/Delhi pressured May 2009 sessions, the UNHRC membership this time around has overwhelming evidence of the Rajapakse genocide crimes, thanks to Wiki-leaks (more and more incriminating leaks are surfacing), the UN 'expert panel' report , the epic Channel4 'Killing Fields' and the Headlines Today documentaries and a re-nourished and balanced world-wide media coverage.

The Rajapaksa regime think they are too intelligent to use the geopolitical equations in South Asia, and could manipulate to win the support of China, Pakistan or other countries including Russia, so that India could be pressurised. President Rajapaksa's second visit to China within a year, is a near ideal gauge of the desperation the alleged criminals are faced with!

India also feels guilty and the guiltiness haunts India. So India succumbs to a blackmail or pressure exerted by Rajapaksa government. Delhi has reasons to fear most that its reputation will be tattered shouldthe SL genocide crimes go before the international tribunals.

Further, India's support to the UNH-CR motion in May 2009 against the war crimes and gross HR violation investigations makes it an altogether ugly situation for international laws of war and human rights under the UN Charter. A darling intellectual, a well known personality, a Sri Lankan diplomat who campaigned amongst these so-called anti-west countries that the war on the Tamil people was an 'anti-imperialist struggle' - his counter parts in the west did a campaign that the war on the Tamil people, was a 'war on terror'. The solid evidence of war-crimes and barbaric acts of unprecedented brutality as was made clear in the Channel-4's will make it difficult to nations including Russia and China to sustain their support for Sri Lanka. After all these are great countries with right vision and brilliant future.

The broadcast of the documentary 'Sri Lanka's Killing Fields' by Channel-4, now being shown all over the caring world, is seen as a harrowing but vital insight into the truth of the final stages of the genocidal war in Sri Lanka during 2009. It is an outstanding example of investigative journalism that has uncompromisingly presented the horrors that occurred. The documentary's irrefutable evidence of war crimes and crimes against humanity serves as a reminder to all journalists of the responsibility they carry to highlight such atrocities wherever they occur. Cheers to Channel 4! The arguments put forward by the Sri Lanka government are obviously coun terproductive. The hindrance is the covert support given by the partners ingenocide, India, the UK and USA.

During the UNHRC session, the US Ambassador Patricia A. Butenis was seen in Vanni counting drumsticks and feeling ladies fingers while US Assistant Secretary of State, Robert O Blake's visit to Jaffna and his attempt to meet with civil society representatives, including student representatives of the University of Jaffna and recommending the recruitment of Tamils as policeman, and then President Rajapakse mentioning it in his UN speech, all looked like comic opera. The timing of these exercise and the coordinated efforts are all to hood wink the world. But how long?

India, UK & USA, already 'with skeleton in cupboard' are now busy trying the second or the follow up genocide, genocide of Tamils by other means. USA India relationship is unambiguous and undisguised while the UK India relation is detrimental and perilous. The Diaspora Tamils are to be ever alert and smart. Rajiv Gandhi's Indian cargo planes invaded our air space for the infamous "parippu" drop, while the Sonia's Congress governments military helicopters painted in Sri Lankan shades dropped borrowed Thermionic bombs and cluster bombs. If someone wonders how can the Sinhalese Government of Sri Lanka do these atrocities to their minority Tamils; the answer is, " How dare the Tamils could ask for a separatenation? They had to be taught a lesson that they and their children will dare not".

Sonia's Congress, Bush and Blair, and their underlings have specifically created the environment that led to the needless merciless deaths of so many Tamil civilians helping the Sri Lanka government to accelerate the on going genocide against Tamils. They knew very well that it was a war against Tamils and not against LTTE. Today and that day, the cardinal truth is that the LTTE are Tamils and the Tamils are LTTE.

The Tamil Diaspora are expose the war-crimes planned and executed by the Sri Lanka government and its partners in genocide against innocent helpless Tamils. Once the accountability is achieved, and the culpable individuals are brought to justice, then only energies should be focussed on seeking long-term political justice based on the fundamental right to self-determination.

The guilty big powers, the USA, the UK and others must not be encouraged to attempt to use war crimes investigation as a leverage in their attempt to achieve an amicable political solution. Let us rally around our National Flag and logos dipicting our dear Liberation Tiger. Let us jointly follow this great advise. "Establish the facts, and let the facts bear out the truth." is Bertrand Russell's advise for the future generations.If a banana republic like Sri Lanka that carried out a genocide against its minority who were agitating for their basic human rights for more than sixty odd years, in South Asia, is allowed to walk free, what will act as a deterrent for much stronger countries that hold similar intentions towards similar struggles? The Wheels of Justice turns slowly but exceedingly fine.


ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate................ 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
நாதா

விளம்பரம்
சோபனா

அச்சு
தர்சினி (கனடா) - பானு

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
நிவேதா

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information includihg advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# முள்ளி வாய்க்காலுக்கு கப்பல் வரும் போன்ற முட்டாள் ஆக்கும் வேலை

Havana Times என்ற இணைய இதழுக்கு நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் திரு. உருத்திர குமாரன் பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார். அதில் தாம் கியுபா உட்பட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் உறவு கொள்ள விரும்புவதாக குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த ஹவான டைம்ஸ் இணைய ஆசிரியர் கடந்த ஐந்து வருடங்களாக ஒரு Blog வைத்திருக்கின்றார் அதன் பெயர் http://circlesonline.blogspot.com/ அவரது profileஐ ஐந்து வருடத்தில் பார்வை இட்டோர் தொகை என்ன தெரியுமா 5332 மேலே உள்ள இணைப்பில் நீங்களே பார்க்கலாம். ஹவான டைம்ஸ் ஆசிரியர் ரொபின்சன் 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து கியூபாவில் குடியேறி பின்னர் கியூபாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட அமெரிக்கராவார்.

இது கியூபாவுக்கு எதிராக அமெரிக்காவில், அமெரிக்கரால் நடத்தப்படும் ஒரு பத்திரிகை. இந்தப் பத்திரிகைக்கு கியூபாவில் தடை விதிக்கப்படுள்ளது. இப்பொழுது புரிகின்றதா எவ்வளவு தூரம் நாம் முட்டாளாக்கப் படுகின்றோம் என்று. தொடர்ந்து படியுங்கள் சுவாரசியமான விடயம் இது.

வடிவுக்கரசி என்ற அசிங்கமான பெண்போல, தருமர் என்ற பெயரில் உள்ள திருடன் போல, மகாலக்சுமி என்ற பெயரில் உள்ள தரித்திரவதி போல, கண்ணகி என்ற பெயரில் உள்ள விபச்சாரி போல, இந்த ஹவானா டைம்ஸ் ஒன்றும் கியூபாவிலோ, அல்லது ஒரு கியூபனாலோ அல்லது கியூபாவுக்கு ஆதரவாகவோ நடத்தப்படும் பத்திரிகை என நீங்கள் நம்பி இருந்தால் இன்னொரு தடவை ஏமார்ந்தீர்கள் போங்கள் .

இந்த ஹவன ரைம்ஸ் கியூப அரசுக்கு எதிராக, கியூபன் அல்லாத ஒருவராலும் கஸ்ரோ ஆட்சிக்கு எதிரானவர்களாலும், கியூபாவுக்கு வெளியே நடாத்தப்படும் பத்திரிகை. கியுபாவில் உள்ள ஆட்சியை கவிழ்ப்பதற்கும் , கஸ்ரோவைக் கொல்வதற்கும் வேலை செய்பவர்களூடாக கஸ்ரோவினதும் இலத்தீன் அமெரிக்க நாடுகளினதும் ஆதரவைப் பெறப் போகின்றோம் என்ற மாயையை ஹவானா டைம்ஸ் என்ற பேட்டியினூாக திரு உருத்திர குமாரன் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கின்றார்.

சற்றுகோபப்படாமல் நான் சொல்ல வருவதைப் படியுங்கள். கற்பனாவாத கனவுகளால், கப்பல் வரும் என அழிந்த புலம்பெயர் முள்ளிவாய்க்கால் மீண்டும் வந்து விடக் கூடாது என்பதே என் நோக்கம். தெரிந்தோ தெரியாமலோ இது நடக்கின்றது புரிகின்றது. 'ஹவானா டைம்ஸ்' இல் எழுதியதற்காக பதவி பறி போன கியூப பல்கலைக் கழக பேராசிரியர் கதை முதல் ஏராளம் உண்டு .

இந்த பத்திரிகை ஊடாக கியூபாவின் ஆதரவைப் பெற முடியாது. இலத்தீன் அமெரிக்க அரசுகளின் ஆதரவைப் பெற முடியாது ஏனெனில் அவர்கள் அந்த அரசுகளுக்கு எதிரானவர்கள். இது நாடு கடந்த அரசை ஆதரித்துக் கொண்டு, அல்லது விடுதலைப்புலிகளை ஆதரித்துக் கொண்டு சிறீலங்காவை நட்பு நாடாக்க முனையும் செயல் எப்படி இருக்குமோ அதை ஒத்த வியடம்தான் நா.க.அ பிரதமர் அண்மையில் கொடுத்த பேட்டி . கியூபாவினதும், மற்றைய இலத்தீன் அமெரிக்க நாடுகளினதும், உலக நாடுகளினதும் நட்பு எமக்கு அவசியம் .

'எவர் எவரை அணுகுகின்றோமோ அவர் அவரை அவர் அவர் சார்பு முகங்களூடாக அணுகுவதை' தனிப்பட்ட வாழ்வில் கன கச்சிதமாக நடத்த தெரிந்த உருத்திர குமாரன் எப்படி இதில் தவறினார்?

சரி இனி விடயத்துக்கு வருவோம்,

கியூபாவில் பிரபலமான ஹவான ஜெர்னல் என்ற பத்திரிக்கை வேறு ஹவான டைம்ஸ் வேறு Havaana Times கடந்த இரண்டு வருடங்களாக (2009 முதல்) கியூபாவுக்கு வெளியே இருந்து . கியூப ஆட்சியாளர்களுக்கு எதிராக, கியூபர் அல்லாத வெளியாகும் இணையப் பத்திரிகை . பத்திரிகையின், முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி அதன் ஆசிரியரால் 15 Oct 2009 எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து முக்கியமான வரிகளை அப்படியே பிரதி செய்து அதன் பின் தமிழில் தருகின்றேன் - கியூபாவில் வதிவிட அனுமதி மறுக்கப்பட்ட பின் நான் நிக்கசுவாவில் இருந்து எழுதி வருகின்றேன் - கியூபாவில் பத்திரிகை சுதந்திரம் இல்லை, இது போன்ற பத்திரிகையை காஸ்ரோவின் கியூபா ஒரு பொழுதும் அனுமதிக்காது ரால்கஸ்ரோவும் செய்திப் பரிமாற்றத்தை கட்டுப்படுத்தி , செய்தி மக்களை சென்றடைவதை மட்டுப்படுதுபவர்கள் . கியூப அரசு எதனை எழுத வேண்டாம் என்று சொல்வதில்லை ஆனால் அவர்கள் கைது செய்து விடுவார்கள் அவ்வளவு தான்.

## இது கியூபாவுக்கு எதிராக அமெரிக்காவில், அமெரிக்கரால் நடத்தப்படும் ஒரு பத்திரிகை. இந்தப் பத்திரிகைக்கு கியூபாவில் தடை விதிக்கப்படுள்ளது. இப்பொழுது புரிகின்றதா எவ்வளவு தூரம் நாம் முட்டாளாக்கப் படுகின்றோம் என்று.

கியூபாவைப்பற்றி இதனை அவதூறுகளை பரப்பும் இணைய உதவியோடு , கியூபாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட அமெரிக்கர் ஒருவர் நடத்தும் இணைய உதவியோடு கியூப உறவு வரும், இலத்தீன் அமெரிக்க உறவு வளரும் என மக்களை ஏமாற்ற துணை போகும்

கியூபா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றின் ஆதரவுக்கு நாம் உலகெங்கிலும் உள்ள புரட்சிகர சக்திகள் ஊடாக செயல்பட வேண்டும் . அமெரிக்க சக்திகள் ஊடாக அல்ல.

*-மௌலி*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## சலிப்படைந்தால் சாதனை இல்லை!

ஒவ்வொரு மகத்தான சாதனைக்குப் பின்னும் கடுமையான, முறையான உழைப்பு இருக்கிறது. சலித்துப் போகாத மனம் இருக்கிறது. இந்த இரண்டும் இல்லாமல் எந்த சிறந்த சாதனையும் நிகழ்ந்து விடுவதில்லை. சாதனைகளைப் பாராட்டுகின்ற மனிதர்கள் சாதித்தவர்களின் திறமைகளைத் தான் பெரும்பாலும் சாதனைகளின் காரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கென சலிக்காமல் உழைத்த உழைப்பை அதிகமாக யாரும் கவனத்தில் கொள்வதில்லை. ஏனென்றால் பரிசுகளும் பாராட்டுகளும் குவியும் போது தான் அவர்களைக் கவனிக்கிறோம். புகழ் சேரும் போது தான் சுற்றி ஒரு கூட்டமும் சேர்கிறது. அந்த ஒரு நிலை வரும் வரையில் அவர்கள் உழைக்கும் போது அவர்கள் தனியர்களே.. அவர்கள் இருப்பதைக் கூட உலகம் அறியாமலேயே இருந்து விடவும் கூடும்.

திறமை மிக முக்கியம். அது தான் முதல் தேவையும் கூட. திறமை இல்லாவிட்டால் உழைப்பு வீண் தான். ஆனால் திறமை இருந்தும் அதற்காக உழைக்காவிட்டால் திறமையும் வீண் தான். இதற்கு எத்தனையோ உதாரணங்களை நாம் நம்மைச் சுற்றியும் பார்க்கலாம். திறமையும் முக்கியம், உழைப்பும் முக்கியம் என்றாலும் எது எந்த அளவு முக்கியம் என்ற கேள்விக்கு விஞ்ஞானி எடிசன் "1% திறமையும் 99% உழைப்பும்" வெற்றிக்குத் தேவை என்கிறார். இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க ஆயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் புரிந்த அவரைக் காட்டிலும் பொருத்தமான வேறு நபர் இருக்க முடியாது என்பதால் அதை வெற்றிக்கான சூத்திரமாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலக வரலாற்றில் இரண்டு துறைகளில் நோபல் பரிசுகள் பெற்றவர்கள் இருவர். அதில் முதலாமவர் மேரி கியூரி அம்மையார்.. இயற்பியல், வேதியியல் என்ற இரண்டு துறைகளில் 1903, 1911 ஆம் ஆண்டுகளில் அவர் நோபல் பரிசுகள் பெற்றார். வேதியியலில் நோபல் பரிசு கிடைக்கக் காரணமாக இருந்த ரேடியத்தைக் கண்டுபிடிக்க அவர் உழைத்த உழைப்பு கொஞ்ச நஞ்சமல்ல. அவருக்கு ஆராய்ச்சிக்கேற்ற வசதிகளை செய்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. குதிரை லயமே அவரது ஆராய்ச்சி சாலையாக அமைக்கப்பட்டது. பொருளை அரைப்பது, கழுவுவது, அடுப்பு மூட்டி சூடாக்குவது போன்ற சில்லறை வேலைகளைச் செய்யக் கூட வேலையாட்கள் இல்லை. அந்த வேலைகளை அவரே தான் செய்தார். கனிமத்தை அரைக்கும் எந்திரத்தைச் செக்குமாடுகள் போல அவரே இழுத்து அரைத்தார். இப்படி ஒரு நாள், இரு நாளில்லை பல ஆண்டு காலம் பல துன்பங்களை ஏற்று உழைத்துத் தான் ரேடியத்தை அவர் கண்டுபிடித்தார்.

இப்படி ஒவ்வொரு உண்மையான உயர்ந்த சாதனையின் பின்னும் பெரும் உழைப்பு இருக்கிறது. வெற்றிக்கான முயற்சிகளில் பல சமயங்களில் செய்ததையே தொடர்ந்து பல காலம் செய்ய வேண்டி இருக்கும். அந்த உழைப்பு சுவாரசியமானதாக இருப்பது மிக அபூர்வம். எடிசன் குறிப்பிட்ட 1% திறமை இருப்பவர்கள் ஏராளம். ஆனால் அந்த 99% உழைப்பு என்று வரும் போது தான் பல திறமையுள்ளவர்கள் பின்வாங்கி விடுகிறார்கள். அவர்களுக்கு தொடர்ந்த ஒரே மாதிரியான உழைப்பில் சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஒருசில முயற்சிகளில் பலன் கிடைத்து விட வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் சாதனை என்பது என்றுமே சாத்தியமில்லை.

தென்னாபிரிக்காவில் பல்லாயிரக்கணக்கான ஆட்கள் சுரங்கத்தைத் தோண்டி வைரத்தை வெட்டி எடுக்கிறார்கள். பல டன் எடையுள்ள மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்தும் போது தான் அதில் சிறிய வைரத்துண்டு கிடைக்கிறது. தோண்டி எடுப்பதில் வைரத்தை விட மண் தான் அதிகமாகக் கிடைக்கிறது என்று சலிப்படைவதில் அர்த்தமில்லை. அப்படிக் கிடைப்பது தான் நியதி.

எனவே நாம் அதை எதிர்பார்த்தே அது போன்ற வேலையில் ஈடுபட வேண்டுமே ஒழிய நமக்கு மட்டும் விதிவிலக்கு வேண்டும் என்ற பேராசையில் முயற்சிகள் மேற்கொண்டால் பெருத்த ஏமாற்றத்தையே அடைய நேரிடும்.

பரிசு வாங்கும் நிகழ்ச்சி போல பயிற்சி செய்யும் நேரங்களும் சுவாரசியமாக இருப்பதில்லை. ஆனால் பெரிய சாதனை புரிந்த அத்தனை பேரின் பயிற்சி நேரங்கள் சாதாரண மக்களின் கற்பனைக்கெட்டாத அளவில் இருக்கின்றன. பலரும் கேளிக்கைகளிலும் பொழுது போக்குகளிலும் ஈடுபட்டிருக்கையிலும், பலரும் உறங்கிக் கொண்டிருக்கையிலும் சாதிக்க நினைப்பவன் தன் சாதனைக்காக விடாமல் உழைக்க வேண்டி இருக்கிறது.

பல நேரங்களில் சாதயைாளர்கள் சாதகைளைச் செய்வதைப் பார்க்கையில் அவர்கள் அலட்டிக் கொள்ளாமல், சிறிதும் கஷ்டப்படாமல், அனாயாசமாகச் செய்கிறது போல் தோன்றலாம். ஆனால் அந்த நிலையை அடைய அவர்கள் எந்த அளவு உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்களைக் கேட்டால் தான் தெரியும்.

ஃப்ரிட்ஸ் க்ரீஸ்லர் என்ற பிரபல வயலின் மேதை சிறிதும் பிசிறில்லாமல் மிக மிகச் சிறப்பாக ஒரு நிகழ்ச்சியில் வயலின் வாசிப்பதைக் கேட்டு பிரமித்துப் போன ஒரு இளைஞன் சொன்னான். "இப்படி வாசிக்க வாழ்நாளையே தந்து விடலாம்." அந்த இசை மேதை அமைதியாகச் சொன்னார். "அப்படித் தான் தந்திருக்கிறேன் இளைஞனே" அப்படிப்பட்ட ஒரு இசையைத் தர அவர் வாழ்நாள் முழுவதும் உழைத்திருக்கிறார்.

ஒரு சாதனையைக் காண்கையில் புத்துணர்ச்சி பெற்று அப்படியே சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் வருகிறது. அந்த ஆரம்பப் புத்துணர்ச்சியைக் கடைசி வரை தக்க வைத்துக் கொள்வது என்பது வெகுசிலராலேயே முடிகிறது. அந்த வெகு சிலராலேயே சாதனை புரிய முடிகிறது.

எனவே எந்தத் துறையில் சாதிக்க ஆசைப் பட்டாலும் முதலில் அதற்கான திறமை உங்களிடம் இருக்கிறதா என்று பாருங்கள். அந்தத் திறமை இருக்குமானால் அதை மெருகேற்றவும், வெளிக் கொணரவும் முறையான திட்டமிட்ட உழைப்பைத் தர மனதளவில் உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். மனம் தயாராகா விட்டால் எந்த முயற்சியும் அரைகுறையாகவே முடியும். சாதனையின் உயரத்திற்கேற்ப பயணிக்கும் தூரமும், நேரமும் அதிகமாகத் தான் இருக்கும். அந்தப் பயணத்தில் சலிப்படைந்து விடாதீர்கள். பாதியில் நிறுத்தி விடாதீர்கள். சாதனைப்பயணத்தில் பாதியில் நிறுத்தியவர்களை யாரும் நினைவு வைத்துக் கொள்வதில்லை. சலிப்பு வரும் போதெல்லாம் முடிவு நிலையின் பெருமையை எண்ணி உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து முயன்றால் ஒரு நாள் கண்டிப்பாக சாதித்து முடித்திருப்பீர்கள்!

மேலும் படிப்போம்....

*- என்.கணேசன்*

# வடக்கு-தெற்கு பிரிவினையை பயன்படுத்தும் சிறிலங்காவின் வியூகம்



கோபி
ஒரு பேப்பர்

தமிழ் மக்களுக்கு எதிரான போரினை, தமது இன வழிப்பு நடவடிக்கைகளை 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' ஆக பரப்புரை செய்து, உலக நாடுகளின் ஆதரவினைப் பெற்று வந்த சிறிலங்கா அரசாங்கம் போரின் முடிவின் பின்னர் அதன் தந்திரோபாய நகர்வாக பூகோளத்தின் வடக்கு - தெற்கு பாதிகளில் உள்ள நாடுகளுக்கு இடையிலான வேறுபாடுகளை பயன்படுத்திக் கொள்ளுகிறது. இங்கு வடக்கு நாடுகளாக ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளும், தெற்கு நாடுகளாக ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளும் வகைப் படுத்தப்படுகின்றமையை குறிப்பிட வேண்டும. தெற்கில் அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, யப்பான் போன்றவை நீங்கலாக மற்றயவை அபிவிருத்தயடைந்து வரும் நாடுகள். இதற்கு மாறாக வடக்கில் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் காணப்படுகின்றன. இது இருதுருவ அரசியல் எனக் குறிப்பிட முடியா விட்டாலும், இவ்விரு தொகுதி நாடுகளுக்கும் இடையில் சமூக-பொருளாதார, அரசியல் வேறுபாடுகள் காணப்படுவதானால் இவ்வாறான வகைப் படுத்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

**தன்னுடன் உடன்பட மறுக்கும் சிறிலங்காவை தண்டிக்க வேண்டிய நிலை ஒருபுறத்திலும் அதற்காக மேற்கின் ஆதிக்கத்தை தனது பிராந்தியத்தில் விடமுடியாதநிலை மறுபுறத்திலுமாக இருதலைக் கொள்ளி நிலையில் இந்திய அரசாங்கம் இருக்கிறது.**

விடுதலைப்புலிகளுடான போரிற்கு வடக்கு - தெற்கு என எவ்வித பேதமுமின்றி பல்வேறு நாடுகளும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவிபுரிந்தன. வரலாற்றில் இது ஒரு மாறுபட்ட நிலையாகவே கருதப்பட்டது. எனினும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்பது நாடுகளின் கொள்கை நிலைக்கு அப்பால் சர்வதேச ஆதரவினைப் பெற்றமை இதிலிருந்து தெளிவாகிறது. போரின் பின்னரான நிலமை வேறுபட்டுக் காணப்படுகிறது. மனித வுரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வடக்கு நாடுகளால் சிறிலங்காவின் அப்பட்டமான மனிதவுரிமை மீறல்களை, மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது. ஆனால் தெற்கு நாடுகளில் பலவும் உள்நாட்டில் மனிதவுரிமை மீறல்களைச் செய்வதனால் மற்றய நாடுகள் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபடுவதை யிட்டு இவை அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் இந் நாடுகளில் சாதாராணமாக நடந்தேறுகிறது.

2009ம் ஆண்டு போர் முடிந்த பின்னர் ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் தமக்கு ஆதரவான தீர் மானத்தைக் கொண்டு வருவதில் வெற்றி கண்டது முதற்கொண்டு கடைசியாக நடந்து முடிந்த 18வது கூட்டத்தொடர் வரை, சிறிலங்கா தன்மீதான சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதில், இந்த வேறுபாடுகளை மையமாக கொண்டு தனது இராச தந்திர நகர்வுகளை மேற்கொண்டது. இதில் குறிப் பிட்டளவு வெற்றியினைப் பெற்றிருந்தபோதிலும். தொடர்ந்து இந்த உத்தி வெற்றியீட்டுமா என்பதை யிட்டு, தற்போது சிறிலங்காவுக்கு நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த கூட்டத் தொடரில் சிறிலங்கா விவகாரம் விவாதிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு சில மட்டங்களில் இருந்தது. இருப்பினும் வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள 19வது கூட்டத் தொடரிலேயே இது விவாதிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக 18வது கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னரே பரவலாகப் பேசப்பட்டது. சர்வதேச இராசதந்திரிகள் மட்டத்தில் தொடர்புகளை கொண்டிருக்கிற தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இவ்வாறான கருத்தினைக் கொண்டிருந்தனர். சிறிலங்கா அரசாங்க தரப்பும் இவ்விதமான உள்ளக தகவல்களை பெற்றிருந்தாலும் தமது பரப்புரைகளை மேற்கொள்ளுவதற்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அது நன்கு பயன் படுத்திக் கொண்டது. இதற்கென யாழ் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஜெனிவாவிற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். கூட்டத்தொடரில் கலந்து கொண்டவர்களுக்கு சிறிலங்காவினால் வழங்கப்பட்ட பரப்புரை ஆவணங்கள் ஐந்து கிலோ எடையில் இருந்ததாக அதனைப் பெற்றுக்கொண்டவர்கள் தெரிவித்தார்கள்.

மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் பத்தொன் பதாவது கூட்டத் தொடரில் பங்கேற்க இருக்கும் 46 (லிபியாவின் அங்கத்துவம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது) அங்கத்துவ நாடுகளில் 13 நாடுகள்மட்டுமே வடக்கைச் சேர்ந்தவை. மீதம் 33 நாடுகள் தெற்கைச்சேர்ந்தவை. தமக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானம் வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் அச்சுறுத்தும் நடவடிக்கை எனப் பரப்புரை செய்வதன் மூலம், இந்த 33 நாடுகளில் பெரும்பகுதி தமக்கு ஆதரவளிக்கும் என சிறிலங்கா எதிர்பார்க்கிறது. இதில் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் ஆதரவினை எதுவித சிரமமில் லாமல் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம் பிக்கை சிறிலங்காவிடம் உள்ளது. இந்நம்பிக் கையை உறுதி செய்யும் வகையில் கியூபா வெனிசூலா போன்ற நாடுகள் ஏற்கனவே நடந்து கொண்டுள்ளன.

இந்நாடுகளின் ஆதரவினை அதாவது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் உள்ள முக்கிய நாடுகளின் ஆதரவினை தமிழர் தரப்பு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்களின் மத்தியில் உள்ளது ஆனால் இதன் சாத்தியத்தன்மை கேள் விக்குரியது. நாடற்ற தேசிய இனம் ஒன்று இவ் வாறான ஆதரவினைப் பெறுவதற்கு அதன் ஆதரவு நாடுகளின் உதவி தேவைப்படுகிறது.

அண்மையில் 'Havana Times' என்ற இணைய சஞ்சிகைக்கு பேட்டி வழங்கிய திரு. விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தாம் ALBA (Bolivian Alliance of Peoples of Latin America) அமைப்பில் உள்ள நாடுகளுக்கு தமது குழுவினரை அனுப்பி தமது நிலைப்பாட்டை விளக்கி அவர்களுடன் தொடர்பாடலைப் பேணவிருப்பதாக குறிப்பிட்டிருந்தார். திரு. உருத்திரகுமாரனின் நோக்கம் வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்கான சரியான அணுகுமுறையை அவர் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அவர் நேர்காணல் வழங்கிய 'Havana Times' பிடல் காஸ்ரோ இன் எதிர்பாளர்களால் கியுபாவுக்கு வெளியிலிருந்து நடாத்தப்படும் அமெரிக்க ஆதரவு இணையதளம் என்பதனை நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் அமெரிக்க ஆதரவு கியுப இணையத்தளத்திற்கு தான் காஸ்ட்ரோவுடன் உறவுகளைப் பேணவிருப்பதாக குறிப்பிடுவது வேடிக்கையாகத் தெரிகிறது.

ஆபிரிக்க - இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் தொடர்பாடல்களை பேணக் கூடிய அமைப்புகள் எம்மத்தியில் இல்லை என்றே கூறவேண்டும். தீவிர இடதுசாரிக் குழுக்கள் இத்தகைய தொடர் பாடல்களை ஏற்படுத்த முடியும். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை மகிந்த இராஜபக்சவுடன் கரங் கோர்த்துள்ளன. அல்லது அவர்களது தத்துவ விவாதங்களில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் சிறிலங்கா மீதான மேற்கு நாடுகளின் அழுத்தத்தை வடக்கு - தெற்கு வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று, வடக்கு நாடுகளின் சிறிலங்கா தொடர்பான நகர்வுகளுக்கு ஆதரவு வழங்க பலம்பொருந்திய தெற்கு நாடு ஒன்றின் ஆதவு தேவைப்படுகிறது. அதற்கு மிகவும் பொருத்தமான நாடாக இந்தியாவை தவிர வேறெந்த நாட்டையும் கருத முடியாது.

**மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வடக்கு நாடுகளால் சிறிலங்காவின் அப்பட்டமான மனிதவுரிமை மீறல்களை, மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.**

இந்திய ஆதரவினைப் பெறுவது சுலபமானதாக இருக்கப்போவதில்லை. ஆனால் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அதன் சாத்திய தன்மை அதிகம். சிறிலங்கா - இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் முன்னரைப்போல் வலுவானதான இல்லை என்பதனையும் அனுகூலமாகக் கொள்ளலாம். அதேசமயம் தன்னுடன் உடன்பட மறுக்கும் சிறிலங்காவை தண்டிக்க வேண்டிய நிலை ஒரு புறத்திலும் அதற்காக மேற்கின் ஆதிக்கத்தை தனது பிராந்தியத்தில் விடமுடியாதநிலை மறுபுறத்திலுமாக இருதலைக் கொள்ளி நிலையில் இந்திய அரசாங்கம் இருக்கிறது. இருப்பினும் இந்தியா தமக்கு ஆதரவு வழங்கும் என்பதனை உறுதியாக நம்பும் சிறிலங்கா. அந்த நம்பிக்கையை தகர்க்கக் கூடிய காரணிகளாக இனங்கண்டிருப்பவையை தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் குறித்துக் கொள்ளவது உபயோகமானதாகக இருக்கும். தமிழ் நாட்டிலிருந்து வரும் அழுத்தத்தினையும், சிவில் அமைப்புக்கள் மற்றும் கல்வியாளரகளால் ஏற் படுத்தப்படும் கருத்துரவாக்கத்தையும் தமக்கு எதிராக இந்தியாவை திரும்ப வைத்துவிடும் என சிறிலங்கா தரப்பினர் அச்சபபடுகிறார்கள். இந்திய அதிகார மையம், ஆளும் சோனியா காங்கிரஸ் கட்சி ஆகியவற்றைக் கடந்து இங்கு இனங்காணப்பட்ட தரப்புகளுடன் நல்லுறவை வளர்ப்பது இன்றியமையாதது.

**அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் அமெரிக்க ஆதரவு கியுப இணையத்தளத்திற்கு தான் காஸ்ட்ரோவுடன் உறவுகளைப் பேணவிருப்பதாக குறிப்பிடுவது வேடிக்கையாகத் தெரிகிறது.**

ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதனை எதிர்கொள்ளும் விடயத்திலும், பொதுவாக மேற்கு நாடுகளின் அழுத்தங்களை எதிர்கொள்ளும் விடயத்திலும் சிறிலங்காவின் தற்போதைய இராசதந்திர அணுகுமுறை அனுமானிக்கக் கூடியதாக உள்ளது. இன்னொறு புறத்தில் சிறிலங்காவின் முன்னால் அதிக தெரிவுகள் இல்லை என்பதனையும் நாம் அறுதியிட்டு கூற முடியும். தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகள் இந்த நடைமுறை யதார்த்தத்தின் ஒட்டியதாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.


## ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

### New Malden
Ayngaran .......... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan .......... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

### Tooting
Yhaal House .......... 020 8767 8585
Sharon .......... 020 8672 9353
Amman Kovil .......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Prime Foods.......... 020 8682 3777
Ayngaran .......... 020 8540 1500
Suvai Aruvi.......... 020 8543 6266
Adchaya .......... 020 8540 8192
Spice way.......... 020 8685 1122

### Croydon
Best Foods.......... 020 8684 6269
Haran Bros.......... 020 8686 2552
Chennai dosa .......... 020 8665 9192
Eelam Video.......... 020 8664 8351
Spice Land.......... 020 8667 1700

### Lewisham
Chandra.......... 020 8333 8680
Eelam Shop .......... 020 8690 6545
Katpagam .......... 020 8694 8810
AJ Video .......... 020 8691 8888
Sivan Kovil .......... 020 8318 9844
KRS .......... 020 8297 9432

### Eastham
Seelans.......... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .......... 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

### Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.......... 020 8514 1744
Angels .......... 020 8553 0490
Sri Supermarket .....

### Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas.......... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

### Walthamstow
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .......... 020 7609 1912
Prabas .......... 020 8509 3322

### Harrow
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan .......... 020 8863 6160
Prabhas .......... 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.......... 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

### Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.......... 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

### Ealing
Amman kovil.......... 020 8810 0835

### Greenford
Ambiha .......... 020 8813 0967

### South hall
Thamilini C & C...... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Ruby Food Store ..... 020 8813 9663
Ruby restaurant ..... 020 8574 4087
Luxmys C & C........ 020 8571 4599
Tamilan C & C........ 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434

# விழிநீர் சொரிந்து உருகி நிற்கிறோம்!



அமரர்

**சிவசாமி சூரியப்பிரகாசம்**

தோற்றம்
23-07-1936

மறைவு
02-10-2011

திரு சிவசாமி சூரியப்பிரகாசம் இலண்டனில் கடந்த 02-10-2011 அன்று காலமானார். அன்னார் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசத்தின் (சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் தலைவர், பிபிசி தமிழோசை வானொலியில் மூத்த ஒலிபரப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்) அருமைக் கணவரும், சக்தி, மற்றும் காலஞ் சென்ற பூரணி ஆகியோரின் பாசமுகு தந்தையாரும் சேரனின் பாட்டானாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் Morden Assembly Hall, Tudor Drive, Morden, Surrey, SM4 4PJ எனும் முகவரியில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு, அன்னாரின் பூவுடல் தகனக் கிரியைகளுக்காக Lower Morden Lane, Morden, Surrey, SM4 4NU என்ற முகவரியில் அமைந்துள்ள North East Surrey Crematorium மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அதனைத் தொடர்ந்து Morden Assembly Hall எனும் இடத்தில் இடம்பெறும் மதிய உணவில் பங்கு கொள்ளுமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்
ஆனந்தி சூரியப்பிரகாசம்
020 8543 7226

# கண்ணைக் கட்டி விட்டதைப் போல்!... கார்த்திகை 27



சாத்திரி
(ஒரு பேப்பர்)

இந்த வருட மாவீரர் நாள் பற்றிய கட்டுரை ஒன்றினை கடந்த பேப்பரிலும் உங்களுடன் பகிர்ந்திருந்தேன். புலம் பெயர் தேசமெங்கும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்று இந்த வருட மாவீரர் நாள் ஏற்பாடுகள் நடைபெறுகின்றது. அனைவரும் கலந்து பேசி ஒரு ஒற்றுமையுடன் மாவீரர்களிற்கான அஞசலியை செலுத்துவதே நாம் அவர்களிற்கு செய்யும் மரியாதையும் ஆகும் என்றும். என்றொரு வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருந்தது. பல இடங்களில் பேச்சு வார்த்தைகள் நடந்தது ஆனால் ஆக்க பூர்வமான எந்த முடிவுகளும் எடுக்கப்படாமல் இரு குழுக்கள்தனித்தனியே இந்த வருட மாவீரர் நாள் ஏற்பாட்டினை செய்யத் தொடங்கியதோடு மட்டுமல்லாது. ஆளாளிறிற்கு தாங்களே உண்மையானவர்கள் மற்றையவர்கள் விலை போனவர்கள் இலங்கை இந்திய உளவாளிகள் என மாறி மாறி அறிக்கைப் போரும் தொடங்கி விட்டனர்.

## பல்லாயிரம் போராளிகளின் குருதியில் நனைந்து மென்மேலும் சிவப்பாகிப் போன தமிழீழ தேசியக்கொடி மாவீரர் நாள் மண்டப வாயிலில் பட்டெளி வீசிப்பறக்க வேண்டும்.......

இதில் ஒரு பிரிவினர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து மே 2009 ம் ஆண்டிற்கு பின்னர் இறுதி யுத்தத்தின் போது இலங்கைப் படைகளிடம் சரணடைந்தும் வேறு விதங்களில் தப்பியோடி ஐரோப்பாவிற்குள் நுளைந்தவர்கள். இவர்களின் வாதமென்னவென்றால் கடந்த காலங்களில் புலிகளின் வெளிநாட்டு பிரிவினர் பல தவறுகளை விட்டுவிட்டார்கள் அதுதான் புலிகளின் அழிவிற்கும் புலிகள் மீதான தடைக்கும் காரணம். பெருமளவான நிதியினையும் இவர்கள் முடக்கி வைத்திருக்கிறார்கள்

எனவே அந்த நிதி மற்றும் சொத்துக்களை தாங்கள் பொறுப்பெடுத்து விடுதலைப்போராட்டத்தின் அடுத்த கட்டத்தினை தாமே நகர்த்தப் போவதாகவும். இனி வருங்காலங்களில் தாமே புலம்பெயர் தேசங்களில் மாவீரர் நாள் உட்பட அனைத்து நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப் போவதாக கூறுகிறார்கள்.. இவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கின்றது . கடந்த காலங்களில் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தினரில் சிலர் நிதி மோசடி. தங்கள் பதவி நிலைகளை தக்கவைப்பதற்காக மற்றைய உறுப்பினரை காட்டிக்கொடுத்தல். மாவீரர் நாள் நிகழ்வுகளை வியாபாரமாக மாற்றியது என பல விடையங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அவை எல்லாவற்றிலும் மாற்றம் வர வேண்டும் மாவீரர் நாள் புலம் பெயர் தேசங்களில் புனிதமாக நடைபெற வேண்டுமென மாவீரர் குடும்பங்களும் மக்களும் அங்கலாய்க்கின்றார்கள். ஆனால் புதிதாய் வந்திறங்கியவர்கள். பழைய நிருவாக சீர் கேடுகளை மாற்றியமைப்பவர்களாகத் தெரியவில்லை.

அதற்கான காரணங்கள். புலிகள் அமைப்பானது ஆயுதங்களை மௌனிக்கிறோம் என பகிரங்கமாக அறிவித்து விட்ட பிறகு இனி வரும் காலங்களில் அனைத்து போராட்டங்களும் ஆயுதமற்ற வன்முறையற்ற அரசியல் மற்றும் சனநாயக ரீதியிலான மென்முறைப் போராட்டங்களே. இதனை யாரும் ஒழித்திருந்து பலபெயர்களில் செய்ய வேண்டிய தேவையில்லை. பகிரங்கமாவே செய்யலாம் கைகளில் புலிக்கொடி ஏந்தி தலைக்கு மேலே தலைவர் பிரபாகரனின் படத்தை உயர்த்திப் பிடித்த படியே செய்யலாம் எவ்வித தடையும்இல்லை.

ஆனால் புதிதாக வந்தவர்களோ ஒவ்வொரு நாடுகளில் வேறு வேறு பெயர்களில் அதுவும் புலிகளின் அமைப்பில் இருந்த தளபதிகள் அல்லது பழைய உறுப்பினர்களின் பெயர்களான விநாயகம், சங்கீதன் அல்லது தயாபரன். ஜேம்ஸ், தும்பன், ஆனந்தன், கரிகாலன். தமிழரசன், சுரேஸ், சீர்மாறன் என்கிற பெயர்களில் நடமாடுவதோடு. பல இரகசியக் கூட்டங்களை மட்டுமே இதுவரை ஜரோப்பியநாடுகளில் நடத்தியுள்ளனர். தாங்களே இறுதிவரை தலைவருடன் முள்ளி வாய்காலில் நின்றதாக கூறிக் கொண்டு புதியதொரு கட்மைப்பினை கட்டியமைத்து போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப் போவதாக கூறும் இவர்கள்.முதலில் பொதுக்கூட்டங்களை கூட்டி மக்கள் முன் தோன்றியோ, அல்லது ஊடகங்களான வானொலி தொலைக்காட்சிகளில் பங்கு பற்றியோ இறுதி யுத்தத்தின் போது நடந்த சம்பவங்கள் பற்றி புலம்பெயர் தேசத்து தமிழர்களின் மனங்களில் தத்தளிக்கும் பலநூறு கேள்விகளிற்கு பதில் கொடுத்து முதலில் அவர்களிற்கு தெளிவைக் கொடுக்கவேண்டும். அதன் பின்னர் அடுத்த கட்டத்திற்கு போராட்டத்தினை எப்படி நகர்த்துவது அல்லது நகர்த்தலாம் என்கிற ஆலோசனைகள் பகிரங்கமாக கலந்துரையாடப்பட வேண்டும்.அதே நேரம் ஜரோப்பிய நாடுகளில் இவர்களது அகதி தஞ்சக் கோரிக்கைகள் இன்னமும் அனுமதிக்படாமலேயே சரியான ஆவணங்கள் கடவுச்சீட்டு இன்றி இவர்களால் எப்படி எல்லைப் பாதுகாப்பு கூடிய இங்கிலாந்து சுவிஸ். நோர்வே . டென்மார்க் போனற நாடுகளிற்கொல்லாம் சுதந்திரமாக போய் இரகசியக் கூட்டங்கள் நடாத்த முடிகின்றது என்பதனையும் மக்களிற்கு புரியவைக்கவேண்டும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப் பட்டுள்ள ஜரோப்பிய நாடுகளில் தாங்கள் அந்த அமைப்பின் அசல் பிரநிதிகள் என்று சொல்லித் திரியும்போது, இவர்களை இயங்கவிட்டு விட்டு பார்த்துக் கொண்டிருக்கும் இங்குள்ள உளவுத் துறையினர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார்கள் என நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளலாமா? அல்லது தீவிரவாத எதிர்ப்பு அணுகுமுறையின் (counter insurgency) அடிப்படையில் அவர்களது ஆதரவும் உள்ளது என்று எடுத்துக் கொள்வதா? அல்லது எல்லாம் அவர்களுக்கு தெரியாமல் இரகசியமாக நடக்கிறது என்று கூற வருகிறார்களா? இது பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும் வரை இவர்கள் மீதான சந்தேகம் தொடரும்.

அடுத்து, மாவீரர் நாளிற்கு சிறப்பு விருந்தினராக யாரோ ஒரு கடைசிவாங்கு வெள்ளைக் கார எம்.பி ஒருத்தர் வரவழைக்கப் படுவார். அவர் வந்ததுமே தான் ஒரு அரசியல் கட்சியை சேர்ந்தவன் எனவே புலிக்கொடி தனக்கு சங்கடமாய் இருக்கு அதை எடுங்கோ என்பார்.எம்.பியே சொல்லிட்டார் எண்டு ஒருத்தர் ஓடிப்போய் அதை கழட்டி சுருட்டி வைப்பார். அவரிற்கும் மாவீரர்களிற்கும் சம்பந்தம் இருக்காதென்பது வேறு விடையம் ஆனால் அவர் மேடையில் மாவீரர் பற்றியே அல்லது மாவீரர் நாள் பற்றியோ பேசமாட்டார். பேசத் தொடங்கும் போது வணக்கம் என்று தமிழில் சொன்னதும் கைதட்டி விசில் பறக்கும். பிறகு அவர் தன்னுடைய மொழியில். தமிழர்கள் அன்பானவர்கள் .பண்பானவர்கள். பயிற்பானவர்கள்.நன்றாக உபசரிப்பார்கள். அவர்கள் சுடும் தோசை இருக்கிறதே சூப்பர் தமிழர்களின் வடை இருக்கிறதே சூப்பரோ சூப்பர். என்னை இங்கு அழைத்தற்கு நன்றி அடுத்த எலெக்சன் வருது என்னையும் கவனிச்சுக் கொள்ளுங்கோ என்று விட்டு கடைசியாய் தமிழில் நன்றி வணக்கம் என்று விட்டு போய் விடுவார்.

## மாவீரர்களின் நினைவுகளை சுமந்து மண்டபத்தில் நுளையும் போது எங்கள் தலைவனின் புன்னகை படங்கள் வரவேற்க வேண்டும்.....

எனவே மாவீரர் வணக்க நிகழ்வினை யார் ஒழுங்கு செய்தாலும். கொத்துறொட்டிக்கடை புடவைக் கடை ஏசியன் சாமான் கடை என்று எதுவுமில்லாமல் வியாபார நோக்கமற்றும் ஜரோப்பாவின் யாரோ ஒரு கடைசி வாங்கு பாராளுமன்ற உறுப்பினர் வரவழைக்கப் பட்டு அவர் வடைக்கதை சொல்லாமலும்.. இந்தியாவிலிருந்து உணர்ச்சிகர மேடைப் பேச்சாளர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்டு வீண் சச்சரவுகளையும் சண்டைகளையும் உருவாக்காமல் அனைத்தையும் தவிர்த்து, பல்லாயிரம் போராளிகளின் குருதியில் நனைந்து மென் மேலும் சிவப்பாகிப் போன தமிழீழ தேசியக் கொடி மாவீரர் நாள் மண்டப வாயிலில் பட்டெளி வீசிப்பறக்க மாவீரர்களின் நினைவுகளை சுமந்து மண்டபத்தில் நுளையும் போது மாவீரன் எங்கள் தலைவனின் புன்னகை படங்கள் வரவேற்க ஆண்டுதோறும் வழைமை போல கார்த்திகை 27 மதியம் கடக்கும் நேரம் 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தணப் பேழைகளே' என்கிற பாடல் ஒலிக்க மண்டபத்தில் மாவீரர்களது படங்கள் மீதும் அவர்களது நினைவிடங்களின் மீதும் மலர்களை அள்ளித் தூவி மனம் விட்டு அழுது அவர்களிற்கு அஞ்சலி செலுத்த நாங்கள் வரவேண்டும்.

## ஆண்டு தோறும் வழைமை போல கார்த்திகை 27 மதியம் கடக்கும் நேரம் 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தணப் பேழைகளே' என்கிற பாடல் ஒலிக்க மண்டபத்தில் மாவீரர்களது படங்கள் மீதும் அவர்களது நினைவிடங்களின் மீதும் மலர்களை அள்ளித் தூவி மனம் விட்டு அழுது அவர்களிற்கு அஞ்சலி செலுத்த நாங்கள். வரவேண்டும்....

இது தவிர்ந்து எதோவெரு எம்.பிக்காகவோ. மேடைப் பேச்சிற்காகவோ கொத்து றொட்டிக் காவவோ நடாத்தப்படும் எந்தவொரு மாவீரர் நாளும் மாவீரரைமதிக்கும் நாள் அல்ல... மக்களும் வரமாட்டார்கள்.

BAR - RESTAURANT - BANQUETING
FUSHIA
HAPPY HOUR!
5.00 PM TO 7.00 PM
40% DISCOUNT
ON ALL FOOD AND DRINKS
Orders must be taken before 7.00 pm
Monday to Sunday
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com
Tel: 020 8680 8833

CHITRAVATHI CAKE CLASSES

கேக் அலங்கார வகுப்புக்கள் நடைபெறுகின்றன
Sep, Oct New Classes Starting!

| Monday | Wednesday | Friday |
|---|---|---|
| 10.00 - 12.00 | 10.00 - 12.00 | 10.00 - 12.00 |
| 12.30-2.30 | 12.30-2.30 | 12.30-2.30 |

Tel 020 8240 1519 Mobile: 07944 668 642
Choose your one Perferred day and time


# எனக்குப் பாதி கொடுங்கள் மன்னா.....



சுகி
(ஒருபேப்பருக்காக)

வெகு விரைவில் அடுத்த மாவீரர் நாள் வருகிறது. இது நினைவு எழுச்சி நாள் என உணர்வு பூர்வமாக மண்மீட்பு போரில் மரணித்த எம் மாவீரர்களை, மாமனிதர்களை நினைவுகூர்ந்து எழுச்சி கொள்ளும் நிகழ்வு. கலந்து கொள்ளும் பல்லாயிரக்கணக்கான மக்களும், அம்மாவீரர்கள் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காகவும், அவர்கள், மனங்களில் ஏற்றுக் கொண்டு யாருக்காகவும், எதற்காகவும் உயிர் கொடுத்தார்களோ, அந்தத்தலைவன், எமது தேசியக்கொடி, தேசியப்பறவை, தேசியப்பூ என்று அவர்கள் நேசித்த எம்மண்ணின் குறியீட்டுச்சின்னங்களையும், அவர்களின் தாரக மந்திரத்தையும் மனங்கொள்ளும் நினைவு சுமந்த நாள்.

இப்புனிதநாளின், புனிதத்தை கெடுக்காத வகையில் அதைக்கொண்டு நடத்தவேண்டியது மக்களான எமது கடமையும், தவறு நடக்கும் இடத்தில் தட்டிக்கேட்கவேண்டிய உரிமையும் கூட. மாவீரர்களின் பெயரில், மக்களின் எழுச்சியை திசை திருப்புபவர்களை, முளையிலேயே அடையாளம் கண்டு களைய வேண்டிய பொறுப்பு மக்களிடமே உள்ளது.

தேசியக்கொடியை மாற்றவேண்டும், எமது தலைவர் இவர் இல்லை அவர்தான் என்று சொல்பவர்களுக்கெல்லாம் மாவீரர்நாளில் என்ன வேலை. மாவீரர் நாளில் தேசியக்கொடியேற்றி, விளக்கேற்றுங்கள், அவர்கள் செய்த உன்னதங்களைப்பற்றிக் கதையுங்கள், அவர்கள் செயலில் செய்து காட்டிய திட்டங்கள், தீட்டிய தமிழ் ஈழக்கட்டுமானங்கள், உயிர்தியாகங்கள் பற்றிக் கதையுங்கள், போர்க் குற்ற விசாரணை பற்றியும், 11,000 போர்கைதிகளில் விடுதலை பற்றியும், அவர்களின் தொகை காலத்திற்கு காலம் குறைத்து அறிவிக்கப்படுவது பற்றியும், அவர்களின் பெயர் விபரம் வெளியிடப்படாத நிலை பற்றியும் பேசுங்கள். இக்காலகட்டத்தில் எமது தார்மீக எழுச்சி தடையுத்தரவு என்ற ரீதியில் நசுக்கப்பட்டு மாவீரர் நாள், நினைவெழிச்சி நாளாகப்பட்டு, படங்கள் வைக்கக்கக் கூடாது, மாவீரர் நாளில் தலைவரின் உரை போடப்படாது என்று வெளிநாட்டின் அரசின் நிகழ்ச்சிநிரலுக்குள் நாம் தவிர்க்க முடியாது நின்று எழுச்சி நாளைக்கொண்டாடினோம். 21 வருடங்களாக இங்கு நடைபெற்ற மாவீர்நாள், கடந்த 5,6 வருடங்களாக மெதுமெதுவாக புது முகங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளதோடு அதன் வீரியம் குறைக்கப்பட்டு வந்துள்ளது.

மேலும் அதன் பலத்தைக்குறைத்து, மக்களின் மனங்களில் இருந்து, மண்ணுக்கென மரணித்த மாவீரர்களின் நினைவுகளையும், தேசிய சின்னங்களையும், அன்நினைவின் அடையாளமாக இருக்கும் நினைவெழுச்சி தினத்தையும் சிதைத்தொழிக்கும் முயற்ச்சி பல்வேறு ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது. அண்மையில் ஜிரிவி இல் இருவர் வந்து, இந்த முறை மாவீரர்நாள் லண்டனின் எக்ஸ்செல் மண்டபத்தில்தான் நடைபெறுகிறது என்று தன்னிச்சையாகச் சொன்னார்கள். (இவர்கள் அங்கம் வகிப்பதாக சொல்லிய அமைப்புகள் இவர்கள் சொல்லியதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்றார்கள்) ஒருவாரத்தின் பின், நாடு கடந்த அரசின் அரசியல், வெளியுறவு அமைச்சர் திரு. தயாபரன் தணிகாசலம், அதே ஜிரிவியில் வந்து அதை மேலும் உறுதிசெய்து மக்களுக்கு அழைப்புவிடுத்தார். ஆராய்ந்து பார்த்தில், ஏற்கனவே வழமையாக மாவீரர் நாள் நடக்கும் எக்ஸ்செல் மண்டபத்தின் 50,000 பேர் கொள்ளக் கூடிய மண்டபம் Top Gear Live என்ற கொம்பனியால் அதே நாள், அதே நேரம் எப்பவோ எடுக்கப்பட்டுவிட்டது. இதை யாரும் இன்ரெநெற்றில் பார்த்து அறிந்து கொள்ளலாம். http://www.excel-london.co.uk/whatson/events/341/இப்படி இருக்க, இவர்கள் வரச்சொல்லி மக்களுக்கு அழைப்பு விடுத்து, அதற்குரிய துண்டுபிரசுரமும் அடிக்கப்பட்டு கடைகளில் வைக்கப்பட்டிருக்கும் மண்டபம், வெறும் ஜயாயிரம் பேர் மட்டுமே கொள்ளக்கூடிய மண்டபம். அப்படியானால் இவர்களின் நோக்கம் தான் என்ன? மிகுதி நாற்பத்தைந்தாயிரம் சனங்கள், அந்த ஒரு உன்னதமான நாளில் தமது குழந்தைகளை நெஞ்சுருகி நினைவு செய்ய வந்து, மண்டப பாதுகாப்பு ஊழியர்களால் வாசலில் வைத்து மண்டபம் நிறைந்து விட்டது என்று விரட்டி அடிக்கப்படவேண்டும் என்பதா? அல்லது ஒருமுறை விரட்டியடித்த மனவெறுப்பில் அடுத்தமுறை வராமலே இருந்து, இந்த எழுச்சி அடக்கப்பட்டு விடும் என்பதா? அல்லது உண்மையாகவே தாங்கள் நடாத்தி, ஒலிபரப்ப இருந்த திரு. உருத்திரகுமாரின் உரையை கேட்க ஜயாயிரம் சனத்திற்கு மேல் வரமாட்டார்கள் என்ற எதிர்பார்ப்பா?

இதைவிட குளிரோ, மழையோ அம்பதாயிரம் சனமும் ஒருமணித்துளிநேரம் ஒன்றாக நின்று எமது மண்ணின் மைந்தர்களை நினைந்து, அந்த தலைவனின் கடைசி உரையை ஒருமுறை மீண்டும் கேட்டாலும், அவர் பூடகமாக சொன்ன விடையங்களுக்கு இப்போ சிலவேளை அர்த்தம் புரியக்கூடும்.

> 21 வருடங்களாக இங்கு நடைபெற்ற மாவீர்நாள், கடந்த 5,6 வருடங்களாக மெதுமெதுவாக புது முகங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளதோடு அதன் வீரியம் குறைக்கப்பட்டு வந்துள்ளது.

இவ்வளவு பிரச்சனையையும் சமாளித்து, அதே நேரம் கொள்கை பிறழாது, முப்பது வருடங்களாக போராட்டத்தை நடந்துவது என்பது எவ்வளவு சிரமானது என்பது, இந்த ஓரிரு வருடங்களில், தாம் தான் இனி தமிழ் மக்களை வழிநடத்தப்போகிறோம் என்று புதிது புதிதாக வந்த தலைமைகளை பார்க்கும் போது தான், இன்னும் காட்டமாக உறைக்கிறது. வலிக்கிறது. ஒரு தலைவன் வரவுக்கான காத்திருப்போடு எமது இனம் அங்கே, இங்கே ஏற்கனவே நடந்து கொண்டிருப்பதை ஒழுங்காக சேர்ந்து நடத்துவதை விடுத்து, ஒவ்வொன்றுக்கும் அதேபோல இன்னொன்றைத் தோற்றுவிக்கும் போட்டியில், ஒரு குழந்தையை தனதென அடிபட்டு இரு தாய்மார்கள் சாலமன் மன்னனிடம் நீதிகேட்டபோது, குழந்தையை சரிபாதியாக வெட்டி கொடுங்கள் என மன்னன் உத்தரவிட, புன்னகையுடன் பாதியைக் கொடு மன்னா என்று கேட்ட தாய்போல இவர்கள், வேண்டாம் மன்னா, குழந்தையை கொல்ல வேண்டாம் என்று கண்ணீரும், கைம்பலையுமாக நின்ற உண்மையான தாய்போல் புலம்பெயர் தமிழ் மக்களான நாங்கள்...

Asian groceries & seafoods at wholesale price
அனைத்துப் பொருட்களும் மொத்த வியாபார விலையில்
Cash & Carry of Class
SERANS
ASIAN FOOD STORE
Sri Lankan, Indian & Afro Caribbean Groceries & Seafoods
☒ வசதி
☒ மலிவு
☒ தெரிவு
☒ Convienent
☒ Cheap
☒ Choice
Tilda
NATCO
RAJAH
TRS


Your Visit is Vital – For New Products & Almost Daily Offers
ஒரே இடத்தில் சில்லறையுடன் மொத்த வியாபாரம்
உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய பிரமாண்டமான முறையில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ளது
689 Mitcham Road, Croydon, Surrey CR0 3AF
Tel: 020 8684 5551
Spacious Car Park

# இந்திய இலங்கை கூட்டுச்சதியின் 24வது வருடம்!





காலம் எல்லாவகையான தடங்களையும், தடையங்களையும்,சுவடுகளையும் பின்னோக்கி தள்ளியபடியே மிகமிக வேகமாக நகர்ந்து கொண்டு (ஓடிக்கொண்டு) இருக்கிறது.நினைவு ப்படிவுகளின் மேல் புதிது புதிதாக ஏராளம் காட்சிகள் படியபடிய பழையவை மறைக்கப்படு தல் காலஓட்டத்தில் சாத்தியமாகிறது.அதுதான் இயல்பானதும்கூட. ஆனாலும் எத்தனைகாலம் கடந்தாலும் எத்தனை வருடங்கள் உருண்டோடி போனாலும் மனஆழத்தில் படிந்துவிட்ட நினைவு கள் எளிதில் கரைந்துபோகாது. இதோ இருபத்து நான்காவது வருடம் இது. அவர்கள் எம்முன் உருவங்களாக உலாவாமல் விட்டு இருபத்து நான்கு ஆண்டுகளாகிவிட்டது.

**எதிரிக்கும், எதிரிக்கு துணைபோகும் சக்திகளுக்கும் எதிரான சமர்கள் அனைத்திலும் பெரும் தீயாக, புயலாக நின்று களமாடி இருக்கிறார் குமரப்பா.**

1987 ஒக்டோபர் 5ம்நாளில் விடுதலையின் மீதான தமது ஈடற்ற நம்பிக்கையையும் தாயகத்தின் மேலான அசைவற்ற பற்றுதலால் நஞ்சருந்தி வீரச்சவடைந்த பன்னிரண்டுவேங்கைகளின் இரு பத்துநான்காவது நினைவுநாள் வந்துவிட்டது. குரூரமான ஒரு சதியின் முகம் நாண அவர்கள் தம்மை ஆகுதியாக்கி தேசத்தின்ஆன்மாவுடன் கலந்தார்கள். லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், மேஜர் அப்துல்லா, கப்டன் பழனி, கப்டன் கரன், கப்டன் ரகு, கப்டன் மிரேஸ், கப்டன் நளன், லெப்.அன்பழகன், லெப்.தவக் குமார்,லெப்.ரெஜினோல்ட்,இரண்டாம் லெப். ஆனந்தகுமார் என்று பன்னிருவேங்கைகள் இந் தியவல்லாதிக்கத்தின் சதிகார முகத்திரையை கிழித்தபடியே வீரச்சாவடைந்து இருபத்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன.

இவர்களுள் குமரப்பாவும்,புலேந்தியும் விடு தலைப்புலிகளின் முதுநிலை தளபதிகள். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் வளர்ச்சியின் ஒவ்வொரு படிகளிலும் நின்றுபாடுபட்டவர்கள். போர்க்களத்தின் புயல்கள்.

குமரப்பா: குமரப்பாவுக்கு அமைப்புக்கு வந்த போது அவரின் சொந்தபெயரான இரத்தின பாலன் (பாபு) என்பதற்கு பதிலான இயக்கப் பெயராக தலைவரால் 'குமரன்' என்ற பெயர் வைக்கப்பட்டது. இயல்பாகவே கலகலப்பானவர் குமரப்பா. பழகும் யாருடனும் அன்னியோன்னிய மாகவும், எதிரே அமர்ந்திருப்பவரின் மனதுக்கு நெருக்கமாகவும் பழகும் திறன்மிகுந்தவர். திட காத்திரமான உடற்கட்டு இவருக்கு இயற்கை யாகவே இருந்திருந்தது. 1970களின் இறுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணை ந்து கொண்டார். இருபதுக்கும் குறைவான உறுப் பினர்களே இருந்த ஆரம்பகாலத்திலேயே அமைப் பில் தன்னை இணைத்தவர்.

தேடல் நிறைந்த ஒரு ஆன்மா குமரப்பா. எந்த நேரமும் ஏதாவது ஒரு புத்தகத்தை வாசித்த படியே இருப்பார். உலக நடப்புகளை அறிவதி லும்,அதனை பற்றி நண்பர்களுடன் ஆராய்வ திலும் இவருக்கு சளைப்பில்லாத ஈடுபாடு எப் போதும் இருந்துவுந்திருக்கிறது. அமைப்பில் இணைந்த பொழுதினில் அமைப்பின் பண்ணை முறைக்குள் இவரும் உள் எடுக்கப்பட்டு அந்த நேரம் இயங்கிவந்த அமைப்பின் பண்ணைகளில் 'நம்பர் திறீ' என்று அழைக்கப்பட்ட புளியங்குளம் பகுதியில் அமைந்திருந்த விவசாயப்பண்ணைக்கு அனுப்பபட்டார்.அந்த 79ம்ஆண்டுப்பகுதியில் அமைப்பின் பண்ணை முறை என்பது ஒரு விதமான பரீட்சைக்களமாக ஒவ்வொருவருக்கும் இருந்திருக்கிறது. குமரப்பாவுக்கும்தான்.

சாதாரண விவசாயப்பண்ணைகள் போன்ற தோற்றத்திலேயே இவையும் இருக்கும். ஏழு, எட்டு உறுப்பினர்கள் இருப்பர்கள் ஒவ்வொரு பண்ணையிலும்.அவற்றின் தினசரி நேர அட்ட வணை மிகவும் கடினமானது. அதிகாலை துயில் எழுப்பல். அதன்பிறகு சிறிது உடற்பயிற்சி.அதன் பின்னர் விவசாயநிலத்தில் வேலைகள், களை பிடுங்குவது. டிஸ் அடிப்பது. மந்து வெட்டுவது, தண்ணி பாய்ச்சுவது என்று ஏராளம் மாலையில் புத்தகம் படிக்கவேணும். இப்படி ஏராளம் கட்டுப் பாடுகளுக்குள்ளாக தேறுபவர்களே அடுத்த அடுத்த பண்ணைகளுக்கு உள் எடுக்கப்படு வார்கள். குமரப்பாவுக்கு இயல்பாகவே இருந்த அன்னியோன்னியமாக பழகும் தன்மையும் நட்புடன் இணையும் பழக்கமும் அவர் இருக்கும் இடத்தை எப்போதும் கலகலப்பானதாக ஆக்கிய படியே இருந்தன. எல்லா வேலையையும் அழகா கவும் அதேநேரம் வேகமாகவும் செய்யும் திறனும் அவரிடத்தில் இருந்திருந்தது.

அந்த ஆரம்பகாலப்பொழுதிலேயே செய்திக ளையும், பிற போராட்ட வரலாறுகளையும் ஆவ ணப்படுத்துவதில் தன்னார்வத்துடன் செயற்பட் டவர் குமரப்பா. அவர் இருந்த முகாமுக்கு (பண்ணை) 1979,80களில் வந்த ஈழநாடு,தின கரன் பத்திரிகைகளில் விடுதலைசம்பந்தமான ஆக்கங்களை அழகாக கத்திரித்து ஒட்டிவைத் திருந்தவர் அவர். எந்த வரலாற்று நிகழ்வானாலும் அதனை ஆண்டு திகதி என்று மிகத்துல்லியமாக தெரிவிக்கக்கூடிய நினைவாற்றல் குமரனின் ஆளுமைகளில் முக்கியமானது.

79,80களில் பண்ணையில் இருக்கும் போது அவர் அதிகமாக படித்தது 'தான்பிரின்', 'மைக்கல் கொலின்ஸ்' என்ற இரண்டு அயர்லாந்து விடு தலைப்போராட்ட வீரர்களின் வரலாறாகும். ஆரம் பகாலங்களில் குமரப்பாவின் ஆதர்ச போராளி களாக அவர்களே விளங்கினர். காலம் மிகவும் வேடிக்கையானதும்கூட. 80களின்ஆரம்பத்தில் அமைப்புக்குள் குழப்பவாதிகளால் ஏற்படுத்தப் பட்ட உடைவால் மனம் உடைந்து குமரப்பா அயர் லாந்துக்கே தொலைதொடர்பு படிக்க போக நேர்ந்தது. அயர்லாந்து சென்றதும் அவர் எழுதிய கடிதத்தில் எதை எதை அவர் 'தான் பிரின்', 'மைக்கல் கொலின்ஸ்' வரலாற்றில் படித்தாரோ அந்த இடங்களையே நேரடியாக தான் போய் பார்த்ததாக பரவசத்துடன் தெரிவித்திருந்தார்.

அயர்லாந்து போயும் அவர் ஓயவில்லை.அங் கும் தமிழ்மாணவர் அமைப்பை உருவாக்கி விடு தலையின் தேவையை சொல்லியபடியே இருந் தார். எந்தநேரமும் அவருக்குள் ஒரு விடுதலைத் தீ கனன்று கொண்டே இருந்திருக்கிறது. 1983 யூலையில் தென்னிலைங்கையில் தமிழர்களுக் கெதிராக சிங்கள அரசு கட்டவிழத்துவிட்ட படு கொலைகளின்போது அயர்லாந்தில் எமது போராட்டம் பற்றியும் சிங்கள அரச பயங்கரவாதம் பற்றியும் ஒரு புகைப்படக்கண்காட்சியை குமரப்பா ஏற்படுத்தி இருந்தார். அதன்பின்னர் பாலா அண்ணையுடன் தமிழகத்துக்கு வந்த அணி யில் குமரப்பாவும் இணைந்திருந்தார். மீண்டும் அமைப்புக்குள் இணைந்த குமரப்பா அனைத்து தளங்களிலும் தனது ஈடுபாட்டையும் ஓய்வின்றிய வேலைகளையும் செய்தவராவார். தலைவரின் பாதுகாப்பு, பயிற்சிமுகாம்கள், தமிழகஅரசியல் தொடர்புகள், ஊடகவியலாளர் சந்திப்புகள் என்று எந்த நேரமும் ஓய்வின்றியே அவர் 83லும் 84 ஆரம்பத்திலும் தமிழகத்தில் இயங்கினார்.

அதன் பின்னர் தமிழீழ களத்தில் சென்று இறங்கி குமரப்பா தனது இறுதி நாள்வரைக்கும் எதிரிக்கும், எதிரிக்கு துணைபோகும் சக்திகளுக் கும் எதிரான சமர்கள் அனைத்திலும் பெரும் தீயாக,புயலாக நின்று களமாடி இருக்கிறார். அடுத்து புலேந்திரன்,80களின் ஆரம்பத்தில் திரு மலையில் இருந்து சீலனுடன் வந்து அமைப்பில் இணைந்த புலேந்திரன் வீரத்துக்கு இன்னுமொரு பெயர் என்று குறிப்பிடும் அளவுக்கு அச்சம் ஏது மில்லாத ஒரு போராளியாக போராடி இருக்கிறார் புலேந்திரன் அமைப்புக்கு வந்த போதில் தான் அமைப்பு குழப்பவாதிகளால் உடைந்து போயி ருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் பெயரையும் அதன் கட்டமைப்புகளையும் தமது கைக்குள் எடுக்கமுயன்று தோற்றுப்போன குழப்பவாதிகள் அமைப்பைவிட்டு ஓடியபின்னர் தேசியதலை வருக்கு உறுதுணையாக அவரின் வலது கரம் போல நின்று செயற்பட்டவர்களில் புலேந்திரன் மிகமுக்கியமானவர்.

விடுதலைப்புலிகள் அமைப்பு இதோ அழிந்து விட்டது.சீர்குலைந்துவிட்டது என்று சிங்கள பேரி னவாதமும், குழப்பவாதிகளும் செய்த பிரசாரங் களை முறியடித்து எமது விடுதலைஅமைப்பை திரும்ப ஒருங்கமைத்ததில் புலேந்திரனின் பங்கு எழுத்தில் வடிக்க முடியாதது. மிகக்கடினமான அந்த பொழுதுகளில் எல்லாம் மிகமிக உறுதி யுடன் நின்றவர். அதன் பின்னரும் ,81,82,83களில் சிங்கள அரச இயந்திரத்துக்கெதிரான அனைத்து தாக்குதல்களிலும் முன்னணியில் நின்றவர் புலேந் திரன். இதனால் அவனுக்கு சாவகச்சேரி காவல் நிலைய தாக்குதலில் காயமும் ஏற்பட்டது.

இன்றைக்கும் யப்பானிய சாமுராய் வீரர்களை பற்றிய படமோ புத்தகமோ எது படித்தாலும் புலேந் திரனின் முகம் மனதுக்குள்வருவது தவிர்க்க முடி யாததாக இருக்கிறது.அப்படியான ஒரு உண்மை வீரன் அவர். அவரின் கண்களின் ஒளி என்பது விடுதலை வேள்வியை முழுக்க உள்வாங்கிய தாக இருக்கும். விடுதலையின்பேரில் உறுதி, தலைமைக்கு என்றும் உண்மை, போராளிகளு டன் பழகும்போது சகோதரன், மக்களுடன் பழகும் போது சேவகன், போராடும் பொழுதில் பெரும் ஊழித்தீ. இவற்றின் மொத்தமான வடிவம் தான் புலேந்திரன் என்ற பெயர்.

**புலேந்திரன், 80களின் ஆரம்பத்தில் திருமலையில் இருந்து சீலனுடன் வந்து அமைப்பில் இணைந்த புலேந்திரன் வீரத்துக்கு இன்னுமொரு பெயர் என்று குறிப்பிடும் அளவுக்கு அச்சம் ஏது மில்லாத ஒரு போராளியாக போராடி இருக்கிறார்.**

என்றாவது விடுதலையின் மீது குழப்பமும், அவநம்பிக்கையும் தோன்றும் பொழுதில் எல்லாம் இவர்களின் தியாகமும், ஈகமும், உறுதி யும்தான் உண்மை ஒளியாக பாதை எங்கும் நிறைந்திருக்கும். விடுதலைப்போராட்டம் என் பது வரையறுக்கப்பட்ட நேர்ப்பாதை அல்ல. அது சந்துகளும், மேடுகளும், குறுகலான பள்ளங்க ளும்,அதளபாதாளங்களும் நிறைந்தது.அதன்மீ தான பயணத்தில் இவர்கள் அனைவரும் எந்த கணத்திலும் அச்சம்,குழப்பம்,தயக்கம் எதுவும் இன்றி உறுதியாக பயணித்தார்கள். அந்த மகத்தான உறுதியே இன்றைய பொழுதிலும் எமக்கான தெளிவை அளிக்கட்டும்.

*ச.ச.முத்து*



தையல் வேலைக்கு அனுபவமுள்ள ஆட்கள் உடன் தேவை!!!

பரத நாட்டிய ஆடைகள் தைப்பதற்கு அனுபவமுள்ள, தையல் தெரிந்தவர்கள் தேவை அனுபவமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
புஷ்பா: 020 8684 1026 | 079 6076 1606

Nallur Kumaran - 1023, London Road, Thornton Heath Surrey CR7 6YN

கடை விற்பனைக்கு!!!





Lewisham பகுதியில் கடை விற்பனைக்கு உள்ளது

* Grocery & Off-License
* Bus Pass Terminal கொண்டது

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

Ananth : 020 8691 5729

# அமெரிக்கா அல் கெய்தாவிற்கு கொடுத்த இன்னும் ஒரு நெற்றியடி




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

பின் லாடன் கொலைக்குப் பின்னர் அமெரிக்கா இன்னும் ஓர் பேரிழப்பை அல் கெய்தா இயக்கத்திற்குஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் முதல் தர தீவிரவாத எதிரியாகக் கருதப்படும் அமெரிக்கக் குடியுரிமையுடைய அன்வர் அல் அவ்லாக்கிஎன்பவரையேமனில் வைத்துஅமெரிக்கஆளில்லாவிமானத்தில் இருந்துவீசப்பட்டஏவுகணையால் செப்டம்பர் 30-ம் திகதி யேமன் நேரம் காலை 9:55 அளவில் கொன்றது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் அல் அவ்லாக்கியைக் கொல்வதற்கான உத்தரவை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பிறப்பித்திருந்தார். இவரோடு இன்னொரு பாக்கிஸ்த்தனிய அமெரிக்கக்குடிமகன் சமீர் கான் என்னும் அல் கெய்தாவின் பத்திரிகைஆசிரியரும் சவுதியைச் சேர்ந்தகுண்டுதாயாரிப்புவல்லுனரான இப்ராஹ்ம் ஹசன் அல் அஸ்ரி என்பவரும் கொல்லப்பட்டனர். அன்வர் அல் அவ்லாக்கி இரண்டு ஆண்டுகளாக அமெரிக்க உளவுத் துறையால் தீவிரமாகத் தேடப்பட்டுவந்தவர். இவர்களின் பத்திரிகையில் "Make a Bomb in the Kitchen of Your Mom." என்பன போன்ற கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

அமெரிக்க கொலராடொ பல்கலைக்கழகத்தில் கட்டிடவியல் பட்டப் படிப்பையும் முதுமானிப் பட்டபடிப்பையும் முடித்துகலாநிதிப் பட்டம் பெறமுயன்றுகொண்டிருக்கையில் அல் கெய்தாவில் இணைந்தார் அன்வர் அல் அவ்லாக்கி.

சவுதியைச் சேர்ந்த குண்டு தாயாரிப்பு வல்லுனரான இப்ராஹ்ம் ஹசன் அல் அஸ்ரி நீருக்குள் வெடிக்கக் கூடியகுண்டுகளையும் தயாரிக்கக் கூடியவர். இவரும் அன்வர் அல் அவ்லாக்கியுடன் கொல்லப்பட்டதாகக் கருதப்பட்ட போதும் அவரின் இறப்பையேமன் அரசு உறுதி செய்யவில்லை.

2002இல் அமெரிக்கவிமானங்கள் அன்வர் அல் அவ்லாக்கி மீதுஒருதாக்குதலைமேற் கொண்டன. இந்தஆண்டுமேமாதம் 5-ம் திகதி அமெரிக்கா நடத்திய இரு தாக்குதல்களில் இருந்து அன்வர் அல் அவ்லாக்கி தப்பியிருந்தார். பின் லாடனைக் கொன்றஅதே குழுவினர்தான் அவ்லாக்கியையும்கொன்றதாகச்சொல்லப்படுகிறது.

அரேபிய தீபகற்பத்தில் ஒருமறைமுக இடத்தில் இருக்கும் சிஐஏயின் தளத்தில் இருந்து ஏடன் வளைகுடாவைத் தாண்டி யேமனுக்குள் புகுந்த ஆளில்லாவிமானங்களே தாக்குதல் நடாத்தியதாக நம்பப்படுகிறது. சென்றஆண்டு சிஐஏ "YSD" or the Yemen-Somalia Department என்ற ஒரு பிரிவை உருவாக்கி Al-Qaeda in the Arabian Peninsula எனப்படும் அல் கெய்தாவின் கிளை அமைப்பிற்குஎதிராகபலநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



அன்வர் அல் அவ்லாக்கியின் கொலையை அமெரிக்க உளவுத் துறையானசிஐஏயும் அமெரிக்கப் படைத்துறையின் இணைந்த சிறப்பு நடவடிக்கைக் கட்டளையகமும் (Joint Special Operations Command) இணைந்து மேற்கொண்டன. சிஐஏ அண்மைக்காலங்களாக ஒரு படைப் பிரிவை உருவாக்கி தீவிரவாத சந்தேக நபர்கள் மீது தாக்குதல்களை நடாத்தி வருகிறது. சிஐஏ யேமனையும் சோமாலியாவையும் சூழ பல இரகசிய ஆளில்லாவிமானத் தளங்களை உருவாக்கியுள்ளது. அதன் நடவடிக்கைகளில்பலபுதியவகையானதாக்குதல் ஆளில்லா விமானங்கள் மேலும் இணைக்கப்படவுள்ளன.

## அன்வர் அல் அவ்லாக்கியின் முக்கியத்துவம்.

நாற்பது வயதான அன்வர் அல் அவ்லாக்கி அமெரிக்கமாநிலமான நியூ மெக்சிக் கோவில் பிறந்து வடகரொலினாவில் வளர்ந்த மதபோதகர். இவரின் பெற்றோர்கள் யேமன் நாட்டினர் Al-Qaeda in the Arabian Peninsula எனப்படும் அல் கெய்தாவின் கிளைஅமைப்பின் தலைவர் இவரே. நவீனதொடர்பாடல் முறைமைகளைக் கையாள்வதில் வல்லவர் அற்புதமாக ஆங்கிலத்தில்தொடர்பாடல்செய்யக்கூடியவர். அதன் மூலம் அல் கெய்தாவிற்கு ஆட்சேர்ப்பதிலும் நிதி சேர்ப்பதிலும் முன்னின்றுசெயற்படுபவர். அல் கெய்தாவின் தீவிரவாதத்தைபத்திரிகை மூலம் வளர்ப்பவர். கடந்த சில வருடங்களாக பின் லாடனிலும் பார்க்கஅன்வர் அல் அவ்லாக்கி அமெரிக்காவிற்கு அதிக ஆபத்து விளைவிப்பவராகச் செயற்பட்டார். தற்போது அல் கெய்தா இயக்கத்தின் செயற் கட்டளைத் தளபதியாகச் செய்ற்படுபவர் இவரே. 2009இல் அமெரிக்க விமானமொன்றைகணனி அச்சுப் பொறிக்குள் வெடி பொருள்களை வைத்து தகர்க்கும் திட்டத்தை தீட்டிய்வர் அன்வர் அல் அவ்லாக்கி. இது போன்ற பல அல் கெய்தாவின் அண்மைக்கால தாக்குதல் திட்டங்களைன் சூத்திரதாரி அன்வர் அல் அவ்லாக்கி. இவரைப் பற்றி ஒரு பிரித்தானியஉளவுத்துறை அதிகாரி தெரிவித்தகருத்து:"His influence is all the wider because he preaches and teaches in the English language which makes his message easier to access and understand for Western audiences."

## அன்வர் அல் அவ்லாக்கியின் கொலை மூலம் அமெரிக்காசாதித்தவை:

- ஆளில்லா விமானங்கள் மூலம் தீவிரவாதிகளுக்கு எதிரானபோரில் வெற்றியீட்ட முடியும் என்பதை அமெரிக்கா மீண்டும் ஒருமுறை நிருபித்துள்ளது.
- உலகத்தில் எந்த மூலையிலும் தனக்கு எதிரான தீவிரவாதிகளைத் தம்மால் கொல்ல முடியும், அவர்கள் பாதுகாப்பாக நடமாட முடியாது என்று நிருபித்தது.
- பின் லாடன் கொலையைதிரைமறைவில் நிறைவேற்றிய அமெரிக்கா தம்மால் பகிரங்கமாகவும் தாக்குதல் நடாத்தி தீவிரவாதிகளைக் கொல்லமுடியும் என்று நிருபித்துள்ளது.
- அமெரிக்காவின் உளவுத் தகவல் திரட்டலின் திறமையைநிருபித்துள்ளது.
- அல் கெய்தாவிற்கு ஆள் திரட்டுவதில் வல்லவரான ஆங்கிலமொழியிலும் அரபு மொழியிலும் நாவன்மையுடன் பேசக்கூடியஅன்வர் அல் அவ்லாக்கியைகொன்றதன் மூலம் அல் கெய்தாவிற்கு ஒரு ஈடு செய்யமுடியாத இழப்பை ஏற்படுத்தியமை. அல் கெய்தாவில் ஆங்கிலம் பேசக் கூடியபோராளிகளுக்கானபலத்ததட்டுப்பாடுநிலவுகிறது.

## அமெரிக்காவில் வாதப் பிரதிவாதங்கள்

ஆப்கானிஸ்த்தானிலும் பாகிஸ்த்தானிலும் தேவையான நேரத்தில் தேவையானதாக்குதலைச் செய்யும் அதிகாரம் அமெரிக்கப் படைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் யேமனில் ஒவ்வொருதாக்குதலுக்கும் அமெரிக்க அதிபரின் அனுமதியைபெற்றே அமெரிக்கப் படையினரால் தாக்குதல் நடாத்தமுடியும். ஒரு அமெரிக்கக் குடிமகனை அமெரிக்கா நீதிவிசாரணை இன்றிக் கொல்லுதல் முறையானசெயலா என்ற வாதம் அன்வர் அல் அவ்லாக்கியின் கொலையைத் தொடர்ந்துஎழுந்துள்ளது அன்வர் அல் அவ்லாக்கியை கொல்ல அமெரிக்க உளவுத் துறை கொல்லப் போகிறதுஎன்பதை அறிந்த அவரது தந்தை அமெரிக்க நீதிமன்றில் அதற்கு எதிராகவழக்குத் தொடர்ந்து இருந்தார். இது அமெரிக்கநீதித் துறைக்கு அப்பாற்பட்டது என ஒரு விநோதமானதீர்ப்புவழங்கப்பட்டிருந்தது. அமெரிக்கா போரில் ஈடுபட்டிராத நாடுஒன்றில் அமெரிக்க ஒருகொலையைப் புரிந்துள்ளது. 1976இல் அமெரிக்க அதிபராக இருந்த ஜெரார்ட் போர்ட் அமெரிக்காவின் அரசியல் கொலைகளைத் தடைசெய்திருந்தார் இசுலாமியப் பயங்கரவாதம் உலகையே ஒருபோர்க்களமாக மாற்றியுள்ளது என்கின்றனர் சில அமெரிக்கர்கள். கொலை இலக்கு அமெரிக்கர்களுக்கு உடடியாகஆபத்தைவிளைவிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் கொலைநியாயப் படுத்தப் படக் கூடியது என்கிறார் ஒரு அமெரிக்க மனித உரிமைச் சட்டவியலாளர்.



> அன்வர் அல்அவ்லாக்கியை கொல்ல அமெரிக்க உளவுத் துறை கொல்லப் போகிறது என்பதை அறிந்த அவரது தந்தை அமெரிக்க நீதிமன்றில் அதற்கு எதிராகவழக்குத் தொடர்ந்து இருந்தார். இது அமெரிக்கநீதித் துறைக்கு அப்பாற்பட்டது என ஒரு விநோதமான தீர்ப்புவழங்கப்பட்டிருந்தது.

## ஒபாமாவைக் காப்பாற்றுமா

ஜோர்ச் புஷ் தோல்வி கண்ட தீவிரவாதத்திற்கு எதிரான போரில் பராக் ஒபாமா வெற்றி கண்டுள்ளார் என்கிறார்கள் ஒபாமாவின் ஆதரவாளர்கள். அடுத்த ஆண்டு நடக்க இருக்கும் அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் பொருளாதார நெருக்கடியால் பலபின்னடைவுகளைச் சந்தித்துவரும் ஒபாமாவை அல் கெய்தாவிற்கு எதிரானவெற்றிகள் காப்பாற்றுமா?



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

# Misplaced Loyalties: 'Pink Left' Countries and Sri Lanka



By Karthick RM.

"How long yet will the madness of despots be called justice, and the justice of the people barbarity or rebellion? How tenderly oppressors and how severely the oppressed are treated!"

*-Maximillien Robespierre*

The informal discussion held in Geneva on the 21st of September regarding Canada's proposal to debate the outcome of Sri Lanka's 'Lessons Learnt and Reconciliation Commission' (LLRC) was revealing on the position of various countries that participated.

First and foremost, to even give legitimacy to the LLRC, a sham commission set up by a racist state in order to show that it cares for the people it has butchered and enslaved, is a fundamentally flawed proposition. This is but part of the agenda of certain western powers to initiate a discussion on Sri Lanka that focuses solely on human rights violations in Sri Lanka without taking into account the political demands of the Eelam Tamil people, have token prosecutions and token devolutions of powers, and maybe, a regime change without disturbing status-quo of the majoritarian political structure of the Sri Lankan state. The hidden logic is that such a process will whitewash the crimes of elements within their own polity who encouraged Sri Lanka's campaign of state terror. Countries like India, Pakistan, China and Russia - who have openly supported the genocide of the Eelam Tamils - were hostile to even these token gestures, probably apprehensive of a possible exposure of their direct involvement and/or a questioning of their own treatment of national liberation struggles and people's movements in their territories. And there were countries like Cuba who whole heartedly backed Sri Lanka under the argument of 'anti-imperialism'.

Cuba and Venezuela (not to mention countries like Iran and Gaddafi's Libya), who indeed are anti-American, have also stood by the Colombo regime in their war on the Tamil people. But the question radicals need to ask is whether they are genuinely anti-imperialist, that is, whether they promote a dialogue among movements of the oppressed peoples of the world as a progressive left movement is meant to. If anti-west/anti-Americanism should be the only criteria for gauging standards of a revolutionary movement, then the Taliban should be the most progressive outfit in the world. But if progressiveness should be gauged by, in Che Guevara's own words, "indignation at injustice anywhere in the world" and a political solidarity with emancipatory liberation struggles, then the 'pink left' countries like Cuba and Venezuela fail pathetically. James Petras points out how, despite claims to 'anti-imperialism' Chavez betrayed solidarity with radical movements in order to consolidate his own regime's economic interests, giving the example of Venezuala's arrest and deportation of activists affiliated to the Revolutionary Armed Forces of Colombia (FARC) in order to placate an ally in a murderous Colombia.

It is the creed of Robert Blake, the US Assistant Secretary of State who gave Colombo full support to execute its genocide of Tamils by means of war against the LTTE, who are also responsible for providing extensive funding to reactionary regimes like that of Colombia to brutally crush movements of indigenous people, popular classes and peasantry like those led by FARC and the National Liberation Army (ELN) by similar means. It was no coincidence then that after the military defeat of the LTTE, military think-tanks and pro-state intellectuals in Colombia started considering the Sri Lanka model as an effective way of crushing radical movements in their territory in a similar fashion. Now, by endorsing a genocidal Colombo, these pink left countries are directly endorsing the war on indigenous peoples, nationalities and progressive movements in countries like Colombia, Peru, Turkey, India etc - this is the only logical conclusion that their sad arguments can lead to.

Petras has also pointed out in the article earlier referred how Stalin's deals with Hitler were a strategic disaster for the people of Soviet Union. But how much ever the then Soviet regime could be criticized for such arrangements of convenience, at no point did the Soviets endorse Nazism as a philosophy or hail Hitler in his military successes against other nations. No communist justified the atrocities of Nazism by pointing out atrocities of, say, French colonialism. For example, Aime Cesaire, a trenchant critic of colonialism, constantly criticized the hypocrisies of the colonial powers that denounced fascism but committed atrocities in their colonies - but that did not lead him to endorse Nazi brutalities. The argument of Hitler, which was as cruel as it was ridiculous, that critics of Nazi violence were unjustified because even the colonial powers have been brutal, was treated as a farce by all progressive leftists and rightly so. A progressive does not have the option of choosing between and justifying farces that dehumanize people. But the Cuban leadership seems to have exercised that option…

A darling intellectual in these countries is Sri Lankan diplomat Dayan Jayatilleka who campaigned amongst these so-called anti-west countries that the war on the Tamil people was an 'anti-imperialist struggle' - his counterparts in the west did a campaign that the war on the Tamil people was a 'war on terror'. Jayatilleka, a self-proclaimed leftist, is one who believes that the Sinhalese are an ancient civilization like the Mayans, who may be threatened to extinction by a global Tamil conspiracy and thus, they need to be militarily strong and colonize the lands of the Eelam Tamils - failing to do so will lead to "the North converted into another Kashmir", he argues. A Tamil intellectual remarked that when one reads Jayatilleka one gets the feeling a Jew would get should she flip through Mein Kampf, only that Jayatilleka (mis)quotes Marxists to justify a racist polity. Those on the Indian left are all too familiar with how writings of Marx and Lenin were twisted by the revisionist clique of CPM to justify implementation of neo-liberal policies in Bengal and Kerala, to quell popular protests in Singur, Nandigram and Lalgarh, and to vilify national liberation struggles both at India and abroad. But one is yet to hear (the author seeks to be corrected if mistaken) a CPM intellectual stooping to such levels of calculated absurdity that is generally associated with unapologetic communalists like the Subramaniam Swamys of India. An apologist of fascist violence parading under a leftist façade, with abstract slogans of anti-Americanism, showering praises on the likes of Deng Xiaoping and Vladimir Putin, Jayatilleka won allies among the pink left in Latin America.

On the other hand, Viraj Mendis, an activist of the Sinhala radical left who is in exile for resolutely standing by the struggle of Eelam Tamils, points out the confluence of world powers in backing a despotic Sri Lanka and its genocidal campaign. "The process of Genocide is continuing here too. It is happening inside these buildings here in Geneva." he said, addressing a Pongu Tamil rally. In Geneva, the representative of Cuba supported Sri Lanka with the argument that "If you want to engage in this kind of ID why don't you prepare a decision for a dialogue on detention centre in Guantanamo or bombing of NATO in Iraq, Afghanistan?" By supporting a Sri Lankan state, whose nationalism is based on a native variant of Nazi concepts of blut (Sinhala racial-cultural supremacy), lebensraum (the living space required for the superior race) and which completed its anschluss (forcible annexation) of the areas of Tamil Eelam in May 2009 accompanied by what can only called as a campaign of wanton pillage, rape and murder, countries like Cuba turn out to be ethically and politically no better than the imperialists they claim to oppose. By justifying and endorsing a successful genocide like what happened in Mullivaikaal under the name of opposing atrocities in Iraq or Afghanistan, these countries are not aiding the people whom they claim to support by any stretch of imagination.

If a banana republic like Sri Lanka that executed one of the worst mass murders in South Asia with the aid of several world powers is allowed to walk free, what will act as a deterrent for much stronger countries that hold similar intentions towards similar struggles? The Turkish Prime Minister Erdogan had recently warned Kurdish civilians that unless they differentiate themselves from the Kurdistan Workers Party (PKK), "they are also doomed to pay the price". He was one of the leaders of state to congratulate Sri Lanka on its 'successful war on terror' and the Turkish government has also upheld the Lankan model for dealing with the PKK (partisans to the PKK goal, who have also extended solidarity to the Eelam struggle in a true spirit of internationalism, were also apprehensive of this possibility). Now, what does the 'socialist' Cuba convey to the PKK and the Kurds by its endorsement of the Sri Lankan solution?

> If anti-west/anti-Americanism should be the only criteria for gauging standards of a revolutionary movement, then the Taliban should be the most progressive outfit in the world.

The regimes in Cuba and Venezuela not only appear as what a Tamil leftist described as "clowns in the arena of left politics", they end up as political opportunists by supporting mass murderers and despots like Rajapaksa who virulently implement neo-liberal policies in deed, but put up a sham 'anti-Americanism' in words. Maybe the radical left or whatever is left of it in Cuba should reread Lenin who said that "Victorious socialism must necessarily establish a full democracy and, consequently, not only introduce full equality of nations but also realise the right of the oppressed nations to self-determination i.e. the right to free political separation." Maybe that would restore the red color to the pink left governments of Latin America and enable them to look at a fascist Sri Lanka and the Tamil Eelam struggle that is fighting against it differently.

Genuine anti-imperialism does not lie in mere abstract anti-American/anti-west sloganeering. In the wake of a 'post-national world' discourse framed by apologists of multi-national capitalism and equally regressive capitalist-bureaucratic models as upheld by states like Turkey, China and Russia - both aiding the logic of genocidal states like Sri Lanka, anti-imperialism in concrete requires solidarity with national liberation struggles and their progressive representatives. Anything else is mere social-opportunism that can only promote a world-wide strengthening of forces of reaction. And then history will not absolve the pink left states, but condemn them to its dustbins.



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Why Rajapaksa's Remarks at UN General Assembly Were Flawed and Biased ?



*A Statement Issued by the Tamil American Peace Initiative*

Recently, Sri Lanka's President Mahinda Rajapaksa addressed the United Nations General Assembly in New York. In his September 23rd speech, Mr. Rajapaksa devoted much time to highlighting the advancements of his government and defending their priorities. The President then noted, "All these developments have taken place within the brief space of 30 months - an achievement all the more significant because of our strong emphasis on reconciliation. Important as economic development is, we have attached the highest priority to fostering the spirit of inclusivity and removing any remnants of bitterness from the hearts and minds of all our people."

"President Rajapaksa's statement regarding reconciliation as being the highest priority for the Sri Lankan government is in stark contrast to the actual content of his speech," said Dr. Karunyan Arulanantham, executive director of TAPI, "which was devoted entirely to his misconceived belief that economic development will wipe away all the memories of the atrocities that occurred during the civil war. This is clearly not the case."

> Evidence gathered in the last two years..... paints a completely different picture.

Notable in the context of the Sri Lankan President's assertions of his commitment to reconciliation and inclusivity were his remarks in support of Palestinian statehood: "It is important to remind ourselves that every country cherishes the values and traditions, and deeply held religious convictions it has nurtured over the centuries. These cannot be diluted or distorted under the guise of human rights, by the imposition of attitudes or approaches which are characteristics of alien culture." The Sri Lankan Government's continued insistence on promoting Buddhism as the national religion, imposing the Sinhalese language on government services and statements that 'there are no ethnic minorities anymore' runs counter to the multi-ethnic, multi-religious society that has long existed and thrived in Sri Lanka before discriminatory policies against ethnic minorities were instituted.

"This statement in support of the Palestinians is in direct conflict with his declaration of 'inclusivity' for Tamils, which has emphasized assimilation," said Dr. Arulanantham. "The Sri Lankan government's actions in the past two years have demonstrated a clear lack of commitment to true and substantive reconciliation, and runs contrary to the position Mr. Rajapaksa takes toward peace and compromise between the Israelis and the Palestinians."

President Rajapaksa's speech also made no mention of the Sri Lankan Government's 'Lessons Learnt and Reconciliation Commission,' which he has praised as the way forward to foster reconciliation in Sri Lanka. Although his remarks were filled with affirmations of progress and reconciliation, evidence gathered in the last two years by the US, European Union, a United Nations Panel of Experts, and leading human rights organizations, including Amnesty International, International Crisis Group, and Human Rights Watch, paints a completely different picture. During a recent trip to Sri Lanka U.S. Assistant Secretary of State Robert Blake emphasized that "there needs to be a full, credible and independent accounting and accountability for those individuals who may have violated international humanitarian law."

> "This statement in support of the Palestinians is in direct conflict with his declaration of 'inclusivity' for Tamils, which has emphasized assimilation,"

The Sri Lankan government continues to triumphantly celebrate the end of terrorism, and an end to violence in itself is a good thing, however they still appear unwilling to address the root causes of the war – marginalization and suppression of the minority communities by the government – and until they are willing to respect the views and rights of all Sri Lankans, President Rajapaksa cannot claim that his government has made inclusivity his country's highest priority.

# Erasing the cultural leftover of Tamils to convert Sri Lanka into Sinhala country



Travelling through the Tamil areas in North Sri Lanka, one is shocked to see the changing demography of the land. A land that was once inhabited by Tamils and a land that had a distinct flavor of Tamil culture and heritage is now in the grip of Sinhalese hegemony, seen in the form of Buddhist statues, viharas and stupas dotting the landscape that is also lined by broken Tamil homes and newly built shanties of Tamil refugees.

Sinhala and Sinhalisation are now the watch words in the predominantly Tamil areas of North Sri Lanka. Starting from Vavuniya, the change is perceptible as one enters the Tamil heartland.

I visited my home town Jaffna after 10 years, to meet my sister and her family.

*Ananthan Pethurupillai*








# KIDS பேப்பர்




## The Wolves Within

*By : Bala Mama*

An old Grandfather said to his grandson, who came to him with anger at a friend who had done him an injustice,

"Let me tell you a story. I too, at times, have felt a great hate for those that have taken so much, with no sorrow for what they do. But hate wears you down, and does not hurt your enemy. It is like taking poison and wishing your enemy would die. I have struggled with these feelings many times."

He continued, "It is as if there are two wolves inside me. One is good and does no harm. He lives in harmony with all around him, and does not take offense when no offense was intended. He will only fight when it is right to do so, and in the right way. But the other wolf, ah! He is full of anger. The littlest thing will set him into a fit of temper. He fights everyone, all the time, for no reason. He cannot think because his anger and hate are so great. It is helpless anger,for his anger will change nothing. Sometimes, it is hard to live with these two wolves inside me, for both of them try to dominate my spirit."

The boy looked intently into his Grandfather's eyes and asked, "Which one wins, Grandfather?"


The Grandfather smiled and quietly said, "The one I feed."

Word search - 154 Answer :

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | A | R | S | O | P | C | X | T | U |
| K | A | N | N | A | N | L | M | R | D |
| V | F | T | A | N | P | A | A | D | I |
| G | U | F | P | T | H | A | M | B | Y |
| U | N | B | P | R | A | I | N | W | S |
| A | O | H | A | I | A | Q | Y | Z | A |
| K | I | B | I | L | M | M | A | D | P |
| K | E | O | E | N | M | I | L | M | A |
| A | P | O | D | E | A | L | J | E | U |
| A | R | S | M | R | D | V | F | T | N |

## Join Dots - 155



*hello kids*
*Join the dots and find the hidden image*

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is Thenuga***

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite bird and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

தம்பி தங்கைகள்.....

உங்கள் ஆக்கங்களைத் தமிழிலும் எழுதலாமே....

## சொற்களைத் தேடுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டி | வி | அ | சி | த | ம |
| வி | தை | வ | ய | ம் | கா |
| ஐ | மை | ளி | க | டி | தி |
| அ | பூ | ம் | செ | ந | ம |
| ம் | ள | இ | டி | ஆ | ர |
| ழை | ம | ழை | ந | வ | ம் |
| ம | தை | நி | ப | ச | ர |

*சொற்கள்:*
மழை, பூ, காய், கனி, விதை, செடி, மரம்


***By : Ashvan***



*By : L.Jarushan*



*By : Ashvan*



*Answer for Join dots*



*By: Akshaya*



*By: Abirami*



*By:Ashwin*



*By: Harini*



*By : Shobana*



*By: Vishnuga*



*By: Hashani*



*By:Vigaashan*




*By: Thenuga*



*By : Abisha*


## Word Search - 155

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | Z | A | I | T | E | A | K | U | W |
| S | O | H | I | B | N | J | E | U | O |
| P | C | X | T | P | I | N | E | U | K |
| A | R | S | O | C | T | U | L | I | P |
| P | C | X | T | H | U | K | O | L | M |
| R | D | V | F | E | T | R | A | N | G |
| U | F | U | N | R | B | O | K | R | A |
| I | N | W | S | R | O | S | H | I | Q |
| Y | Z | A | I | Y | B | E | I | L | M |
| A | D | P | E | O | E | N | I | L | M |

**Hidden Words:**
**Subject: Trees**
CHERRY, ROSE, OAK, TEAK, PINE, TULIP



நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!!!
தீபாவளித் திருநாளை முன்னிட்டு மாபெரும் விலைச் சலுகைகள்....
ராசியான கூறைப்புடவைகள் மற்றும்
அனைத்து விதமான சேலைகளையும்,
சிறுவர்களுக்கான உடைகள் என
அனைத்தையும் தரமாகப் பெற்றுக்
கொள்ள நாடுங்கள்....
SRI VENILALS
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!
அனைத்து வித
ஆடைகளும்
25%
விலைக் கழிவில்
OCT - 31 வரை மட்டுமே!
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...
115-117 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP
Tel: 020 8903 3144



# Affordable IT Support services for Businesses and medium size Companies

உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை
நாங்கள் கவனித்துக் கொள்ள...
கவலைகளை மறந்து உங்கள் வியாபாரத்தில்
வெற்றியடையுங்கள்.

Do what you're best at = **Business**

We are best at = **IT support**

## Hassle free option

**FREE Consultation**

Call us on

# 020 7043 4318

IT SUPPORT

let us look after it.

ILC Tamil

presents

# JUNIOR SUPER STAR NIGHT

sponsored Lycamobile

SOUTH INDIAN LEADING TV CHANNEL VIJAY TV'S TOP RANKED JUNIOR SUPER SINGER'S AMAZING & UNBELIEVABLE PERFORMANCE

29TH OCT 2011, SAT 6PM
(DOOR OPEN - 5PM)
FAIRFIELD HALL
PARK LANE
CROYDON CR1 1DG

&

30TH OCT 2011, SUN 5.30PM
(DOOR OPEN - 5PM)
HARROW LEISURE CENTRE
CHRISTCHURCH AVE
HARROW HA3 5BD

TICKETS
£15
£20
£25
£50

COMEDY & MIMICRY



DANCING VIBRATION
JOINING LONDON DANCE GROUPS

MUSIC BY
RAINBOW
WITH CHENNAI'S
LEADING KEYBOARDISTS

JUNIOR SINGERS
*NITHYA SHREE
*SRINISHA
*SHRAVAN
*PRIYANKA

இம் மேடையில் பாட ஐரோப்பா ரீதியில் 2 இளம் பாடகர்கள் தெரிவு செய்யப்பட உள்ளார்கள்.
1st January 1994க்கு பிறகு பிறந்தவர்கள் பாடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 15th October 2011.
மேலதிக தொடர்புகளுக்கு:
**07435 863 843**

FOR MORE DETAILS & CONTACT
0208 930 5341, 078 7780 4093, 079 1348 5990, www.ilctamil.com, E-mail: juniorsuperstars@ilctamil.com

A1 Money Transfer | JP&S Services Ltd | Accident courtesy | VENISONS OF WEMBLEY | Sri Soobana | DOSA Special

# தமன்னாவும் ஒரு ஆப்பிரிக்க இளைஞனும்




சுவிஸிலிருந்து கனடாவிற்குப் 'பாய்ந்த' தமிழர் ஒருவரை போலந்து நாட்டில் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். இப்படி பரவலாக தமிழ் சனங்கள் பாய்ந்து கொண்டிருக்கிறார்கள். சுவிஸில் விசா பிரச்சனைகளின் சிக்கல்களாலும் அதன் முடிவுகளை அறிந்துகொள்ள காலங்கள் வருடங்களை விழுங்குவதாலும் பலரும் அடுத்த தெரிவாக கனடாவினைத் தெரிவு செய்கிறார்கள். அவர்கள் மட்டுமின்றி சுவிற்சர்லாந்தில் வேலை விசா என்று செற்றில் ஆகி விட்டவர்கள் கூட பிள்ளைகளின் 'படிப்பிற்காக' என்று அண்மைக் காலங்களில் கனடாவிற்கு குடிபெயர்கிறார்கள். அண்மையில் கனடா சென்று வந்த நண்பர் ஒருவரிடம் சனமெல்லாம் கனடா கனடா என்று ஓடுகிறார்களே அப்படி என்னதான் அங்கே இருக்கென்று கேட்டேன். அவர் பதிலுக்கு அங்கு 'இடியப்பம் ஐந்து சதங்களுக்கு வாங்கலாம்' என்றார்.

போலந்து சிறையில் அடைக்கப்பட்ட நண்பர் இரண்டுவருடங்களுக்கு முன்னர் கனடாவினை இலக்கு வைத்து இலங்கையிலிருந்து புறப்பட்ட போது சுவிஸில் அவருக்கு விமான நிலைய மாறும் வழியினை ஏற்பாடு செய்திருந்தார்கள். சூரிச் விமான நிலையத்தில் இறங்கி அடுத்த விமானத்திற்கு காத்திருந்தபோது என்னவோ இசகு பிசகாகி பொலீஸாரிடம் சிக்கிக் கொண்டு விட கனடா போகும் கனவை அப்போதைக்கு வெளியே நிறைந்திருந்த பனியில் புதைத்து விட்டு விமான நிலையத்தில் வைத்து சுவிஸில் தஞ்சம் கோரினார் நண்பர். அப்பொழுது அவருக்கு பத்தில வியாழன் நடந்து கொண்டிருந்ததாம். அது எப்பொழுதும் 'பதிய விட்டுக் கிளப்பும் என்பதால்' இப்பொழுது சுவிஸ் முகாமில் பதிய விட்டு பின்னர் கனடாவிற்கு கிளப்பும் என்று அவர் நம்பியிருந்தார்.

நண்பரது கனவுகள் முழுவதும் கனடாவினால் நிறைந்திருந்தது. எல்லாவற்றையும் கனடாவோடு ஒப்பிட்டே அவர் பேசினார். இங்கே குளிர், மைனஸ் பத்துக்களில் போனால், இதென்ன குளிர் அங்கே மைனஸ் நாற்பது வரை போகுமாம் என்பார். குளிர்காலப் பயணங்களில் காரில் தண்ணீர் போத்தலைத் திறந்து குடித்தால், இப்படியெல்லாம் கனடாவில் குடித்துவிட முடியாது. தண்ணீர் ஐஸ் கட்டியாக இருக்கும் என்பார். ஒருநாள் 'தெரியுமோ கனடாவில் வின்ரரில் வெளியில் ஒண்டுக்குப் போவதென்றால் முறித்து முறித்துத்தான் எறியவேண்டியிருக்கும் என்றார். கனடாக்காரர் யாராவதுதான் இதன் சாத்தியத்தை விளக்க வேண்டும்.

சுவிஸில் அவரது வழக்கு விசாரிக்கப்படாமலேயே காலம் இழுவுண்டது. சுவிஸில் விசா அற்றவர்கள் வேலையொன்றை நினைத்தும் பார்க்க முடியாது. தஞ்சக்கோரிக்கை முடிவிற்கு முன்னாலான தற்காலிக தங்குமிட அனுமதி வைத்திருப்பவர்கள் வேலை செய்வதற்கு வேலை வழங்குனரின் அனுமதி மட்டுமின்றி பொலிஸாரினதும் அனுமதி தேவைப்பட்டது. பொலிஸார் அவ்வாறான அனுமதியினை முன்னரைப் போல இப்பொழுது வழங்குவதில்லை அவருக்கான தங்குமிட வசதி, மற்றும் மருத்துவக் காப்புறுதிகளை அரசு வழங்கியிருந்தது. அதைத் தவிர்த்து வாராவாரம் எழுபது பிராங்குகள் அவருக்கு கொடுக்கப்பட்டன. சுவிற்சர்லாந்தின் தனிநபர் வருமானத்தோடு ஒப்பிடுகையில் அது பத்து வீதத்திற்கும் மிகக் குறைவான தொகையாயிருந்தது.

நண்பர் விட்ட இடத்திலிருந்து கனடாவினைத் துரத்திப் பிடிக்கத் தொடங்கினார். மள மளவென்று அதற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்தார். கனடாவிலிருந்தும் யாரோ கவனித்தார்கள். இங்கிருந்து போலந்து 'பின்னர் அங்கு போடிங்' உடைத்துக்கொண்டு கனடாவிற்கு விமானம் ஏறுவது என்பதே திட்டமாயிருந்தது. வெற்றிகரமாக சூரிச் விமானநிலையத்தை விட்டும் மேலே பறந்தார் நண்பர். இருபத்து மூன்று கிலோக்களையுடைய ஒரு பயணப் பொதியும் ஏழு கிலோ அளவில் இன்னொரு கைப் பொதியும் அவரிடமிருந்தன. அதைவிட ஆதவன் என்கிற தமன்னாவின் படம் போட்ட சுவிஸ் இதழ் ஒன்றும் அவர் வசம் இருந்தது. பயணத்தில் படிப்பதற்காக.. போலந்தில் போடிங் உடைப்பதற்கு முன்னதாகவே அவர் முக்குடைபட வேண்டிய சிற்றுவேஷனுக்குள் நுழைய வேண்டியதாய் ஆனது. சுவிஸ் பொலிஸாவது பரவாயில்லை ரகம் என்றார் நண்பர். போலந்து பொலிஸாரில் ஒருவன் அவரது செவிட்டைப் பொத்தி அறைந்த போது வெள்ளைக் காரங்கள் எல்லோரும் நல்லவர்கள் என்ற பிம்பமே விழுந்து உடைந்து சிதறியதாம். நண்பருக்கு அழுகை அழுகையாக வந்தது. அவர் எல்லாவற்றையும் ஒப்புவித்தார். அவரைத்தூக்கி போலந்தில் ஒரு சிறைக் கூடத்தில் மூன்று மாதங்களுக்குப் போட்டார்கள். அப்பொழுது ஏழரைச் சனியன் முற்கூறு வேறு அவருக்கு நடந்து கொண்டிருந்ததாம்.

நண்பருக்கு சிறை புதிது. அவரது தஞ்சக் கோரிக்கை கேஸில் ஐந்தாறு மாதங்கள் வெலிக்கடை மகசீன் சிறைக் 'கதை'கள் வந்தாலும் அனுபவத்தில் இதுவே முதற்தடவை. சிறையில் அவரது செல்லில் இன்னும் மூவர் தங்கியிருந்தார்கள். தனித் தனிப் படுக்கைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. வாழ்க்கையே வெறுத்துப்போயிருந்த நண்பர் தன் மீது பெரும் போர்வையைப் போல படியும் மனச்சோர்வை அகற்ற ஒரு வழி கண்டுபிடித்தார். அவர் ஆதவன் இதழில் வெளியாகியிருந்த பிரபாகரனின் படத்தைக் கத்தரித்து தனது தலைமாட்டில் ஒட்டிக் கொண்டார். தலைவரைப் பார்க்கின்ற போதெல்லாம் தனக்கு உற்சாகம் பீறிட்டுக் கொண்டு வந்ததாகச் சொன்னார் நண்பர்.

மன உற்சாகத்தை பீறிட்டு வரவழைத்துக் கொண்ட நண்பர் பொழுதைப் போக்க ஆதவன் இதழே கதியென்றிருந்தார். தொன்னூற்றெட்டுப் பக்கங்களின் சமாச்சாரங்களையும் ஒப்புவிக்கிற நிலைக்கு அவர் வந்திருந்தார். இப்படி அவர் இதழைப் பிரித்து வைத்துப் படிக்கிற நேரங்களில் அட்டையில் சிரித்தபடியிருந்த தமன்னாவை விழுங்கி விடுவதைப் போல அறையிலிருந்த ஆபிரிக்க நாடொன்றைச் சேர்ந்தவன் பார்த்தபடியிருந்திருக்கிறான்.

**போலந்து பொலிஸாரில் ஒருவன் அவரது செவிட்டைப் பொத்தி அறைந்த போது வெள்ளைக் காரங்கள் எல்லோரும் நல்லவர்கள் என்ற பிம்பமே விழுந்து உடைந்து சிதறியதாம்.**

அப்படியொருநாள் அவன் ரொய்லெட் போன போது, ஆதவனை இதழை அவன் வாங்கிப் போனானாம். போனவனை நீண்ட நேரமாகக் காணவில்லை. இது தின வழமையாகத் தொடங்கியது. முதலில் நண்பருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. அப்படியொருநாள் பிடிபட்டபோது அவன் இதழின் அட்டையைத் தண்ணீரால் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறான். நண்பர் முகத்தைச் சுழித்து நுனி விரலால் காதுகளில் பிடித்து முயலைத் தூக்குவது போல அதை வாங்கிக் காய வைத்திருக்கிறார். காய்ந்த பிறகு தமன்னா இப்பொழுது கொஞ்சம் மொட மொடப்பாய் முறுகியிருந்தா.

அடுத்தநாளும் அவன் தமன்னாவைக் கேட்டிருக்கிறான். நண்பர் தரமுடியாது என்றார். இன்னும் இரண்டொரு தடவை அவன்.....

--தொடர்ச்சி 28ம் பக்கம்

# மனித நேயச் செயற்பாட்டாளரின் கைதும் கே.பியின் தலையீடும்!!

பிரித்தானியாவில் மனித நேய நடவடிக்கைகள் பலவற்றில் ஈடுபட்டு வந்தவரான திருமதி. வாசுகி கருணாநிதி என்பவர் அவசரத் தேவை நிமித்தம் இலங்கைக்கு தனது மளுடன் சென்றிருந்தார். அங்கிருந்து திரும்பி வர முற்பட்ட வேளையில் ஒகஸ்ட 6ம் திகதி கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து இலங்கைப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குப் பெயர் போன கொழும்பு 4-ம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். வாசுகி பிரித்தானியக் குடியுரிமை பெற்றவர் என்பதால் இவரது கைது தொடர்பாக இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதித் தூதுவர் இலங்கை வெளிநாட்டமைச்சருடன் தொடர்பு கொண்டிருந்தார். ஐந்து நாட்களில் இவர் விடுதலை செய்யப்படுவார் என இலங்கை வாக்குறுதி அளித்திருந்தும் இக்குறிப்பு எழுதும் வரை அவர் விடுதலை செய்யப்படவில்லை.

பிரித்தானியாவில் உள்ள வாசுகியின் நண்பர்கள் வாசுகியின் கைதுக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தொடர்ந்தனர். அதைத் தொடர்ந்து கே. பி எனப்படும் விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் பத்மநாதன், வழக்கைத் தொடரந்துள்ளவர்களின் குடும்பத்தினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வழக்கைக் கைவிடுமாறும், அவ்வாறு கைவிடும் பட்சத்தில் அவர் விடுதலைசெயய்யப்படுவார் எனக் கேட்டுக் கொண்டதாகத் தெரியவருகிறது. இதற்கு அவர்கள் வாசுகியை விடுதலை செய்தால வழக்கு தானாகவே நிராகரிக்கப்பட்டுவிடும் என அவர்கள் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

லண்டனில் வாழும் கருணைலிங்கம் என்பவர் மூலமாகவே கே.பி. வாசுகி குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டதாகவும், இரண்டு நிபந்தனைகளுக்கு அவர்கள் உடன்படுவார்களாயின் தம்மால் அவரை விடுவிக்க முடியும் என கருணைலிங்கமும் கேபியும் குறிப்பிட்டுள்ளனர். ஒன்று வழக்கை கைவிடுதல், அடிப்படை உரிமை வழக்கை கைவிடுதல், மற்றயது விடுதலையடைந்து லண்டன் திரும்பியதும், அவர் கைது செய்யப்பட்ட விபரங்களை மனிதவுரிமை அமைப்புகளுக்கோ அல்லது ஊடகங்களுக்கோ வெளியிடக்கூடாது. இந்த நிபந்தனைகளை குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டனரா என்பது பற்றி அறிய முடியவில்லை.

**சிறிலங்கா அரசபடைகளுடன் சேரந்தியங்கிவரும் கே.பி. கைதியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது சிறிலங்கா புலனாய்வுத் துறையின் உயர் மட்டத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளமையும், இவ் விவகாரத்தில் வெளிப்பட்டுள்ளது.**

சிறிலங்கா அரசபடைகளுடன் சேர்ந்தியங்கி வரும் கே.பி. கைதியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளமையும் சிறிலங்கா புலனாய்வுத்துறையின் உயர் மட்டத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளமையும், இவ் விவகாரத்தில் வெளிப்பட்டுள்ளது. கே.பியிற்கு உள்ளூர் முகவர்களாக கருணைலிங்கம் போன்றவர்கள் செயற்படுவதும் தெரிய வந்துள்ளது.

இது பற்றிய மேலதிக விபரங்களுடன் அடுத்த ஒரு பேப்பரில் சந்திக்கிறேன்.

*- ஊருளவாளி*

# உயிருக்குப் போராடும் ஜெகதீஸ்வரனுக்கு உதவுங்கள்....

## அவசரம் ஒரு உயிர்காக்க வேண்டிய அவசியம்



கடைசி யுத்தத்தில் முதுகுப்பகுதியில் காயமடைந்து மருத்துவம் பெற்றுக்கொண்ட நேரம் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர் ஜெகதீஸ்வரன். இந்த ஜெகதீஸ்வரன் என்ற முன்னாள் போராளி கொழும்பு வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் தனது உயிருக்குப் பேராடிக் கொண்டிருக்கிறார். அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்த 33வயது இளைஞனின் 2சிறுநீரகங்களும் பாதிப்புற்றுள்ள நிலமையில் மாற்றுச்சிறுநீரகம் பொருத்த வேண்டிய நிலமையில் இருக்கிறார். எதிர்வரும் 3மாதங்களுக்குள் சிறநீரகம் மாற்றப்படாதுவிட்டால் அவருக்கு இறப்பு நிச்சயம் எனப்படுகிறது.

மாற்றுச்சிறுநீரகம் பொருத்தப்படும் வரை 6 நாட்களுக்கு ஒருமுறை இரத்தம் மாற்றப்பட வேண்டும். இரத்தமாற்றுகைக்கு ஒருமுறைக்கு 6ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது.

ஜெகதீஸ்வரனின் மருத்துவச் செலவுகள் மாற்றுச்சிறுநீரகம் பொருத்துதல் எவற்றிற்கும் அவரது குடும்பத்தினரிடம் பண வசதியில்லை. உலகத்தமிழர்களிடம் உதவியை நாடும் இந்தக் குடும்பத்திற்கு உறவுகளே உங்கள் உதவியை வழங்குங்கள்.

இந்த இளைஞரின் உயிர்காக்க எம்மாலான உதவிகளைச் செய்ய முன்வாருங்கள் உறவுகளே....!

*உதவ விரும்புவோர் தொடர்பு கொள்ள :-*

**1] Nesakkaram e.V**

Hauptstr – 210
55743 Idar-Oberstein
Germany
Shanthy Germany – 0049 6781 70723
மின்னஞ்சல்: nesakkaram@gmail.com

**2] Vereinsregister:**

AZ- VR 20302
Amtsgericht 55543 Bad Kreuznach
Finanzamt Idar-Oberstein, Steuer-Nr. 09/665/1338/8

**3] Donation**

Bank information - Germany:
NESAKKARAM e.V.
55743 Idar-Oberstein
Konto-Nr. 0404446706
BLZ 60010070
Postbank Stuttgart

Other countrys:
NESAKKARAM E.V
A/C 0404446706
Bank code – 60010070
IBAN DE31 6001 0070 0404 4467 06
Swift code – PBNKDEFF
Postbank Stuttgart
Germany

## 'வெல்கம் ஐபிசி'



ஐ.பி.சி தமிழ் வானொலியினால் நடாத்தப்பட்ட 'வெல்கம் ஐபிசி' நிகழ்ச்சி ஒக்ரோபர் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை ஹரோ சொரஸ்ரியன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழச்சி அழைப்பிதழில் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமானதுடன், ரசிகர்கள் மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

முற்றிலும் உள்ளூர் கலைஞர்கள், குறிப்பாக இளையவர்கள கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டதுடன், அவை ரசிகர்களின் பாராட்டினைப் பெற்றதனை அடிக்கடி ஒலித்த கரகோசம் நிரூபிப்பதாக அமைந்திருந்தது. அன்றைய நிகழ்ச்சிகளில், கார்த்திகாவின் அகரம் குழுவின் இளையவர்களால் வழங்கப்பட்ட நாட்டிய நிகழச்சி, பார்வையற்ற கலைஞர்கள் வழங்கிய காலச்சக்கரம், ஜே.ஜே. மற்றும் வனிதா ஆடிய நெஞ்சினிலே பாடல் நடன நிகழ்ச்சி என்பன குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிகழ்ச்சிகள்.

அனைவரும் எதிர்பார்த்த ஐ.பி.சி கலைஞர்களின் செல்லக்கிளி - சின்னத்தம்பி நிகழ்ச்சி ஒலியமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகளால் ரசிக்க முடியமாலிருந்தது. ஒலியமைப்பில் அடிக்கடி ஏற்பட்ட தடங்கல்களை தவிர்த்துப் பார்த்தால் அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் தரமானவையாக அமைந்திருந்திருந்தன.

## நாடக விழாவில் நான்கு நாடகங்கள்



அவைக்காற்றுக் கழக நாடக விழ சென்ற செப்டெம்பர் 24ம் நாள் சட்டன் சீக்கம் திரை அரங்கில் இடம்பெற்றது. வேக வாழ்வோட்டத்தை கொண்ட லண்டன் மாநகரில் குழு முயற்சியான அரங்க நாடகங்களை குழந்தைகளையும் இணைத்து33 ஆண்டுகளாக அரங்கேற்றி வரும் பாலேந்திரா ஆனந்தராணி தம்பதிகள் பாராட்டுக்குரியவர்களே . 'அயலார் தீர்ப்பு', 'படிக்க ஒரு பாடம்' என இரு சிறுவர் நாடகங்கள் 'பாடம்', 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' ஏனைய இரு நாடகங்கள்.

தலா மூன்று பாத்திரங்களை கொண்டவை இவைவண்டிக்காரன் புகழ் சத்தியமூர்த்தி பிறர் இணைந்த கனசகறம் இசை நிகழ்வும் இடம்பெற்றது அயலார் தீர்ப்பு காலா காலமாக கூறப்படும் குரங்கு பூனைகளுக்காக அப்பம் பங்கிட்ட நீதிக்கதை பனிரண்டு பூனைகள் குரங்குகள் என்ற பாத்திரங்களை உருவாக்கி இசை நாடகமாக நாலு கதை சொல்வோர் சகிதம் சுவைபட நகர்த்திய விதம் அற்புதம். சிறுவர்களின் நடிப்பும் அற்புதம்.

முதிர்ந்த பாலேந்திரா தம்பதிகளின் கலை ஆற்றலுக்கு நிகராக செல்வி சற்குணானந்தன் அசத்துகிறார் வேலைக்காரியாக ஆனந்தராணியின் நடை பிரமாதம் பழம் பெருமையும் புகழும் நிகழ கால வாழ்க்கைக்கு துணையாகாது என உணர்த்தும் நாடகம் 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது'

ஆனந்த ராணி வாசுதேவன் சத்தியேந்திரன் மூவரும் கூட்டு நடிப்பில் மிளிர்கின்றார்கள் சிறப்பான இன்னுமொரு நாடகம் இது மொத்தத்தில் அவைக்காற்றுக் கழக நாடக சேவை இன்னொரு உச்சம் சட்டன் நாடக விழா.

நாடகங்களை ரசிக்கவும் கலைஞர்களை ஊக்குவிக்கவும் எம்மவர்கள் மேலும் முன்வரவேண்டும்.

## நினைவு வணக்க நிகழ்வுகள்



தியாகதீபம் திலீபனின் இருபத்துநான்காவது நினைவுதினம் இலண்டன் ilford பகுதியில் அமைந்துள்ள செல்வ விநாயகர் ஆலயத்தில் 25.09. 2011 ஞாயிறு அன்று நினைவு கூரப்பட்டது.

தாய்மண்ணின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை ஈகம் செய்த அனைத்து மாவீரர்களுக்கும் நாட்டுப் பற்றாளர்களுக்கும் மக்களுக்கும் அகவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து மாவீரன் லெப்.கேணல் சிவனேசன் (செல்லத்துரை புருசோத்மன்) அவர்களின் சகோதரன் ஜெகன் அவர்கள் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னால் நாடளுமன்ற உறுப்பினர் திரு.ஜெயானந்தமூர்த்தி அவர்கள் தியாகதீபம் லெப்.கேணல், திலீபன் கேணல் சங்கர், கேணல் இராயு அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து திரு.செல்வராசா அவர்கள் தோழர் செங்கொடியின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் நினைவுப் பதிவுகள் காணொளியில் காண்பிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் உறுப்பினரான திரு.ஜெயானந்தமூர்த்தி அவர்களின் சிறப்புரையுடனும் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்னும் தாரக மந்திரத்தை அனைவரும் ஓங்கி ஒலித்து உணர்வு பூர்வமாக நிகழ்வு நிறைவடைந்தது.

## சேரனின் "You cannot Turn Away"




கவிஞர் சேரன் எழுதிய தமிழ், ஆங்கிலக் கவிதைகள் அடங்கிய You cannot Turn Away என்ற கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் ஒக்ரோபர் 3ம் திகதி திங்கள் கிழமை நடைபெற்றது. கலாநிதி அபர்ணா கல்பே அவர்கள் அறிமுகவுரையை நிகழ்த்தியிருந்தார். பேராசியரிர செல்வா கனகநாயகம், நூர்ஜஹான் அசிஸ் ஆகியோர் கவிதைகளை வாசித்தளித்தனர். இக்கவிதைத் தொகுதி இம்மாதம் 26ம் திகதி சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் விழாவில் வெளியிடப்படவிருக்கிறது. லண்டனில் அடுத்த வருட முற்பகுதியில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்



உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET 020 8216 2520
CROYDON 020 8150 9950
CITY OF LONDON 020 7 183 2696
CAMBS 01354 707 911

BBK PARTNERSHIP
www.bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping.

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS
R3

# மாற்று வழிகளில் மஹிந்தாவை நீதியின் முன் மாட்ட வைக்கும் புருஸ் ஃபெயினின் முயற்சி

இலங்கைக் குடியரசின் அதிபர் மஹிந்த ராஜபக்ச மீதான போர்க்குற்றச் சாட்டுகள் சம்பந்தமாக அமெரிக்க கொலம்பியா மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்ட வழக்கில் நீதி மன்றம் வழங்கிய அழைப்பாணையை அவர் இது வரை ஏற்க்காமல் தவிர்த்து வருகிறார்.

24-09-2011இலன்று மஹிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்ற அமெரிக்கா சென்றிருந்த போது அவரிடம் நியூயோர்க்கில் உள்ள பௌத்த விஹாரையில் வைத்து நீதி மன்ற அழைப்பாணை சமர்ப்பிக்கச் சென்ற போது அவரது மெய்ப்பாதுகாவலர்கள் அவரை அண்மிக்க விடாமல் சூழ்ந்து கொண்டனர்.

இப்போது புருஸ் ஃபெயின் என்னும் சட்ட வல்லுனர் மாற்று வழிகள் மூலம் மஹிந்த ராஜபக்சவிடம் நீதி மன்ற அழைப்பாணை சமர்ப்பிப்பது தொடர்பான முன் மொழிவை அமெரிக்க கொலம்பியா மாவட்ட நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

இது முதல் தடவையாக ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. புருஸ் ஃபெயினின் முன் மொழிவில் மஹிந்த ராஜபசவிற்கு இலத்திரனியல் முதல் அச்சு ஊடகங்கள் ஈறாக தபால் தொடர்பு வரை எட்டு வெவ் வேறு வழிகளில் நீதி மன் அழைப்பாணை சமர்பிப்பது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது:

1. மஹிந்தவின் தபால் பெட்டி மூலம்: மஹிந்தவின் முகவர்கள் அமெரிக்காவில் மஹிந்தவின் 2010 அதிபர் தேர்தல் பிரச்சாரத்திற்காக பெற்றிருக்கும் தபால் பெட்டி மூலம் சமர்ப்பித்தல். PO Box 34017 Washington DC, 20043 US என்பது அதன் முகவரியாகும்.

2. பிரசுரிப்பதன் மூலம்: அமெரிக்காவில் முல்லெனெ 339 வழக்கிலும் இலங்கையில் சந்திரத்திலக்க எதிர் முனசிங்க வழக்கிலும் பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலம் நீதி மன்ற அழைப்பாணை வழங்கப்பட்டது. சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்காவின் கொலையிலும் பத்திரிகைப்பிரசுரித்தல் முறை ஒரு அழைப்பாணை சமர்ப்பிக்கப்பட்டதாக நீதி மன்றம் ஏற்றுக் கொண்டது.

3. முகவேட்டினால் (FACEBOOK) சமர்ப்பிதன் மூலம்: மஹிந்தவின் முகவேட்டுப் பக்கத்திற்கு அழைப்பாணையை சமர்ப்பிப்பதன் மூலம் அழைப்பாணையை மஹிந்தவிற்கு சமர்ப்பித்ததாக ஏற்றுக் கொள்ள முடியும் என்கிறார் புருஸ் ஃபெயின். இதற்கு அவர் அண்மையில் ஒரு அவுஸ்த்திரேலிய நீதி மன்றம் வழக்கின் பிரதிவாதிக்கு முகவேட்டின் மூலம் அழைப்பாணை வழங்குவது ஏற்றுக் கொள்ளப்பட்டதை முன்னுதாரணமாகக் காட்டுகிறார்.

4. டுவிட்டர் மூலம்: மஹிந்தவிற்கான அழைப்பணையை டுவிட்டர் மூலம் வழங்க முடியுமென்கிறார் என்கிறார் புருஸ் ஃபெயின். இதற்கு அவர் அண்மையில் பிரித்தானியாவின் ஒரு பதிவருக்கு(blogger) எதிரான தடை உத்தரவை நீதி மன்றம் டுவிட்டர் மூலம் வழங்கியதை உதாரணம் காட்டுகிறார்.

5. தமிழர்களின் இணையங்கள் மூலம்: பிரதிவாதி மஹிந்த ராஜபகசவும் அவரைச் சார்ந்தவர்களும் தமிழர்களைப் பயங்கரவாதிகளாகக் கருதி அவர்களது இணையத் தளங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. மஹிந்தவிற்கான அழைப்பாணையை தமிழ்நெற் போன்ற தமிழர்களின் இணையத் தளங்களில் பிரசுரிப்பதன் மூலம் அது மஹிந்தவைப் போய்ச் சேரும்.

6. மின்னஞ்சல் மூலம்: மஹிந்த ராஜபக்சவின் மின்னஞ்சலுக்கு அழைப்பாணையை அனுப்ப முடியும். தகூச் Properties Inc. v Rio Intern. Interlink 284 F. 3d 1007 (9th Cir. 2002)என்னும் அமெரிக்க வழக்கில் நீதி மன்றம் மின்னஞ்சல் மூலமான அழைப்பாணையை ஏற்றுக் கொண்டது. இது போன்ற வேறு பல வழக்குகளையும் புருஸ் ஃபெயின் முன்னுதாரணமாகச் சமர்ப்பித்துள்ளார்.

7. தொலை நகல் (FAX) மூலம்: புருஸ் ஃபெயின் The New England Merchants Court allowed service via telex as early as 1980. New England Merchants, 495 F. Supp. 73, 81, (S.D.N.Y. 1980). என்று குறிப்பிட்டுள்ளார்.

8. மஹிந்தவின் பிரச்சார முகவர்கள் மூலம்: இலங்கை அரசிற்காக அமெரிக்காவில் பல் வேறு பிரச்சார நிறுவனங்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றன அவற்றினூடாக மஹிந்த ராஜபக்சவிற்கான அழைப்பாணையை வழங்க முடியும் என்கிறார் புருஸ் ஃபெயின்.

## நாட்டுக்குத் தேவையான கோவில்கள்..

தனியார் கோயிலோ இல்லையோ அந்த கோயில் போர்க்காலத்தில் தாயக மக்களுக்கு செய்த உதவி அளப்பரியது.. எத்தனையோ ஈழ மக்களின் பசிவாழ்வை காப்பாற்றியது. அதன் தர்மகத்தாவை இப்படியாக உறவுகளுக்கு செய்த உதவியால் தான் புலிக்கு பணம் போகிறது என்டு குற்றம் சாட்டி கோயில் தலைமையில் இருந்து இலண்டன் அரச கண்காணிப்பால் இடை நிறுத்தி வைத்தார்கள்.

இலண்டனில் எத்தனையோ கோயில்கள் உள்ளன, சொத்துக்கள் கூட உள்ளன. விம்பிள்டென் பிள்ளையார் கோவில் நிறைய சொத்துக்களுடன் இருகின்றார் தாயக மக்களுக்கு உதவி செய்ததாக அறிந்ததே இல்லை. எல்லா நிறுவனனங்களும் தாயக போரை வியாபார நோக்கில் பயன் படுத்தினார்கள் ஏன் இந்த கட்டுரை பிரசுரித்த ஒரு பேப்பர் கூட விடுதலையை சொல்லிதான் வளர்ந்தார்கள்.இப்போ சிறிலங்கன் மது பானத்திற்கு விளம்பரம் போட்டு பேப்பர் நடாத்துகிறார்கள்.எல்லாரும் அப்படிதான். ஆனால் இந்த கோவிலால் பசியாற்றிய மக்களின் நன்றியை மறக்க கூடாது.

அண்மையில் கூட கோயில் போன போது மன்னாரில் கட்டப்படும் முதியோர் இல்ல விபரன விளக்கம் முன் வாசலில் அழகாக விபரமாக எழுதி வைத்துள்ளார்கள். சம்ஸ்கிருதம் வளர்க்க போட்டி போடும் கோவில்கள் இருக்கும் போது. தமிழுக்காக விழா எடுக்கும் ஒரு கோவில் இதுவாக தான் இருக்கும், ஆண்டுதோறும் தமிழ் பேச்சு போட்டி, தமிழ் பாரம்பரிய கலை நிகழ்வுகள், கவுரவிப்புகள் எல்லாம் தமிழுக்காக சிறப்பாக செய்தார்கள்.நல்லூர் முருகனும் தனியார் கோவில் தான் அதற்க்காக போர்க்காலத்திலோ அல்லது போரை நடாத்தியவர்களோ ,இப்பவோ என்ன இடித்தா தள்ளி விட்டார்கள்.

கோவில் மதிப்பு, அது செய்யும் தொண்டு நடாத்த படும் விதம் அவை சிறப்பாக இருந்தால் அனைவரும் வர வேற்பார்கள். செய்த உதவிகளை மறந்து தூற்றுவது அதை தடுப்பதற்கு வசை பாடுவது , இல்லாமல் செய்வதில் தமிழர்களாகிய நாம் வல்லவர்கள் அதையே இக்கோவிலுக்கும் செய்கிறோம்.

ஈலிங் துர்க்கை அம்மன், ரூங்கிங் அம்மன் இந்த கோவில்கள் இரண்டுக்கும் சென்று வழிபடும் போது போடப்படும் பணத்தில் சிறுதுளியாவது கஷ்டத்தில் வாடிய எம்மக்களுக்கு உதவியாக கிடைத்ததே என்று நான் மன நிறைவடைகிறேன். அவர்கள் செய்த உதவிகளின் இதுவரையான மொத்த தொகை அளப்பரியது. விபரங்கள் கோயில் மண்டபங்களில் தொங்கிகின்றன

-வாழ்க-

-நேசன்




# பயணம்.......

சாத்திரி
(ஒரு பேப்பர்)

பாகம்–04

டோனியலுடன் அதிகாலை 5 மணிவரை கதைத்துவிட்டு வந்து படுத்தாலும் புதிய இடம் தூக்கம் அதிகம் வரவில்லை காலை 9மணிக்கெல்லாம் எழுந்து தயாராகிவிட்டிருந்தேன். மும்பையில் நான் சந்திக்க வேண்டியவர்களையெல்லாம் மலைமாதா கோயிலடிக்கே வரச்சொல்லியிருந்தேன். டோனியல் என்னை அழைத்து போவதற்காக ஒரு ஆட்டோவுடன் தயாராக வந்திருந்தான். இந்தியாவில் மும்பையில் மட்டுமல்ல மகாராஸ்ரா மானிலத்தின் அனைத்து பகுதிகளிலும் எனக்கு ஒரேயொரு ஆச்சரியம் என்னவென்றால். அங்கு அனைத்து ஆட்டோக்களிலும் மீற்றர் போட்டு அதற்கான பணம் மட்டுமே வாங்கினார்கள்.

மாதா தேவாலயத்திற்கு சென்று இறங்கியதும் டோனியல் தன்னுடைய கடைக்கு அழைத்துப் போனான். அங்கு ஒரு கால் சரியாக நடக்க முடியாத ஒரு 15 வயது மதிக்கத்தக்க ஒரு பெடியன் கடையை கவனித்துக் கொண்டிருந்தான். அவனிற்கு என்னை கிந்தியில் அறிமுகப்படுத்தியவன். என்னிடம் நான் இங்கை கடை தொடங்கிய காலத்திலை இந்தப்பய இங்கைதான் பிச்சையெடுத்திட்டு திரிஞ்சான். அனாதைப்பய அவனை பிடிச்சு பிச்சை எடுக்கிறது கூடாது வா நான் வேலை போட்டுத்தாறேன்.படிக்கிறியா என்று கேட்டேன் அவனும் ஆமான்னான். பகலிலை கடையை பாத்துக்கிறான்.இரவு பள்ளியிலை சேத்திருக்கிறன். படிக்கப்போறான். என்றான். மும்பையில் இறங்கியதுமே டோனியலிற்கு ஒரு சிறுதொகை பணத்தினை கொடுப்பதற்காக எடுத்து தயாராக வைத்திருந்தேன் அதனை அவன் கையில் கொடுத்தால் வாங்க மாட்டான்.என்பது எனக்கு தெரியும் அதற்கான சந்தர்ப்பம் இப்பொழுது எனக்கு கிடைத்திருந்தது.அவனுடன் பேசிய படியே கடையில் இரண்டு மெழுகு திரியை எடுத்தேன். என்ன அக்கா(எனது மனைவியை) கோயிலுக்கு போகணுமா என்றான் இல்லை நானும் தான் என்றேன் என்னை ஆச்சரியமாக பார்த்தவன் என்ன சாமிப் பக்தியெல்லாம் வந்திட்டுதா? என்றான்.

ஏனெனில் எனது சிறிய வயதில் தீவிர சாமிப் பக்தனாக இருந்த நான் எனது பதினாறு வயதுகளிலிருந்து நாத்திகனாக மாறிவிட்டிருந்தேன். அது டோனியலிற்கு தெரியும்.அதனால் தான் அவன் அப்படிக்கேட்டான். எங்கள் சுயநலத்திற்காகவும் எங்கள் தேவைகளிற்காகவும் சில நேரங்களில் சாமியை நம்பவேண்டியிருக்கிறது என்றபடி நான் தயாராய் வைத்திருந்த பணத்தையெடுத்து அந்தப் பையனின் கையில் திணித்தோன். அந்தப்பையன் எதுவும் புரியாமல் முழித்தபடி டோனியலை பார்க்க டோனியல் இதென்னடா என்றான். இது மெழுகு திரிக்கானது இதனை வாங்காவிட்டால் எனக்கு மெழுகுதிரி வேண்டாம் நான் கோயிலுக்கு போகவில்லையென்றேன். அதுக்காக என்று இழுத்தவன் சரி நம்ம கடைக்கு இப்படியான கஸ்ரமர் நிறைய வந்தால் நான் சீக்கிரமே மில்லியனர் ஆயிடுவேன்டா என்று சிரித்தபடி எனது மெழுகுவர்த்திகளை அவன் வாங்கியபடி மேலும் சில மெழுகுதிரிகளை கடையில் எடுத்தபடி கோயிலிற்குள் நடந்தான். நாங்களும் அவனுடன் கோயிலின் நுளைந்து மெழுகுதிரிகளை ஏற்றிவிட்டு எனக்கு கடவுளிடம் வேண்டுதல்களை வைப்பதில் உடன்பாடில்லை எனவே எல்லாரும் நல்லா இருக்கவேணும் என மனதில் வேண்டிவிட்டு.வெளியே வந்து காத்திருந்தேன்.

மற்றைய நண்பர்களும் வந்து சேர்ந்ததும் ஒரு உணவு விடுதியில் அனைவரும் மதிய உணவை உண்டபடி பேசிவிட்டு. மீண்டும் எப்பொழுதாவது சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தால் சந்திப்போமென கூறி விடை பெற்றுக் கொண்டேன். அன்றிரவு பெல்கம் (கர்னாடகா மானிலம்)புறப்படவேண்டும் அங்கு தான் மனைவியின் தாயார் குடியிருக்கிறார்.எனவேமனைவி கடைத்தெருவிற்கு போய் கொஞ்சம் பொருட்கள் வாங்கவேண்டுமென்றாள். பெண்களுடன் கடைக்கு போவதென்றால் என்னவென்பது திருமணமான அனைத்து ஆண்களிற்கும் அனுபவப்பட்ட விடயம்தானே. அந்த அவஸ்த்தையை நான் அனுபவிக்க விரும்பாததால் நான் அறைக்குபோகிறேன் நீ போயிட்டுவா என வழியனுப்பி வைத்துவிட்டு அறைக்கு போய் விட்டேன் . டோனியலும் கடைக்கு போய் விட்டு இரவு வழியனுப்ப பஸ் நிலையம் வருவதாக கூறி சென்று விட்டான். நான் அறைக்கு சென்று ஓய்வெடுத்த பின்னர். அன்றிரவு எமது பெல்கம் நோக்கிய பயணம் தொடங்கியது.

* * *

சென்னைக்கு நான் வருவதாக நண்பர்களிற்கு சொன்ன திகதிக்கு போகமுடியவில்லை திடீரென புனேக்கு செல்லவேண்டிவந்ததால் பூனே பயணத்தை முடித்துக்கொண்டு ஒரு வாரம் கழித்துத்தான் சென்னைக்கு புறப்பட்டேன்.. எனது சென்னைப் பயணம் எந்தக் காரணத்தாலும் அரசியலாகியோ பலரிற்கு அவலாகியோ விடக்கூடாது என்பதில் மிக கனவனமாக இருந்தேன்.அதனால் தனியாக தங்குவதற்கு சென்னை செல்ல முன்னரேயே நண்பர் சுசியிடம் சென்னையில் எனக்கு தங்குவதற்கு ஒரு இடம் பார்க்குமாறு கூறியிருந்தேன். இந்தச் சென்னை மகா நகரத்தில் தங்குவதற்கா இடமில்லை வாருங்கள் தாராளமாக இடம் இருக்கிறதென்றார். காலை 6மணிக்கு சென்னை கோயம்பேடு அண்ணாச்சியின் சரவணபவான் சாப்பாட்டுக்கடை முன்னால் பஸ் நின்றது. இறங்கியதும் சுசிக்கு நான் வந்துசேர்ந்துவிட்டதாக தொலைபேசியடித்தேன் அரைமணி நேரத்தில் வந்துவிடுவதாக சொல்லியிருந்தார். சரவணபவானிற்கு முன்னால் படிக்கட்டில் அமர்ந்தபடியே இப்படி உலகம் முழுதும் கடையை துறந்து வைச்சிட்டு அண்ணாச்சி ஒரு பெண்ணைத் தொடப்போய் அனியாயமாய் உள்ளை கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறாரே ஆசை யாரை விட்டது என மனதில் நினைத்தேன். சுசி வந்து காரில் ஏற்றிக்கொண்டு விடுதியை நோக்கி போய்க்கொண்டிருந்தார் அவருடன் கதைத்தபடியே போய்க்கொண்டிருக்கும் போது ஒரு பூங்காவையும் அதனருகே ஒரு சிலையையும் கவனித்த எனக்கு இந்த பூங்கா நல்ல பழக்கமானதொரு பூங்கா எனநினைத்தபடி சட்டென்று சுசியிடம் இது பனகல்பார்க்தானே என்றேன். அதேதான் இது பாண்டிபஜார் இங்குதான் றூம்போட்டிருக்கிறேன் போலீஸ் ஸ்ரேசன் பக்கத்திலைதான் அன்று பிரபாகரனை கைது செய்த இங்ஸ்பெக்ரர் நந்தகுமார் இப்போது உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ தெரியாது என்று சொல்லி சிரித்தார். பாண்டிபஜாரிற்கும் எமக்கும் ஏதோ பூர்வீக தொடர்பு இருக்கிறது போலை என்று நினைத்தபடியே. 1981ம் ஆண்டு அன்று பாண்டிபஜாரில் தலைவர் பிரபாகரனும் உமாவும் சந்திக்காமல் போயிருந்தால்???? எனது மனதில் ஓடத்தொடங்கிய சிந்தனையை பலவந்தமாக கலைத்துவிட்டேன்....

வரலாற்றின் பக்கத்தில் தற்செயலான நிகழ்வுகள் சாதகமாக அமைந்துவிட்டால் அது தன்னால் தான் என மார்தட்டிக்கொள்ளும் மனிதர்கள். அவை தவறாகப்போய்விட்டால் அப்படி நடக்காமல் விட்டிருக்கிலாம்.அப்படி செய்யாமல் விட்டிருக்கலாம்.என ஆயிரம் 'ல்' களையும் 'ம்' களையும் மாறி மாறி போட்டுப்பார்த்து புலம்பிக் கொண்டிருக்கும். என்று எனக்கு நன்றாக தெரிந்திருந்தாலும் எமது தோல்விகளின் தாக்கம் இந்தியப்பயணத்தில் நானும் பல இடங்களில் அந்த 'ல்'களையும்.'ம்' களையும் நினைத்துப்பார்த்து புலம்பியதும் உண்டு.

கார் தியாகராஜா வீதியில் ஒரு விடுதியின் முன்னால் வந்து நின்றது.அறைக்கு சென்று ஓய்வெடுக்குமாறும் தான் மதியம் வருவதாக சுசி கூறிச்சொன்றுவிட்டார். தமிழ்நாட்டில் நான் நின்ற சமயம் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்திருந்த நேரம் எனவே செய்திகளை அறிவதற்காய் தொலைக்காட்சியில் சண் செய்திகளை போட்டுவிட்டு படுத்துக் கொண்டேன்.....

நான் முதலேயே மூன்று பேரை பற்றி எழுதுவேன் என சொல்லியிருந்தது போல் இப்பொழுது நான் சந்தித்திருக்கும் இரண்டாம் நபர் சுசீந்திரன். பெரும்பாலும் நம்மவர்கள் அறிந்த ஒரு பெயர்தான் ஆனால் பலர் இப்பொழுது மறந்திருப்பார்கள்.ஈழத்தமிழர் போராட்டத்திற்கு ஆதரவான இன்னொருவர் இவர். இராஜீவ் காந்தி கொலை வழக்கின் போது இவரும் ஒரு முக்கிய நபராக சேர்க்கப்பட்டு கைது செய்யப்பட்டு முதலில் தூக்குத்தண்டனைநிறை வேற்றப்பட்ட ஒருவர் தொடர்ச்சியான போராட்டங்களின் பின்னர் எட்டரை ஆண்டுகள் சிறை வாழ்க்கையை அனுபவித்து விட்டு வெளியே வந்திருப்பவர்.


வெளியே வந்த பின்னர் இன்னமும் அதே வழக்கில் உள்ளே இருப்பவர்களின் விடுதலைக்காக தொடர்ந்தும் முயற்சிகளில் ஈடுபட்டக் கொண்டிருப்பவர்களில் ஒருவர். தமிழினத்திற்கான இவரது பங்களிப்பு அர்ப்புணிப்பக்கள் ஏராளமானது அவற்றை இங்கு விபரமாக எழுத முடியாவிட்டாலும் தமிழ் நாட்டில் ஈழத்தமிழனிற்காக தன் வாழ்க்கையை தொலைத்தவர்களில் இவருமொருவர்.ஈழத்தமிழையும் இந்திய தமிழையும் கலந்து பேசுவார் தமிழ்நாட்டில் அனைத்து அரசியல் தொடர்புகளும் உள்ளவர். ஆனால் எந்த அரசியல் வாதியையும் பிடிக்காது. மதியமளவில் எழும்பி குளித்து விட்டு ஜெயபாலன் அவர்களிற்கு போனடித்து நான் இருக்கும் இடத்தை கூறினேன். பக்கத்தில்தான் இருக்கிறேன் சிறிது நேரத்தில் வருகிறேன் என்றார். அதற்கிடையில் சுசியும் வந்துசேர ஜெயபாலனும் வந்து சேர்ந்தார். அவர்களுடன் வன்னியில் இறுதி நேர யுத்தத்தில் காயமடைந்து தற்சமயம் தமிழ் நாட்டில் சிகிச்சை பெறும் நண்பர் ஒருவரும் வந்து சேர்ந்திருந்தார். பிறகென்ன அரசியல் விவாதம் சூடு பிடித்தது.

ஏன் எமக்கு இந்தத் தோல்வியென்று பலகாரணங்கள் பலமணிநேரம் விவாதம் தொடர்ந்தது. அங்கிருந்த அனைவருமே ஏதோ ஒரு விடயத்தில் புலிகள் அமைப்புடன் அல்லது அதன் முக்கிய நபர்களுடன் இறுதிவரை தொடர்புகளை கொண்டிருந்தவர்கள் என்பதால். இது வரை வெளிவராத அல்லது மெல்லமாய் வெளி வந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் பலதும் சூடான விவாதங்களாகியது. இந்தியாவை நாம் எதிரியாகப் பார்க்கக்கூடாது இந்தியாவில் எவரையும் பகைக்கக்கூடாது எல்ரையும் அரவணைக்கவேண்டும். எதிரிகளானாலும் அரவணைத்துப்போகவேண்டும் என்று திரும்ப திரும்ப ஜெயபாலன் வலியுறுத் கொண்டிருந்தார். புலிகள் அமைப்பு பேச்சு வார்த்தை காலத்தில் விட்ட தவறுகள் இறுதி யுத்தத்தின் போது எடுத்த சில தவறான முடிவுகள் பலதையும் விமர்சித்தார்.

## 30 வருட ஆயுதப்போரை நடாத்திய தலைவர் பிரபாகரன் சில தவறுகளை விட்டிருக்கலாம்...... ஆனால் அதனை விமர்சிக்கும் அருகதையை இந்த நூற்றண்டில் வாழும் யாரும் கொண்டிருக்கவில்லை

ஆனால் ஜெயபாலனின் பிரபாகரன் மீதான விமர்சனங்களை நான் ஏற்றுக்கொள்ளத்தயாராய் இருக்கவில்லை.30 வருட ஆயுதப்போரை நடாத்திய தலைவர் சில தவறுகளை விட்டிருக்கலாம்.. ஆனால் அதனை விமர்சிக்கும் அருகதையை இந்த நூற்றாண்டில் வாழும் யாரும் கொண்டிருக்கவில்லை என்பதே எனது கருத்து. தலைவர் பிரபாகரனை விட மேலானதொரு ஆயுத விடுதலைப்போரை நடத்தி வெற்றிபெற்ற ஒரு மனிதனே தலைவர் பிரபாகரனை விமர்சிக்கும் தகமையுடையன். என்றேன் நான். எங்களது விவாதம் மதியத்திலிருந்து நள்ளிரவையும் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது. அரசியல் ஆயுதப்போர் விவாதங்களை பசி பின்னிற்கு தள்ளிறியது. விடுதியின் உணவகத்தில் போய் உணவருந்திக்கொண்டிருந்தபோது ஒருவர் ஜெயபலனை பார்த்து அண்ணா நீங்கள் தானே ஆடுகளத்திலை பேட்டைக்காரன் என்றார். ஆமா நான் என்றவர் பெருமிதத்துடன் என்னைப்பார்த்துபாத்தியா.... அந்தப்படத்தை பாத்தியா என்றார். பாத்தேன் குரல்தான் சரியில்லை பொருந்தவில்லை டப்பிங்குடுத்து கெடுத்திட்டாங்கள் என்றேன். இறுதியாக ஜெயபலனிடம் நீங்கள் இந்தியாவில் பலதரப்பட்டவர்களுடனும் பலதரப்பட்ட மட்டங்களிலும் தொடர்புகளைபேணும் ஒருவர் அதுமட்டுமல்லாது அடிக்கடி இந்தியா வந்து செல்பவரும்கூட அதனால் எமது நேசக்கரம் தொடர்ந்து முன்னெடுக்கவிருக்கும் தாயகத்து மக்களிற்கான பொருளாதாரப்பணிகளிற்கு உங்களாலான உதவிகளை கட்டாயம் வழங்கவேண்டுமென கூறி விடைபெற்றுக்கொண்டேன். படுக்கைக்கு போகலாமென நினைத்து அறைக்கு திரும்பியிருந்தபோது தொலைபேசி மணி அடித்தது தொலைபேசியில் அழைத்தவர். சி.மகேந்திரன் அவர்கள்!

தொடரும்...............



# புலிக்கு பிறந்தது பூனையாகுமா ?

தாயகத்தில் வாழும் தமிழர்களின் மண் பறிபோகலாம், தொழில் பறிபோகலாம், கல்வி பறிபோகலாம், தன்மானம் பறிபோகாது என்பதை ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் இரண்டாவது இடத்தைப் பெற்ற முல்லைத்தீவு, நெத்தலியாறு தமிழ் மகா வித்தியாலய மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவன் நிருபித்துள்ளான்.

முல்லைத்தீவை பிறப்பிடமாக கொண்ட இந்த மாணவன், போர்க்கால சூழ்நிலையிலும், முகாம்களில் அடைபட்டுக் கிடந்த கஷ்டமான காலத்திலும் தனது கல்வியைக் கருத்தனமாகக் கருதி, கல்வி கற்றதன் பயனாக அகில இலங்கையிலும் இரண்டாவது இடத்தைப் பெறுவதற்கு கடுமையாக உழைத்ததின் உக்கிரத்தை உணரமுடிகிறது. இம்மாணவனின் அடையாளத்தை உதாரணமாகக் கொண்டு வசதிகளை அனுபவிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிள்ளைகள் கல்வியில் மெச்சத்தக்க பெறுபேறுகளை அடைய வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

தமிழர்களின் அழியாத கலாச்சார பண்பாட்டில், முதியவர்களின் காலைத் தொட்டு இளையவர்கள் ஆசி பெறுவது இயற்கையான வழக்கம். அதிலும் சாதனையாளர்கள் குறிப்பாக மாணவ, மாணவிகள், தாய்தந்தயரிடமும் குரு ஸ்தானத்தில் இருக்கும் ஆசிரியர்களிடமும் ஆசி பெறுவது வழி வழி வந்த ஒழுக்கம். சேதுராகவன், 20.09.2011 இல் யாழ் நூலக கேட்போர் கூடத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களால் கௌரவிக்கப்பட்ட போது, அமைச்சரின் காலில் விழுந்து ஆசி பெற மறுத்த செயல் முழுத் தமிழினத்தையே தலை நிமிரச் செய்த அர்ப்பணிப்பாகும்.

இவன் பிறந்த மண்ணில், இந்த மாணவன் எதிர்கொண்ட எல்லையிலாத் துன்பங்கள்தான் அவனுடைய மனதில் ஆழப்பதிந்து விட்ட அழிக்க முடியாத பதிவுகள். இவனைப் போல எத்தனை எத்தனை எத்தனை மாணவர்கள் தமது கனவை நினைவாக்க காத்திருப்பார்களோ தெரியவில்லை. பிஞ்சு உள்ளங்களில் நஞ்சாகப் பதிந்து விட்ட உணர்வுகளை உரிய நேரத்தில் புரிய வைக்க இதைவிட வேறு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்குமோ தெரியவில்லை!

அமைச்சர்களின் காலில் விழுந்து வணங்கும் அசாதாரண வழக்கம் அண்டைய நாடான தமிழ் நாட்டில் இருந்த போதும், ஈழத்து தமிழன் ஒரு விதிவிலக்கல்லவா? வன்னி மக்களின் மண்ணில் குடியேறலாம், அவர்களின் மனதில் குடியேறாமல் இந்த மாணவனைப் போன்ற தமிழனைப் பணியவைக்க எடுக்கும் ஒவ்வொரு தந்திரமும் என்றுமே பலிக்காது என்ற உண்மையை சேதுராகவன் உணர்த்தியுள்ளான்.

## குடும்பச் சண்டைகள்

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் விவாகரத்துகளை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் குடும்பங்களில் உண்டாகும் வன்முறைகள்தான் இப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக அலசுகிறார்கள். அதெல்லாம் சுத்தப்பொய். முன்னோர் காலந்தொட்டு குடும்ப பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது இதென்ன புதுக்கதை என்று ஆராய்ச்சியாளர்கள் மீது அவநம்பிக்கை தெரிவிக்கிறார்கள் இன்றைய தலைமுறையினர்.

அப்படியா சங்கதி, ஒவ்வொரு ஆண்டிலும் 500,000 எண்ணிக்கையில் பெண்கள் அமெரிக்காவில் மாத்திரம், அவர்கள் முகம் கொடுக்கும் வன்முறைகள்பற்றிகாவல்நிலையங்களில்முறைப்பாடு செய்ததாக அறிய முடிகிறது எப்படி?

அத்தனை முறைப்பாடுகளும் அப்பெண்களின் தற்போதைய துணைவர்கள் அல்லது முன்னாள் துணைவர்களினால் ஏற்பட்ட வன்முறைகள் தான் எனத் தெரிகிறது.

இந்தச்சிக்கலை ஆராயநியுயோக்கில் உள்ள RICHARD STOCKTON, கல்லூரியைச் சேர்ந்த DAVID BUSS, என்பவரும் அவரது சகாவான JOSHDA DOXILY என்பவரும் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர். 65 கர்ப்பிணிப் பெண்களை விசாரித்த ஆராய்ச்சியாளர்கள், இப்பெண்களின் கர்ப்பத்திற்கு வேறு ஆண்கள் காரணமாக இருந்த நிலைமையில், இவர்கள் வன்முறைச் சம்பவங்களுக்கு ஆளானதை நிருபித்துள்ளர் பெண்கள் மீது ஏற்படும் அவநம்பிக்கையும் சந்தேகமுமே வன்முறைக்கு தூண்டுதலாக இருந்ததாக நம்பப்படுகிறது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

குடும்பப் பெண்கள் ஆண்களை விட அதிக வருமானத்தை பெறுபவர்களாகவும், அறிவில், அந்தஸ்தில், அழகில் மேலோங்கி இருப்பதாலும் தான் தாழ்வு மனப்பான்மைக்குட்பட்ட ஆண்கள் வன்முறையை பெண்கள் மீது கட்டவிழ்த்து விடுவதாக நம்பப் படுகிறது. இந்த ஆய்வு உண்மையா இல்லையா என்று கனடாவில் வசிக்கும் 8000 பெண்களிடம் விசாரித்த போது வன்முறைக்காளான 14 சதவிகிதமான பெண்கள் தமது துணைவர்கள் தங்கள் மீது சந்தேகம் கொண்டவர்களாகவும், பிற ஆண்களிடம் போவதையே வெறுப்பவர்களாக இருப்பதாகவும் புட்டுப்புட்டு வைத்தனர். எனவே, வள்ளுவர் வாசுகி போல் வாழாவிட்டாலும் வன்முறைகள் தவிர்த்து வாழ முற்பட்டால், நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்.

## சுருக்கத்தை மாற்றும் மாத்திரை

உருவத்தை பார்த்து ஒருவருடைய வயதைக் கண்டுபிடிப்பது இப்போதெல்லாம் முடியாதப்பா, தலைக்கு அடிப்பதுமை, சருமத்துக்கு விதம் விதமான களி (CREAM), உடுப்பதற்கு கவர்ச்சியான நவீன உடைகள், என்னதான் மூடிமறைத்தாலும் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள் காட்டிக் கொடுத்து விடுமே.

சருமத்துள் ஆழமாகப் புதைந்துள்ள இயற்கையான Cells ஒருவரின் வயது கூடக் கூட அவை தமது சக்தியை இழந்து விடுவதால் சருமத்தின் மேற்பரப்பில் சிறிய சுருக்கங்களாகத் தோன்றுவதை, இதுவரை எவராலும் தடுக்க முடியவில்லை.

ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் UNILEVER ஸ்தாபனம் SHARAN BROOK இல் அமைத்துள்ள தமது தொழிற்சாலைகளில், பணியில் அமர்ந்துள்ள JOHN CASEY'S என்பவரையும் அவரது குழுவினரையும் ஈடுபடுத்தி அற்புதமான ஒரு மாத்திரையை உருவாக்கியுள்ளனர். இம்மாத்திரையை 'GENE FOOD' என்று கூட அழைக்கலாம். இம் மாத்திரைக்கு அடிப்படையாகத் தேவைப்படும் வைட்டமின் 'C' வைட்டமின் ' E PLUS' போன்றவற்றை சோயா தாவரத்திலிருந்தும், LYCOPENE சத்துணவை தக்காளியிலிருந்தும் OMEGA-3 ஆசிட்டை மீன் எண்ணையில் இருந்தும் பிரித்தெடுத்து இந்த மாத்திரையை உருவாக்கி உள்ளனர்.

இப்புதிய மாத்திரையை தினமும் 3 வேளை, 14 வாரங்களுக்கு தொடர்ச்சியாக பாவனைக்கு உட்படுத்தியவர்களிடம் காணப்பட்ட சுருக்கங்கள் 10 விகிதம் அடையாளம் மாறிவிட்டதாகவும், சிறந்த சில பரீட்சாத்திகளிடம் 30 விகித முன்னேற்றம் காணப்பட்டதாகவும் பெறுபேறுகள் தெரிவிக்கின்றன.

முகத்தில் தோன்றும் சுருக்கங்களை நீக்க, சருமத்திட்கான விசேட காரிகளை பிரசித்தி பெற்ற மருத்துவ நிறுவனங்கள் விற்பனைக்கு வைத்திருந்தாலும் தோலின் கீழ் ஆழமாகப் புதைந்துள்ள குறைபாடுகளை நீக்காமல் சருமத்தின் மேற்பகுதியில் தோன்றும் சுருக்கங்களை முற்றாக நீக்க முடியாதென்ற உண்மையை அறிந்த பின்னரே, இப்புதிய மாத்திரையின் தோற்றம் உருவாகியதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாதவிடாய் நின்றுபோன 480 பெண்களிடம், இப்புதிய மாத்திரை கொடுக்கப்பட்டு, பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் பரிசோதனை செய்யப்பட்டு, இம்மாத்திரையின் பலனை ஆதார பூர்வமாக நிருபித்துள்ளனர். அடுத்த மாதம் முதலாக, விற்பனைக்கு வரப்போகும் இப்புதிய மாத்திரை பெருத்த வரவேற்பை பெறும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். வருங்காலத்தில் வயது முதிர்ந்தவர்களைக் கண்டு பிடிப்பதே கஷ்டம் போல் தெரிகிறதல்லவா! பயமே வேண்டாம் நடை காட்டிக் கொடுத்துவிடும்.

# கோர்த்து விடும் செய்திகள்

### எங்கட சாமி சக்தி வாய்ந்தது.



முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் மிருகக்கொலை செய்வதை இனக்கொலை அரசின் அடிதடி அமைச்சர் மேர்வின் சில்வா பௌத்த 'தர்மத்தின்' பெயரில் சண்டித் தனத்துடன் சட்ட விரோதமாகத் தடுத்தார். அம்மன் ஆலயத்தில் அவருக்கு எதிராக யாகம் செய்யப்பட்டது. அதைத் தடுக்க இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள விகாரைகளில் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. ஒரு வாரத்துக்குள் மேர்வின் சில்வா போதைப் பொருள் விற்பவர் என்ற செய்தியை விக்கிலீக் வெளியிட்டது.

* * *

### ஆட்சி மாறினாலும் காட்சி மாறாது



இந்தியா ஈழத் தமிழர்களுக்கு செய்த மற்றும் செய்து வரும் கொடுமைகள் சொல்லில் அடங்காது. ஆனால் சில இந்தியாவின் வால் பிடிகாரர்கள் இப்போது இருக்க்கும் காங்கிரசுக் கட்சியின் ஆட்சி தான் தமிழர்களுக்கு எதிரானது இந்தியா தமிழர்களுக்கு எதிரானது அல்ல என்று ஊளையிடுகின்றனர். ஆனால் பௌத்த சிங்களப் பேரினவாதியான அநாகரீக தர்மபாலாவின் நினைவாக நடந்த நிகழ்வில் காங்கிரசின் மாற்றுக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் (பி.ஜே.பி) மூத்த தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி 'வன்முறை நீங்கிய அமைதி தவழும் நாடாக இலங்கை மாற வேண்டும். அதற்கு ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு என அனைத்து இலங்கையர்களும் பணியாற்ற வேண்டும்!'. சாதீய வெறிபிடித்த பி.ஜே.பி தமிழ் நாடு மற்றும் மலயான பார்ப்பனக் கும்பலின் சொற்படி ஈழத் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படும்.

* * *

### சிங்கள கத்தோலிக்க பேரினவாதம்.



இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் 2008/09இல் கொல்லப்பட்ட போது சிங்கள கத்தோலிக்க ஆயர்கள் வாய்மூடி மௌனமாக இருந்தனர். இப்போது இலங்கை கத்தோலிக்கப் பேராயர் மஹிந்தவிற்கு வக்காலாத்து வாங்கி அமெரிக்காவிற்கு கடிதம் எழுதியமையும் அம்பலமாகியுள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி வணக்கத்துக்குரிய தந்தை பிரான்ஸிஸ் ஜோசப், வத்திகானுக்கு திறந்த கடிதம் ஒன்றை எழுதியிருந்தார் அதன் பின் அவர் காணாமற் போய்விட்டார்.

* * *

### சுனாமி வருமா? வராதா?



காலநிலையை எவ்வாறு கணிக்க முடியாதுள்ளதோ அதேபோன்று எமது நாட்டின் முன்னுள்ள சர்வதேசத்தின் சவால்களை எங்களால் கணிக்க முடியாது. இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார். சுனாமியும் வரலாம்.

* * *

### சூட்டிங் நடந்ததா?



ராதிகா குழுவினரின் 'வணக்கம் இலண்டன்' நிகழ்ச்சிக்கு தனது மகளை 'தமிழ் நிகழ்ச்சிகள்' பார்க்க வேண்டும் வா என்று தம் அழகிய மகளை அழைத்துச் சென்ற பெற்றோர்க்கு பெரிய இடி. அங்கு சென்ற மகளுக்கு ஒருவர் சினிமாவில் நடிக்கவரும்படி அழைத்துவலை விரித்துவிட்டாராம். மகளும் விழுந்து விட்டார். இப்போது தலையில் அடித்துக் கொள்கிறார்கள் பெற்றோர்கள். சனம் திருந்தாது தமிழில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழ் நிகழ்ச்சிகள் அல்ல. இப்போ பெரிய பிரச்சனை 'சூட்டிங்' நடந்ததா என்பது தான்.

* * *

### எந்த மொக்கையனும் இந்தியப் பிரதமராகலாம்.



இந்தியாவின் அடுத்த பிரதமர் ராகுல் காந்திதான் என்று கூறிய இந்திய நிதியமைச்சர் பிரணாப் முஹர்ஜி அத்துடன் நிறுத்தவில்லை. இந்தியா ஒரு 'ஜனநாயக நாடு' இங்கு எவர் வேண்டுமானாலும் பிரதமாராக வரலாம் என்றும் ஒரு 'பிட்டைப்' போட்டுள்ளார். எந்த மொக்கையனும் பிரதமராகலாம் என்று சொல்லாமல் சொல்கிறாரா?

* * *

### ஒரு முறை கொல்லப்பட்டவரை மீண்டும் கொல்வார்களா?



இந்திய உளவுத் துறை ஒரு முறை கொல்லப்பட்டவரை மீண்டும் கொல்வதில் வல்லவர்கள் என்பதைப் பல முறை நிருபித்தவர்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தியை பிரபாகரனையே இந்துப் பத்திரிகையில் வாசிக்க வைத்தவர்கள். இப்போது ராஜீவ் காந்தியை கொன்ற தற்கொலையாளியான தனுவிற்கு தாம் மரணதண்டனையை இந்திய உயர் நீதிமன்றில் வாங்கிக் கொடுத்ததாகத் தம்பட்டம் அடித்து மாட்டிக் கொண்டனர்.

*தொடர்ந்து கோர்த்து விடுவோம்...*

## உலகமே இவ்வளவு தானா !!!!

உலகமே இவ்வளவு தானா
வட்டமே சுழல்வதென்பார்
உலகமும் இப்படித்தானா,
வாழ்க்கையும் சக்கரமென்பார்
வந்தவை யாவும் அனுபவமென்பார்
வாழ்ந்த மனிதனை வணங்கிடுவார்
தாழ்ந்த மனிதனை பழித்திடுவார்
வந்ததை எண்ணி வருந்திடுவார்
வருவதை வேண்டி இகழ்ந்திடுவார்
வரும் காலம் என்று பயந்திடுவார்,

வா மனிதா வா வா
வந்தவை இதுவரை போனவை என்று
வாழ்ந்திடு மனிதா வாழ்ந்திடு,
உன்மனதை வாழவை
உன் மனம் உன்னை வாழ வைக்கும்
உன் வாழ்க்கையை வாழ்ந்திடு
உன் உள்ளத்தை பிறர்க்கும் பகிர்ந்திடு
உன் உள்ளத்தை உணர்ந்து வாழ்ந்திடு
உன் உள்ளம் அமைதி கண்டிடும்
வாழ்ந்திடு,


நேற்று இன்று நாளை எனும்
நாட்களும் ஒன்றுதான்
திரும்பத் திரும்ப வாழும்
வாழ்க்கையும் ஒன்று தான்,
உலகமே நீ தான் மனிதனே
மனிதனின்றி நீ தான் ஏது உலகமே !

உலகமே இவ்வளவு தான்
வட்டமே சுழல்வதென்பார்
உலகமும் இப்படித்தான்,
என்னதான் திரும்ப நடப்பதில்லை
நடப்பவை யாவும்- உலகின்
சுற்றுப்போல் என்று விளங்கினால்
உலகின் கவலையில் பாதியில்லை !

- எழுதியது
சிவசிவா

Vithu.com

# VITHU TRUST FUND














- Vithu Trust is a charity organisation dedicated to improve and safeguard the lives of Children inSri Lanka and raises voice for the needy.
- There are thousands of children who go through the day without a single nourishing meal. They include victims of war, which has thrown the bread - winners of these families out of work and the future of our youngsters into darkness.
- Your contribution as a donor, no matter how big or small, will make a huge difference in the lives of these children.
- With your donation we help children in need o food, shelter, education, Counselling & medical.

**விதியை மதியால் வெல்லலாம்!**
**Vithu Trustஆல் பலரின் விதியை மாற்றலாம்!!**

Contact : **Vithu Trust Fund**

**T : +44 208 407 5767 - M : +44 796 144 1237**

Registered charity since 2004 in England & Wales - 1107418
W : www.vithu.com - E : charity@vithu.com

Bank Details

## VITHU TRUST FUND

Account No : 92205262 · Sort Code : 40-18-41
HSBC, Croydon Branch 9 Wellesley Road, Croydon, CR9 2AA, UK

# காலத்துடன் தொலைந்து போன பயணத் தோழன்..!

நா.க.சுபேஸ்
(ஒரு பேப்பருக்காக)

மிதிவண்டியைப்பற்றி பலரும் பலநூற்றுக்கணக்கான பதிவுகளை எழுதியிருப்பார்கள் ஆனாலும் மிதிவண்டியுடனான எனது நினைவுகளை என்னால் எழுதாமல் இருக்கமுடியவில்லை.அன்று ஞாயிற்றுக்கிழமை வார நாட்கள் முழுவதும் கலகலத்துக்கொண்டிருந்த பாரிஸ் புறநகரின் ஆரவாரம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டிருந்தது.அந்த நகரின் ஓயாத இரைச்சலை விழுங்கிவிட்டு அமைதிஎங்கும் படர்ந்திருந்தது. தெருக்களில்வேலைநாளின் அவசரமின்றி அங்கங்கு ஆறுதலாகப் போய்க் கொண்டிருந்த ஒன்றிரண்டுமோட்டார் வண்டிகளைத்தவிர தார் வீதியின் கருமையும் அமைதியுமே வழிநெடுக நிறைந்திருந்தது. யாழ்ப்பாணத்து வீதிகளில் மாலைப் பொழுதுகளில் முகத்திலடிக்கும் அதே மெல்லிய மஞ்சள் நிறவெய்யில் அன்று பாரிஸிலும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது. ஊரில் இருந்திருந்தால் இந்நேரம் ஒரு பிளேன்ரியும் வடையும் கடிக்க மிதிவண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டிருப்பேன்.உலையில் கொதித்துக்கொண்டிருக்கும் சுடுநீரில் இருந்துமேலெழும் நீர்க்குமிழிகள் போலமனக்குளத்தில் நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக குமிழியிட்டுக்கொண்டிருந்தன.என்னால் வீட்டிற்க்குள் இருக்க முடியவில்லை.காலணியை மாட்டிக்கொண்டு பக்கத்திலிருக்கும் பூங்காவிற்கு காலாற நடந்துவரக் கிளம்பினேன்.

எனதுவீட்டில்இருந்துவெளிப்பட்டுப்பிரதான வீதியில், இணைந்தபோது இப்படியொரு காட்சி. ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி பின்புறம் இருக்கை பொருத்தப்பட்ட மிதிவண்டி ஒன்றைமிதித்துக் கொண்டிருந்தாள். பின்னிருக்கையில் பாதுகாப்புப் பட்டி பொருத்தப்பட்ட அவரின் சின்னக்குழந்தை.அவர்களின் பின்னே அந்தப் பெண்மணியின் மற்றைய இரண்டு குழந்தைகள் ஆளுக்கு ஒரு சிறிய மிதிவண்டியில். எல்லோருக்கும் பின்னால் கடைசியாக அந்தப்பெண்மணியின் கணவர் மிதிவண்டியில் அவர்க்ளைத் தொடர்ந்து கொண்டிருந்தார். எல்லோர் தலைகளிலும் தலைக்கவசமும் உடலில் பச்சை நிற பாதுகாப்பு ஜக்கெற்றும் மாடியிருந்தார்கள். அந்தப் பெண்மணியின் துவிச்சக்கரவண்டியின் பின்னிருக்கையில் இருந்த குழந்தையின் தலையிலும் தலைக்கவசம் மாட்டிவிட்டிருந்தார்கள். அந்தக் குழந்தை தலைக்கவசத்துடன் அழகாக அங்குமிங்கும் பார்த்தபடி போய்க்கொண்டிருந்தது. ஒரு அழகிய ஊர்வலம்போல் மெதுவாக ஒன்றின்பின் ஒன்றாக அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.அவர்களிடம் நகரத்தின் அவசரம் எதுவுமிருக்கவில்லை.சூழலின் அமைதியைக் குலைக்கும் இரைச்சல் மிகுந்த, புகை கக்கும் ஊர்திகள் எதுவுமிருக்கவில்லை.அவர்கள் முகத்தில் குதூகலமும் புன்னகையும் குடிகொண்டிருந்தது.வெள்ளைக்க்காரர் மத்தியிலும் இப்படிக்கூட்டுக் குடும்பங்களை காணும் போது எனக்கு நிறைவாக இருக்கும் அதே வேளை ஊரின் நினைவுகளையும் அது கிளறி விட்டுப் போய்விடும். எனக்கும் இப்படி ஒரு மிதிவண்டி வாங்கி ஓடவேண்டும் என்று பலநாள் ஆசை. ஆனாலும் பாரிஸ் நகரத்தின் வீதிகளில் யாரைப்பற்றியும் கவலையின்றி விரையும்வாகனங்களுக்குப்பயந்துஎனது ஆசையை கிடப்பில் போட்டிருந்தேன். இவ்வளவு நெருக்கடி மிகுந்த இயந்திரத்தனமான வீதிகளிலும் பயமின்றி மிதிவண்டிகளில் செல்பவர்களைப்பார்த்தால் எனக்கு கொஞ்சம் பொறாமையாக இருக்கும். அதிலும் குடும்பமாக மிதிவண்டியில் செல்பவர்கள் எவ்வளவு கொடுத்துவைத்தவர்கள்.அவர்கள்தான் எத்தனை நெருக்கமாக வாழ்க்கையை உணர்கிறார்கள். இந்த இயந்திரத்தனமான வாழ்க்கையில் இருக்கும் இறுக்கங்களையும் மன அழுத்தங்ளையும் கரைத்து விடுகின்றன மிதிவண்டிப் பயணங்கள்.

கவலைகளைப்பற்றிய வாசனைகள் எதுவுமறியா என் சிறுவயதுக்காலங்களில் அமைந்த ஒரு மென்மையான நாளில்தான் என் முதல் மிதிவண்டி ஓட்டிய அனுபவம் கிடைத்திருந்தது. முழுமை பெறாத ஒரு மிதிவண்டி ஓட்டலாக அது அமைந்திருந்தாலும் என் வாழ்நாளில் மறக்கமுடியாத அனுபவமாக அமைந்து என் மனக்குளத்தில் தேங்கிவிட்டிருக்கிறது அந்த நாளின் வாசனைகள்.எனது தந்தையிடம் ஒரு கறுப்பு நிற றலி சைக்கிள் நின்றது.அதன் உயரமும், நீண்டு அகன்ற அதன் இருக்கையும் மரச்சட்டம் போட்ட பின் இருக்கைகளும் எனக்குப் பயத்தை உண்டு பண்ணி அதை ஓட்டிப்பார்க்க நினைக்கும் என் ஆசையைத் தடுத்துக்கொண்டிருந்தன. எனது தந்தை பாடசாலை விடுமுறை நாட்களில் கிடைக்கும் சில நேரங்களில் ஒரு துணியும் சிறிய பாத்திரத்தில் கொஞ்சம் எண்ணெயும்தந்து அந்த மிதிவண்டியை துடைக்கச்சொல்வார். எங்கள் வீட்டு முற்றத்தில் சிமெண்ட் மேடை ஒன்றுஇருந்தது. அந்தமேடையின் மேல் மிதிவண்டியை கவிழ்த்து தலைகீழாக நிறுத்திஒவ்வொருகம்பியாகத்துடைத்து றிம், மக்காட் என்றுமுழுச்சைக்கிலையும் துடைத்து முடிக்கும்போது அது பளபளவென்று அப்பொழுதுபிறந்த கன்றுக்குட்டிபோல் மினுங்கிக்கொண்டிருக்கும். அப்பொழுதிலிருந்தே மிதிவண்டி ஓட்டுவது குறித்த கனவுகள் என்னுள் முகிழ்விடத்தொடங்கியிருந்தன. மிதிவண்டியின் பின்னிருக்கையில் புத்தகப்பையை செருகியபடி எல்லோரும் பார்க்க நான் மிதிவண்டியில்போயிறங்குவதாககற்பனைசெய்துகொள்வேன். கொஞ்சம் கொஞ்சமாக மிதிவண்டியோடு நான் நெருக்கமாக உணர ஆரம்பித்திருந்தேன்.

காலத்தின் சக்கரங்களில் நாட்கள் தேய்பட மிதிவண்டியின் உயரத்துடன் என் உயரமும் சமனாக இருப்பதாக உணர்ந்த நாளொன்றில் தான் மிதிவண்டியை ஓட்டிப்பார்ப்பதற்கான முதல் முயற்சியை செய்து பார்த்தேன். ஐந்து நிமிடங்களுக்குமேல் நீடிக்காத அந்த பரிசோதனை முயற்ச்சியில் நான் தோற்றுப்போய் விட்டிருந்தேன். ஒற்றைக்காலால் பெடலை மிதித்தபடி மற்றைய காலை நிலத்தில் ஊன்றி ஊன்றிக் கொஞ்சத்தூரம் நகர்ந்தாலும் துவிச்சக்கரவண்டியின் 'கான்ரிலை' எனது கட்டுப்பாட்டிற்க்குள் கொண்டுவர முடியவில்லை. அங்குமிங்கும் ஆட்டம் காட்டியபடி என்னைச்சிறிது தூரம் இழுத்துச்சென்ற மிதி வண்டி அந்தக் கல்லு வீதியின் நடுவில் பொத்தென்று என்னையும் இழுத்து விழுத்திவிட்டு முன் சில்லு சுற்ற சிரித்தபடி கிடந்தது. எழுந்து மிதிவண்டியை நிமிர்த்திய எனக்கு காதுப்பக்கம் ஏதோ ஊர்வதுபோல் இருந்தது. கைவைத்து பார்த்த பொழுது ரத்தம் உச்சம் தலையில் இருந்து சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. அப்படியே வீட்டிற்குவர ரத்தத்தைப் பார்த்த அம்மா அழுதபடி நாலு வீடு தள்ளி இருந்த முருகேசு ஜயாவிடம் என்னைக் கூட்டிப் போனார். முருகேசு ஜயா தமிழ்ப் பரியாரி. காயம் பட்ட இடத்தில் இருந்த தலைமுடியை வட்டமாக வெட்டியகற்றி அந்த இடத்தில் சுண்ணாம்பு போல் வெள்ளை நிறத்தில் இருந்த ஏதோ ஒரு மருந்தைப்பூசி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

தலைக்காயம் மாற மறுபடியும் துவிச்சக்கர வண்டி ஆசை என்னுள் வந்திருந்தது. இந்த முறை அப்பாவினதும் அம்மாவினதும் உதவியுடன் ஒரே நாளில் துவிச்சக்கரவண்டி ஓடக்கற்றிருந்தேன். ஆனாலும் என்னால் அந்த முதல்நாள் ஐந்து நிமிட ஓட்டத்தை மறக்க முடிய வில்லை. அன்றிலிருந்து ஏறத்தாழ பதின்நான்கு வருடங்கள் நானும் மிதிவண்டியும் இணைபிரியாத நண்பர்களாகிவிட்டிருந்தோம்.என்னுடைய எல்லாப்பயணங்களிலும் கூடவேவரும் நண்பனாக என்னை அது சுமந்து கொண்டிருந்தது.

நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது அப்பா எனக்கு கறுப்பு நிற 'லுமாலா' சைக்கில் ஒன்றை வாங்கித்தந்திருந்தார். என் மகிழ்ச்சி முழுவதையும் உருக்கிச் செய்த கறுப்பு நிற இரும்புத் தோழனாக முற்றத்தில் நெஞ்சை நிமிர்த்தி நின்று கொண்டிருந்தது அந்த மிதிவண்டி. அன்றைய நாள் முழுவதும் வானத்திலிருந்து தேவதைகள் இறங்கிவந்து என் பாதங்களை தரையில் தங்கிவிடாமல் தாங்கிப்பிடித்துக்கொண்டிருந்தார்கள். அன்றைய பகலும் இரவும் என் தோள்களில் மலர்களைத் தூவிக் கொண்டிருந்தன. பறந்து பறந்து நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று என் புதிய மிதிவண்டியைக்காட்டி அவர்களின் கருத்துக்களைச் சேகரித்துக்கொண்டேன். அழகிய 'ஸ்டிக்கர்'களை வாங்கி ஒட்டி அலங்கரிப்பது, கலர்கலரான நூல்களை வாங்கி சக்கரங்களின் கம்பிகளில் கட்டுவது, மக்காட்கல்லு வேண்டிப்பூட்டியது என்று அந்த விடுமுறை முழுவதும் அந்த மிதிவண்டியே என் நாட்களை ஆக்கிரமித்திருந்தது. விடுமுறையும் முடிந்து நானும் மிதிவண்டியும் ஓடிஓடிக் களைத்துப்போயிருந்த ஒரு நாளில்தான் அந்த இடப்பெயர்வும் வந்தது. ஊர்கூடித்தெருவிலே மூட்டைமுடிச்சுக்களுடன் ஊர்ந்துகொண்டிருந்தபொழுதொன்றிலே என் தோழனும் எங்கள்வீட்டுப் பொருட்களில் கொஞ்சத்தை சுமந்துகொண்டு என்னுடன் கூட நகர்ந்துகொண்டிருந்தான்.கிளாலிக்கரையில் பல போராட்டங்களுக்கு மத்தியில் எனது மிதிவண்டியையும் விடாப்பிடியாக படகேற்றி வன்னி கொண்டுபோய்ச் சேர்த்திருந்தேன். வன்னி வீதிகளின் புழுதியையும் செம்மண்ணையும் குடித்தபடி சலிக்காமல் அந்த ஒருவருடம் முழுவதும் என் எல்லாப் பயணங்களிலும் என்னைச் சுமந்து கொண்டு திரிந்தது என் மிதிவண்டி.வன்னியில் என் மிதிவண்டிக்குப் பல சோதனைகள். குடமுடைந்தது. செயின் அறுந்தது, ரியூப் வெடித்தது என்று அந்த ஒருவருடமும் அதற்க்கு சோதனைமேல் சோதனைகள். பல நூறுமுறை பஞ்சராகி உடம்பு முழுவதும் பல காயங்களை வாங்கியிருந்தன இரண்டு 'ரியூப்களும்'.வன்னியில் ஒரு வருடத்திற்க்குமேல் தாக்குப் பிடிக்க முடியாமல் நாங்கள் எல்லோரும் யாழ்ப்பாணம் நகர்ந்தபோது எனது மிதிவண்டியும் எங்களுடன் இழுபட்டுக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டிருந்தது.


வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் திரும்ப முடிவெடுத்த பொழுதொன்றில் வயதாகிப்போய் மூலையில்கிடந்த அப்பாவின் றலிச்சைக்கிலை பெரிய சுமையாக உணர்ந்த வீட்டார் அதை வன்னியிலேயே விற்றுவிட்டு யாழ்ப்பாணம் போகத்தீர்மானித்தனர்.றலிச்சைக்கிள் எங்களை விட்டுப் பிரியப்போவதை நினைத்து எரிந்து கொண்டிருந்த என் மனதைப்போலவே எரித்துக் கொண்டிருந்த வெயில் நாளொன்றில் வன்னி விவசாயி ஒருவருக்கு நல்லவிலைக்கு அந்தச் சைக்கிலை விற்றுவிட்டு பயணச்செலவுக்காக அப்பா அந்தப் பணத்தை எண்ணிப் பத்திரப்படுத்திக்கொண்டார். யாழ்ப்பாணம் போகப்போவதை எண்ணி வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியோடும், திளைப்போடும் இருந்தபோது ஏனோ எனக்கு மட்டும் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. வீட்டின் ஒரு மிகமூத்த உறுப்பினரை இழந்துவிட்டது போன்ற உணர்வு என் உடலெங்கும் பரவி இருந்தது. அந்தச் சைக்கிலுடன் சேர்த்து மிதிவண்டியுடன் ஒட்டிக்கிடந்த எனது சிறுவயது ஞாபகங்களையும் யாரோ பறித்துச் சென்று விட்டதைப்போலவே உணர்ந்தேன். துருதுருவென்று நீட்டிக்கொண்டிருந்து சிறுவயதுகளில் என்னைப் பயமுறுத்திய அதன் இருக்கை, சட்டம்போட்ட பின்னிருக்கை, சக்கரக்கம்பிகளில் சுற்றிக்கட்டியிருந்த கலர்கலரான நூல்கள்,சைக்கிலை துடைக்க செயின்கவறை ஒட்டிச் செருகியிருந்த எண்ணெய் தோய்த்த அழுக்குப்படிந்த துணி,புழுதி படிந்த வீதிகள், மிதிவண்டியின் பின்னால் ஓடிவரும் நண்பர்கள் என்று அந்த மிதிவண்டியோடு சேர்த்து காலம் பலவற்றை அள்ளிச் சென்றுவிட்டாலும் புதிய நினைவுகளைஉள்வாங்கிக்கொண்டுவாழ்க்கை நின்றுவிடாமல் வயதான அந்த மிதிவண்டியின் சக்கரங்களைப்போல இன்னமும் சுற்றிக் கொண்டுதான் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் காலத்துடன் சேர்ந்து நானும் என் மிதிவண்டியும் வளர்ந்து தேய்ந்து கொண்டிருந்ததோம். முதுமையின் அடையாளங்களைச் சுமந்துதிரியும் மனிதர்களைப் போலவே காலத்தின் நீட்ச்சியில் என் கறுப்பு நிற மிதிவண்டியும் மெல்லமெல்ல தன் நிறம் மங்கி கொஞ்சம்கொஞ்சமாக அதன் ஆரம்ப கால களையை இழந்துவிட்டிருந்தாலும் என் எல்லாவற்றிலும் அது என்னுடன் கூடவே இருந்தது. இடப்பெயர்வுகளின் போது சுமைகளைப் பகிர்ந்துகொண்டதில், இழப்புகளில் துவண்டு கிடந்த நேரம்களில் -தனிமையைத் தேடிப் பயணிக்கையில், பந்து விளையாடும் மைதானத்தில், கோவில் வீதியில் நண்பர்களுடனான அரட்டைகளில்,மதவடியில்வெட்டியாக நிற்கையில், நண்பணிண் காதலுக்கு தூதாகப் போகையில், போரில் இறந்த தோழனின் மரணச் செய்தியை சுமந்து செல்கையில் என்று எல்லாவற்றிலும் கூடவே வந்தது என் மிதிவண்டி. பாடசாலை செல்லும்போதும், முடிவடைந்து வரும் போதும் வெள்ளைக் கொக்குகளைப் போல் வீதி நீளத்திற்க்குப் போகும் பள்ளித்தோழர்கள்,அழகான பள்ளிக்கூடத் தோழிகளின் புன்னகைகள், மெதுமெதுவாகப் பின்னே போகும் கிழுவை வேலிகள், பூவரசுகள்,மதில்கள், தண்டவாளமின்றி.......

(தொடர்ச்சி 28ம் பக்கம்)


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

# நிரந்தரமாக விடைபெற்றுக் கொண்டார் Steve Jobs!



உலகெங்கும் வாழும் அப்பிள் கணணி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொருட்களின் அபிமானிகள் தமது ஆதர்ச புருசராக ஏற்றுக் கொண்டிருந்த ஸ்ரீவ் ஜொ:.ப்ஸ் இம்மாதம் ஐந்தாம் திகதி சாவடைந்தார். ஐமக், ஐபோன், ஐபொட், ஐபாட் என ஐ வரிசை பொருட்களின் சிற்பி என்பதனால் அவரது அபிமானிகள் தமது முகநூல் படங்களாக ஐசாட் (iSad) எனப் போட்டிருக்கிறார்கள. சதையப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஸரீவ் இவ்வருடம் ஒகஸ்ட் மாதத்தில் அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாகிப் பொறுப்பிலிருந்து ஒய்வு பெற்றார், இப்பொழுது அவரது உடல் நிரந்தரமாகவே இயக்கத்தை இழந்து விட்டது.

இம்மாதம் 4ம் திகதி அப்பிள் நிறுவனம் தனது புதிய பொருட்கள் பற்றிய அறிவித்தலை வெளியிட வழமை போல் ஒரு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் அப்பொருட்களை அறிமுகப்படுத்தும் ஸ்ரீவ் இம்முறை வரவில்லை. அந்த வெற்றிடம் நன்கு உணரப்பட்டது. இனி அது நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இருக்கப் போகிறது.

1955ம் ஆண்டு பெப்பிரவரி 24ம் திகதி பிறந்த ஸ்ரீவ், போல் ஜொ:.ப்ஸ், கிளாரா ஜொ:.ப்ஸ் தம்பதிகளால் தத்து எடுக்கப்பட்ட வளர்க்கப்பட்டார். ஸ்ரீவ் இன் உண்மையான தந்தை யார் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

*அவரது வாழ்வில் சில முக்கிய தருணங்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளது:*

**1972:** ஸ்ரீவ் Portland உள்ள Reed கல்லூரியில் இணைந்தார் எனினும் அவர் முதல் செமஸ்டரிலேயே படிப்பை நிறுத்திவிட்டார்.

**1976:** ஏப்பிரல் முதலாம் திகதி. அப்பிள் கணனி உருவாக்கப்படுகிறது. அவ்வரும் வேனில் காலத்தில் அது விற்பனைக்கு வந்தது.

**1977:** அப்பிள் நிறுவனம் கூட்டு நிறுவனமாக்கப்படுகின்றது.

**1980:** அப்பிள் நிறுவனம் முதல் முறையாக தனது பங்குகளை வெளியிட்டு 110 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டிக் கொண்டது.

**1982:** அப்பிள் நிறுவனத்தின் வருடாந்த வருவாய் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாய் அதிகரிக்கின்றது.

**1984:** அப்பிளின் மக்கிண்ரொஸ் கணனிகள் விற்பனைக்கு வந்தது

**1985:** நிறுவனத்தின் அப்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரி Mike Markkula உடனான முரண்பாடு காரணமாக, ஸ்ரீவ் அப்பிளில் இருந்து பதவி விலகுகின்றனர்.

1986: ஸ்ரீவ் NeXT என்ற நிறுவனத்தை ஆரம்பித்ததுடன், X-windows தொழிநுட்பம் கொண்ட கணனிகளை பல்கலைக்கழகங்களுக்கென தயாரிக்கத் தொடங்குகின்றார்.

1989: முதலாவது NeXT கணனி விற்பனைக்கு வந்தது

1991: அப்பிள் மற்றும் IBM நிறுவனங்கள் இணைந்து கணனிகளுக்கான புதிய மைக்ரோபுரசசர்கள் மற்றும் மென்பொருட்களை உருவாக்கவுள்ளதாக அறிவித்தன. Powerbook என்றழைக்கப்படும் காவிச் செல்லக்கூடிய கணனிகளை அறிமுகப்படுத்துகின்றது.

**1996:** ஸ்ரீவ் மற்றும் அவரது குழு இணைந்து உருவாக்கிய NeXT நிறுவனத்தின் இயங்குதளத்தினை 430 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்யும் திட்டத்தினை அப்பிள் அறிவிக்கின்றது.

**1997:** ஸ்ரீவ் அப்பிள் நிறுவனத்தின் இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்கின்றார்.

**2000:** ஸ்ரீவ் அப்பிள் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்கின்றார்.

**2001:** முதல் iPodவிற்பனைக்கு வருகின்றது. iTunes மென்பொருளை வெளியிடுகின்றது.

**2004:** கணையப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஸ்ரீவ் சத்திரசிகிச்சைக்கு முகங்கொடுக்கின்றார்.

**2006:** ஸ்ரீவ் இன் பிக்ஷர் நிறுவனத்தை டிஸ்னி நிறுவனம் வாங்கியது. இந்த நிறுவனத்தின் மூலம் ஸ்ரீவ் சிறுவர்களுக்கான Toy Story போன்ற பல animation படங்களை உருவாக்கியிருந்தார்.

**2007:** அப்பிள் தனது முதல் கையடக்கத் தொலைபேசியான iPhone வெளியிடுகின்றது.

**2009:** ஸ்ரீவ் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்கு முகங்கொடுக்கின்றார்.

**2011** ஜனவரி 17: ஸ்ரீவ் இரண்டாவது தடவையாக மருத்துவ விடுமுறையில் செல்வதாக அறிவிக்கின்றார்.

**2011** ஒகஸ்ட் 24: ஸ்ரீவ் தான் அப்பிளின் நிறைவேற்று அதிகாரி பதவியிலிருந்து விலகுவதாக அறிவிக்கின்றார்.

**2011** ஒக்டோபர் 5: ஸ்ரீவ் காலம் ஆனார்.

உலகில் ஆப்பிள் பழத்தை கடிக்கும் போது எல்லாம் ஆதாம்,நிட்டன்,ஸ்டீவ் போன்றவர்கள் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியாது.. முக்கியமாக கடித்த ஆப்பிளை ஆதாமே மறந்து போனாலும் நாம் ஸ்டீவை மறக்க முடியாது...

எத்தனையோ பேரின் விருப்பங்களை படைப்புகளாக்கி காட்டிய பல அடிச்சுவடுகளை விட்டுச்சென்ற அந்த மனிதரின் ஆன்மா சாந்தியடையட்டும்.

Thank you Steve!!!

## இணையத்தில் பொறுக்கியது.......

**தொகுப்பது : சமூக வலைப்பொறுக்கி**

அப்ப இனி ராஜபக்சே அமெரிககா வர ஏலாதோ — கெட்டிக் காரன் புழுகு எட்டு நாளைக்குத் தான். *@Sos Tamils*

- பிரதமர் உருத்திர குமாரன் ராஜபக்சேக்கு எதிராக வழக்கு பதிவு செய்தார் என , வானொலி , தொலைக்காட்சி , இணையம் என கும்மாளமடிக்கும் எவராவது வழக்கு வாய்த்த ஆதாரத்தை வெளியிட்டால் இந்த வலி எல்லாம் தேவை இல்லையே ?
- உருத்திரகுமாரன் சொன்னால் எதிர்த்துப் பேசாத தயாபரன் , மொரிஸ் , துணைப் பிரதமர் சிவலிங்கம் எல்லால்ரும் அவர் சொல்வதைத் தானே சொல்வார்கள் .
- இதே போல் வழக்கு திருமலை மாணவன் தொடர்ப்பாக கடந்த ஜனவரியில் பதிவு செய்யப்பட்டது அதற்கு என்ன நடந்தது என்பதையும் கையோட சொல்லுங்கோ .
- இந்த வழக்கு என்னாச்சு என்று அடுத்த தடவை மகிந்த அமெரிக்கா வரும் போது கேட்கப்படும் மறக்கவேண்டாம் . கெட்டிக் காரன் புழுகு எட்டு நாளைக்குத் தான் .
- அப்ப இனி ராஜபக்சே அமெரிக்கா வர ஏலாதோ !!!!

எனக்கும் பிரணாப் முகர்ஜிக்கும் 2 ஜி விவகாரம் தொடர்பாக தகராறு நடந்தது பற்றியோ நான் ராஜினாமா செய்ய முன்வந்தது பற்றியோ, அது சமசரத்தில் முடிந்தது பற்றியோ சொல்லப்படுவை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. காரணம் எனக்கு ஞாபக மறதி நோய் உள்ளது - ப.சிதம்பரம்.

மூன்றாம் பிறை சிறீதேவியை மிஞ்சிட்டிங்களே பி.சி...ஆட்ரா ராமா..ஆட்ரா ராமா.......@ *Manushya Puthiran*

கேப்டன் உள்ளாட்சி தேர்தலுன்னு சொல்றதுக்கு பதிலா உளறலாட்சி தேர்தல் என சொல்வதை பிரேமலதா மட்டுமே ஏற்றுக்கொள்வார்! *# சின்னப்புள்ள மாதிரியே கதைக்கிறார் @நையாண்டி*

உங்கள் கருத்துக்களையும் ஒரு பேப்பர் இணையத் தளத்தில் பதியுங்கள்.
*: www.facebook.com/orupaper* *: www.twitter.com/orupaper*

## எதுவும் கேட்க வேண்டாம்.........

என்னை எதுவும் கேட்க வேண்டாம்
என் அம்மா சொல்வது போல் நான்
வேண்டுமென்றே
எந்த எந்தவொரு ஆணின் முன்பும்
"இளித்து"க்கொண்டு நிற்பதில்லை
என் முக அமைப்பு அப்படி
நான் சும்மா நின்றாலே "அவளுக்கு
அது
சிரிப்பது போலிருக்கும்

என் அண்ணன் சொல்வது போல்
"மாப்பிள்ளை பிடிக்க" நான் "பேஸ் புக்"
பயன் படுத்துவதில்லை
என்னுடன் "சட்" செய்யவந்து
விட்டு என் வயதைஊரை
சாதியை சமயத்தை
ராசியைநட்சத்திரத்தை
தொலைபேசி இலக்கத்தை
என் அங்கங்களின்
பரிமாணங்களை
மாதவிடாய் வரும் நாட்களை........

சொல்லாவிட்டால்
தூஷணங்களால் என்னை
ஏசாதீர்கள்

நான் செய்வதெல்லாம்
எனக்குப் பிடித்தவர்ருக்கு
வெறுமனே "லைக்" என்று
குறிப்பிடுவதும்
கருத்துக்கள் இடுவதும்
மட்டும் தான்

"நீ ............... கிழவங்களுக்கு
மட்டுந் தான்
கருத்துக்கள்
போடுவியா வேசை" என்று
இனியும் ஏசாதீர்கள்.

நான் செய்த தெல்லாம்
எனக்குப் பிடித்தவற்றுக்கு
கருத்துக்கள்
போடுவது மட்டுந்தான்!

இனியும் கேளாதீர்கள் !
நீங்கள் கேட்டு நான்

தாரணி






# ஆனந்தி அக்காவின் துணைவர்

'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்' என்று பெருமை பொங்கப் பலர் கூறுவதை நான் கேட்டதுண்டு இது பெண்களை பெருமைப் படுத்துகிற ஒரு வாக்கியம் என்றும் நாம் கூறிக் கொள் வோம். ஆனால் இவ்வாக்கியம் நமக்குத் தரும் செய்தி என்ன ஆண் மாத்திரமே வெற்றிக்குரியவன் வேண்டுமானால் ஒரு பெண் அவ் ஆணின் வெற்றிக்குப் பின்னால் நின்று உதவி செய்யலாம் அல்லது உறுதுணையாக இருக்கலாம்.

'ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னும் ஆண் இருக்கிறான்'. என்ற சொல்ல ஏன் எம்மால் முடிவதில்லை? இதற்கு வலு சுலபமாக எங்களுக்குப் பதில் தெரியும். பெண்ணாணவள் வெற்றிக்கு உரியவள் அல்லள். கணவனுக்கு 'பணி புரியவும் படுக்கை விரிக்கவும்' மாத்திரமே உரியவள். அதற்கப்பால் அவள் வெற்றி என்ற சொல்லுக்கு அருகே கூட நெருங்க முடியாது. இந்திரா காந்தியோ, ஜெயலலிதாவோ வெற்றி பெற்றவர்கள் என்றால் எந்த ஆண் அவர்களின் பின்னின்று உழைத்தான்?.தங்கள் ஆளுமையினாலேயே அவர்கள் வெற்றி பெற முடிந்தது.

இதைத் தொட்டுத்தான் ஆனந்தி அக்காவின் துணைவரின் சாவு குறித்து என் வணக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனந்தி அக்காவின் வெற்றிக்குப் பின்னால் அவரது துணைவர் சூரியப்பிரகாசம் அவர்கள் நின்றார் என்று ஒப்புக்கும் நான் கூற மாட்டேன். அது சிலவேளை ஆனந்தி அக்காவின் ஆளுமையை பழிப்பதாகவும் ஆகிவிடும். இதனை நான் எப்படிப் பார்த்தேன் எனில் ஆனந்தி அக்காவின் ஆளுமை விசாலித்துக் கொண்டு போகிறபோது அதற்காக ஒரு 'வெளியை' உருவாக்குவதில் ஆனந்தி அக்காவின துணைவருக்கும் பெரும் பங்கு இருந்திருக்கிறது. அந்த வகையிலே அவரை நான் மெச்சுவேன்.

எமது தமிழ்ச்சமூகம் தமிழ்ப்பெண்ணின் மீது இரட்டை ஒடுக்குமுறையை திணிக்கிறது. ஒன்று ஆணாதிக்கம் மற்றது பண்பாடு என்ற பெயரில் ஆதிக்கம். இவற்றை மீறி இப்போதைய தலைமுறைப் பெண்கள் எழுந்து வரலாம். ஆனால் ஆனந்தி அக்கா காலத்தில் பெண்களால் எழுந்து வரமுடியாது. ஒரு பெண்ணைத் தீர்மானிப்பவனாக அல்லது பெண்ணுக்காகச் சிந்திப்பவனாக எப்பொழுதும் ஆணே இருக்கிறான். மகளாக இருந்த போது தந்தையும், தங்கையாக இருந்த போது தமையனும், மனைவியாக இருந்த போது கணவனும், தாயான பிறகு மைந்தனுமாக அதனைச் செய்கிறார்கள்.

ஆனந்தி அக்காவிற்கும் இது நிகழ்ந்திருக்கக்கூடும் ஆனால் அவர் மனைவியான போது துணைவர் ஆனந்தி அக்காவிற்காக சிந்திப்பதை மறுத்து ஆனந்தி அக்காவின் சுய சிந்தனைக்கு ஊக்கமளித்திருக்கிறார். ஆனந்தி அக்கா அதனால் ஆளுமையின் வீச்சுப் பெற்றார். ஆணாதிக்க சமூகத்தில் இது அபூர்வமான நிகழ்வு. அதனால் ஆனந்தி அக்காவின் துணைவர் எம்மதிப்பில் மேலும் உயர்கிறார்.

இப்பொழுது நான் ஆனந்தி அக்கா குறித்து கொஞ்சம் பேச விரும்புகிறேன் ஒருவர் வாழும் போதே அவர் ஆளுமையை நாம் எடுத்து உரைப்பதன் மூலம் அவரையும் அவருக்கு உறுதுணையாக இருந்தவர்களையும் கௌரவித்தவர்கள் ஆகிறோம். மேலும் ஒருவரின் இறப்பிற்குப் பின்னர் அவரது ஆளுமையை விதந்து பேசுவதால் என்ன பயன்?. மேலும் அவரவர் இறப்புக்கு முன் என் இறப்பும் சாத்தியம் தானே இவ்வாறு கூறுவதை 'அமங்கலம்' என்று தள்ளி வையாது கேளுங்கள் நண்பர்களே!

தொண்ணூறுகளின் ஆரம்பங்களில் தமிழீழ தேசத்தில் நான் தனிமையாகத் திரிந்தேன். குடும்பம் உண்டு என்றாலும் நண்பர்கள் என்று யாரும் இல்லை. அரசியல் அநாதையாக உலைந்தேன். கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் எனக்கும் என் துணைவிக்கும் பணி. எம் பிள்ளைகளைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மதியம் இரண்டு மணிக்குப் புறப்பட்டு சனிக்கிழமை விடிய நான்கு மணியளவில் வீடு போய்ச் சேர்வோம். கேரதீவு சங்குப்பிட்டி பாதையில் கொஞ்சக்காலமும் பிறகு கோடையில் 'ஊரியான்' பாதையும் மாரியில் 'கொம்படிப்' பாதையுமாகக் கொஞ்சக் கால மும் பிறகு கிளாலிப் பாதையையும் பயன்படுத்தினோம்.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

பிறகு ஞாயிறு இரவு பதினொரு மணிக்குப் பிற்பாடு புறப்பட்டோம் என்றால் திங்கள் காலை எட்டு மணிக்குப் பாடசாலை தொடங்க நிற்போம். ஒவ்வொரு கிழமையும் சுமார் நூறு மைல் அளவிற்கு மனைவியை சைக்கிளில் வைத்து உழக்கினேன். அவ்வாறு இரவு வெளியச் சைக்கிள் ஓடுகிற நேரத்தில் விளக்குக் கூடுபத்துகிற ஒரு கொட்டிலில் கரகரத்த ரேடியோவில் இருந்து ஒரு பெண்குரல் ஒலிக்கும். 'பி.பி.சிதமிழோசை' 'ஆனந்திசூரியப்பிரகாசம்' இந்த இரண்டு சொற்களும் ஒரு மந்திரம் செய்து அக்கொட்டிலை நோக்கி எம்மை கட்டி இழுத்துச் செல்லும். ஒரு சிறு பையன் சைக்கிளைத் தலைகீழாக வைத்து சில்லை வேகமாக உருட்டிக் கொண்டிருப்பான். சைக்கிள் டைனமோ மின் சாரத்தைப் பாய்ச்சி ஆனந்தி அக்கா சொல்ல வரும் உண்மைகளை எம் காதில் போடடுவிடும். ஆனந்தி அக்கா அப்பொழுது எமக்கு மாயமான ஒரு சக்தி.

அப்பொழுது காற்று எங்களுக்கு அச்சமூட்டும் செய்திகளையே காவி வந்தது. டமால் டுமால் என்ற குண்டு வெடிப்பின் ஓசைகளையும் கொணர்ந்து தந்தது. ஆனால் ஆனந்தி அக்கா காற்றிடம் செய்த வசியம் என்னவென்றால் எம்முதுகுத்தண்டு நிமிர நெஞ்சு நேராக செய்திகளை சொல்லிவிட்டிருந்தார். அந்த நேரத்துத் தமிழீழச் சூழலில் இருந்தோரால் தான் மாத்திரமே அதனை உணர முடியும்.

தொன்னூற்றிஇரண்டு மே மாதத்திற்குப் பிறகு கொழும்பு வந்தோம் தமிழீழத்தில் சுதந்திரமான காற்று இருந்தது இதுவோவென்றால் மூடுண்ட அறைக்குள் இருக்க வைக்கப்பட்டோம். அந்நிய ஊர், அந்நிய மணம், அந்நிய வாழ்வு சிங்களவர்கள் வாடகைக்குத் தந்த வீடு எனவே இரவு ஒன்பதரை என்றவுடன் ஜன்னல் வீடு வாசல் என்றான எல்லாக் கதவுகளையும் அடைத்துக் கொண்டோம். நாதஸ்வர ஓசை, பி.பி.சிதமிழோசை, ஆனந்திசூரியப்பிரகாசம் என்ற ஒலிகள், எதுவும் வெளியே கசியக்கூடாது கசிந்தால் இது 'புலியின் வீடு' என்றாகிவிடும். புலியின் வீடு என்றால் அக்கம் பக்கச் சிங்களவர்களால் ஆய்க்கினைகயள் அனேகம். ஆனந்தியக்கா அப்பொழுது நமக்குச் செய்தது கொடுமையா மகிமையா?

ஆனந்தி அக்காவின் வேறொரு ஆழுமையையும் அப்பொழுது கண்டேன். 'சரிநிகர்' பத்திரிகையில் நான் பணி புரிந்த காலம் தராக்கி சிவராம் என் உற்ற நண்பனாக இருந்ததும் அப்போது. ஆனந்தி அக்கா தலைவர் பிரபாகரனைச் சந்திக்க தமிழீழம் வருகிறார் அப்பொழுது விடுதலைப் புலிகளுடன் பேசிப் பறைந்து தராக்கி சிவராமுடனான விடுதலைப்புலிகளின் முரண்பாடுகளைக் களைகிறார். தராக்கி சிவராம் 'மாமனிதர்' என்ற வரை சென்று விட்டார்.

இத்தகு ஆளுமை கொண்ட ஆனந்தி அக்காவின் துணைவரின் சாவுக்கு வணக்கம் தெரிவித்து ஆனந்தி அக்காவிற்கு அன்பும் ஆறுதலும் சொல்கிறேன்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## உடல் இயக்கமும் மின்சாரமும்

எமது உடலின் ஒவ்வொரு அசைவும் மின்சாரத்தின் துணையுடனேயே நிகழ்கின்றது என்ற விந்தை மிகு தகவலைத் தருவதே இக்கட்டுரை. உயிரினங்களுக்கும் மின்சாரத்திற்கும் உள்ள இன்றியமையாத தொடர்பை அறிவியல் உணர்ந்ததன் விளைவாக இன்று பல்கலைக் கழகங்களில் அந்த ஆய்வுக் கென்றே தனித் துறை அமைக்கப் படுகின்றது.

எமது உடலின் எல்லாப் பகுதிகளும் நரம்பு என்னும் உயிரியல் மின்சார வடத்தால் பின்னி மூளையுடன் பிணைக்கப் பட்டுள்ளன. அவற்றின் மொத்த நீளம் பல இலட்சம் அடிகளாகும். அவை யாவும் ஓர் அங்கம்போல் மூளையின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றன. அக்கட்டளைகள் மின் துடிப்புக்களாய் நரம்புகள் ஊடாய் ஒவ்பொரு பகுதியையும் சென்றடைகின்றது. ஒட்டு மொத்தத்தில் நாம் நிற்பது, நடப்பது, நினைப்பது, பேசுவது, எம் சூழலை உணர்வது எல்லாமே மின் ஆற்றலால் இயங்கும் நரம்பு மண்டலத்தின் செயற்பாட்டால்தான். எமது இதயத் துடிப்புக்கூட மின்னுடன் தொடர்பு கொண்டதுதான். ஒரு வினாடியின் ஆயிரத்தில் ஒரு பகுதி நேர இடைவெளிகூட இல்லாது மின்சாரம் தொடர்ச்சியாக வாழ்நாள் முழவதும் உருவாக்கப்படுகிறது. நாம் ஓய்வெடுக்கம் சமயங்களில்கூட எமது கட்டுப்பாடு இன்றி நடைபெறும் உயிர்கலங்கள் பிரிதல், உணவு செரித்தல், போன்ற செயற்பாடுகள் இமைப்பொழுதுகூட இடைவெளி இன்றி நடைபெறுகின்றன.

நரம்பு மண்டலத்தின் உட் பிரிவுகள், அவைசெயல் பட்டு உருவாக்கும் நோய் எதிர்ப்பு, தாமகவே கோளாறுகளுக்காக ஏற்படுத்தும் சீரமைப்பு, தரவுப் பரிமாற்றம் என்று அடுக்கிக் கொண்டே போனால் வியப்புக்கு மேல் வியப்பாகத்தான் இருக்கும். சிலவற்றிகான விளக்கமே காண முடியாது. எல்லாமே ஏதோ ஒரு ஒழுங்கின் கீழ் தாமாகவே இயங்குகின்றன.

நாம் உண்ணும் உணவு செரித்து எளிய மூலக்கூறான குளுக்கோஸ் வடிவில் எம் குருதியை அடைந்த பின் அதன் மூலம் பெறப்படும் ஆற்றலின் ஒரு வடிவம் தான் மின் ஆற்றலும். வெளியிலிருந்து ஒரு இம்மி மின்சாரம்கூட எமது உடல் எடுப்பதில்லை. எம் ஒவ்வொருவரினதும் உடலிலும் சராசரியாக உள்ள 60 இலட்சம் உயிரணுக்கள் ஒவ்வொன்றும் ஒரு நுண் மின் அடுக்குப் போல் (battery) செயற்படுகிறது. அவை எல்லாமே அணுக்களால் ஆனவை என்பதை நாம் அறிவோம். இவ் அணுக்கள் சாதாரண சூழலில் சம எண்ணிக்கையான நேர் மின்கொண்ட புரொட்டோன்களும் எதிர் மின் கொண்ட எலக்ரோன்களும் கொண்டவை. அதனால் அவை மின் சமநிலை கொண்டவை. ஆனால் ஒரு அணு மேலதிக எலக்ரோன் ஒன்றைப் பெற்றால் அது எதிர் மின் சாரத் தன்மையைப் பெறும். அது எலக்ரோன் ஒன்றை இழந்தால் நேர் மின்சாரத் தன்மையைப் பெறும். இப்படியான கட்டங்களில்தான் எலக்ரோன் ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் பாயும். இதையே மின் ஓட்டம் என்போம். சுருங்கச் சொல்வதானால் எலக்ரோன் ஓட்டத்தால் உருவாகும் ஆற்றலையே நாம் மின் ஆற்றல் என்போம்.

நரம்பு மண்டலத்தின் வெளிப் பகுதி நேர் மின் தன்மையும் உட்பகுதி எதிர் மின் தன்மையும் கொண்டவை. இந்த் அடிப்படையை தளமாக வைத்தே தொடர்புப் பரிமாற்றம் ஏற்படுகிறது. இதில் சோடியம் பொற்ராசியம் போன்ற மூலகங்களின் செயற்பாடும் இன்றியமையாதது. இத்துடன் இதை நிறுத்துவோம். மேல் போவதானால் ஆய்வாளர் உதவியைத்தான் நாடவேண்டும்.

மின்சார விலாங்கு (electric eel) பற்றிக் கேள்விப் பட்டிரும்பீர்கள். இவற்றுள் பிறேசில், கொலம்பியா, வெனிசுலா, பேரு ஆகிய நாடுகளின் ஆறுகளில் காணப்படும் ஒருவகை விலாங்கு 400ல் இருந்து 650 வோல்ட்ஸ் வலிமை கொண்ட மின்சாரத்தை உருவாக்க வல்லவை. இந்த மின் சாரத்தின் தேவை அதன் பாதுகாப்பிற்கும் உணவுக்காக சிறு மீன்களை கொல்வதற்குமே. இது பிரத்தியேகத் தேவைக்காக உற்பத்தியாவது. உடலின் ஒவ்வொரு அசைவுக்கும் பயன்படும் மின்சாரம்போல் இன்றியமையாத ஒன்றல்ல. எமது உடலின் இன்றியமையாத தேவைக்காக உற்பத்தியாகும் மின்சாரம் கிட்டத் தட்ட சராசரி 50 மில்லி வோல்ஸ் கொண்டதே. ஆனாலும் உடலின் முழு உயிரணுக்கள் உற்பத்தி செய்யும் மின்சாரம் ஒரு 40 வட்ஸ் மின் குமிழ் எரிய போதுமானது. நாம் ஒன்றில் மட்டும் குழம்பக் கூடாது. அதாவது 240 வோல்ட்ஸ் கொண்ட எம் வீட்டு மின்சாரம் எம்மை இந்தப் பாடு படுத்தும்போது விலாங்கின் 600 வோல்ட்ஸ் என்ன பாடு படுத்துமென்று. விலாங்கின் மின்சாரம் ஐம்பதில் ஒரு வினாடி தான் நீடிக்கும்.




ஒரு பேப்பர்
ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address:

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."ன் பெயரில் காசோலை யினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 24 height 6' living in UK (Student visa), graduate self emplyed looking for a suitable bride Ref: 3584

2. Age 28 height 5' 7" British citizen graduate self employed looking for a suitable bride Ref: 3596

3. Age 38 height 5' 8" British citizen divorced Graduate working in a company looking for a suitable bride Ref: 3605

4. Age 20 height 5'3" (Student visa) living in UK looking for a suitable bride Ref: 3591

5. Age 25 height 5' 7" living in India doing business looking for a suitable bride Ref: 3609

6. Age 28 height 5'8" (Student visa) living in UK, sevaai thosam looking for a suitable bride Ref: 3612

7. Age 43 height 5'6" British citizen educated traditional looking for a suitable bride Ref: 3619

8. Age29height5'11"livinginUKina workpermitvisa,graduatelookingfora suitable bride Ref: 3562

9. Age23height5'9" livinginUKasa studentvisa,graduatelookingforasuita ble bride Ref: 3564

10. Age 32 height 5'9" British citizen workingasasupermarket,lookingfora suitable bride Ref: 3574

11. Age34height5'11" doctorUKPR holder, looking for a suitable bride Ref: 1006

12. Age 37 height 5'9" living in student visa in UK, looking for a suitable bride Ref: 3581

13. Age 49 height 5'7" French citizen living in UK, divorced looking for a suitable bride Ref: 3586

14. Age 25, 5' 7", British Citizen, graduate Looking for a suitable bride Ref 3540.

15. Age32,6'0",BritishCitizen,Doctor looking for a suitable bride Ref 925.

16. Age 29, 5'8", Workpermit visa, working as a Network administrator looking for a suitable bride Ref 3547.

17. Age 44, 5'6", British Citizen, Engineer working as a Programme co-ordinator looking for a suitable bride Ref 3542.

18. Age 25, 5'9", student visa, graduate working in IT field looking for a suitable bride Ref 3541.

19. Age 33, 5' 7", UK, Graduate, Working in Service Industry, Looking for a suitable Bride, Ref 3512.

20. Age 28, 5' 6", HSMP visa, Accountant, Looking for a suitable Bride, Ref 3517.

21. Age29,5'8",Uganda(Workpermit visa), Engineer, Looking for a suitable Bride, Ref 3526.

22. Age 30, 5' 5", British Citizen, Graduate ,Working in IT Company, Looking for a suitable Bride, Ref 3531.

23. Age29,5'7",UK(Workpermitvisa), Engineer, Looking for a suitable Bride, Ref 3534.

24. Age31,6'2",British Citizen, PhD in Chemistry, working as a research scientist, Looking for a suitable Bride, Ref 3536.

25. Age25,5'6",Australia,Graduate, working as a software Engineer for government, Ref 3470.

26. Age 30, 5' 8", UK, Electronic &Electrical Engineer,Looking for a suitable Bride, Ref 3441.

27. Age 29, 6' 1", UK(student visa), doing MBA, working part time, Ref3437.

28. Age 27, 5' 7", UK,Graduate, working as a Professional Travel consultant , Ref 3428.

29. Age45,5'8",UKPR,Accountant, Looking for a suitable Bride, Ref 3422.

30. Age 28 , 5' 8" , UK PR , Graduate , working in Public Service , Ref 3419.

31. Age 34, 5' 10", Doha, Engineer, Looking for a suitable bride , Ref 3412.

32. Age27,5'8",India,Civil Engineer Doing own construction Business , Ref 3411.

33. Age 32 , 5' 11" , British Citizen Engineer,Looking for a suitable bride , Ref 3407.

34. Age 30 , 6' 0" , UK(student visa) doing MBA , working part time , Ref 3376.

35. Age29,5'9",Frenchcitizen living in UK , BEng Electronics , Self employed , Ref 3374.

36. Age 31 , 5' 8" , UK(HSMP visa) , Engineer , working as an Engineer at mobile company , Ref 3373.

37. Age 33, 5' 7", Canada PR, Graduate, working as a computer engineer, Ref 3367.

38. Age 27, 5' 8", UK(student visa), doing MBA , working part time, Ref 3361.

39. Age 33, 6' 2" , UK PR , Divorced, Engineer , Ref 3360.

40. Age 30, 5' 6", UK(PSW visa), Engineer, Looking for a suitable bride, Ref 3352.

41. Age35,5'5",British Citizen, Graduate , working in Public Service, Ref 3346.

42. Age30,5'8",UK, MSc Qualified, working as business analyst, Ref 3344.

43. Age 36, 5' 9", UK PR, Graduate, working in a marketing agency , Ref 3337.

44. Age 24 , British Citizen , Studying ACCA , working in the NHS finance department , Ref 3327.

45. Age30,5'9",UK(PSW visa), Graduate , working as a deputy manager Ref 3325.

46. Age 33, British Citizen, Accountant , Looking for a suitable bride , Ref 3323.

47. Age29,5'6",British Citizen Graduate , working at a Telecom company Ref 3306.

48. Age31,5'11",UK, Doctor, Looking for a suitable bride , Ref 3304.

49. Age29,5'8",British Citizen Graduate, working as a Senior Management Consultant/Project designer ,Ref 3301

50. Age 46 , 5' 11" , UK , Divorced , Doctor ,Looking for a suitable bride Ref 3298.

51. Age27,5'9",UK, Engineer Looking for a suitable bride ,Ref 3293.

52. Age 35 , 5' 5" , UK(student visa) doing MBA , working part time , Ref 3292.

53. Age30,5'5",British Citizen Graduate , working as a Senior Software Engineering , Ref 3291.

54. Age 32, 5' 3", UK(student visa) studying MSc in Information Security, working part time, Ref 3281.

## மணமகன் தேவை

1. Age 28 height 5'2" Doctor British Citizen looking for a suitable groom Ref: 3535

2. Age 29 height 5' 4" British Citizen Graduate looking for a suitable groom Ref: 1596

3. Age 31 height 5' 4" British Citizen Lawyer looking for a suitable groom Ref: 3617

4. Age 26 height 5' 6" Permanent Residency living in Switzerland Graduate looking for a suitable groom Ref: 3602

5. Age24height5' 5"Denmark Citizen living in UK Graduate working in a medical sector looking for a suitable groom Ref: 3606

6. Age 22 height 5'5" British citizen, graduate looking for a suitable groom Ref: 3575

7. Age40height5'5"working as a Teacher in Srilanka, graduate looking for a suitable groom Ref: 3568

8. Age 26 height 5'0" living in UK in a student visa, graduate looking for a suitable groom Ref: 3585

9. Age 27 height 5'4" in Srilanka graduate, looking for a suitable groom Ref: 3587

10. Age 31 height 5'1" in Srilanka a music teacher looking for a suitable groom Ref: 3588

11. Age 28 height 4'9" in Srilanka a graduate looking for a suitable groom Ref: 3590

12. Age 42 height 5'2" in Srilanka working as a Teacher , graduate looking for a suitable groom Ref: 2622

13. Age 26, 5' 3", British citizen, Accountant Looking for a suitable Groom, Ref 3539.

14. Age 29, 5' 7", British citizen working in medical sector Looking for a suitable Groom, Ref 722.

15. Age 32, 5' 4", German citizen living in uk working as an Architect in IT Looking for a suitable Groom, Ref 3227.

16. Age 28, 4' 8", student visa looking for a suitable Groom, Ref 3553.

17. Age 28, 5' 4", British citizen working as a Architect looking for a suitable Groom, Ref 3245.

18. Age 27, 5' 1", graduate living in srilanka looking for a suitable Groom, Ref 3550.

19. Age 29, 5' 1", British citizen Doctor looking for a suitable Groom, Ref 3496.

20. Age 35, 5' 5", graduate living in srilanka looking for a suitable Groom, Ref 3558.

21. Age 32, 5' 1", working as a trainee in medical sector living in srilanka looking for a suitable Groom, Ref 3557.

22. Age 27, 5' 1", British citizen Doctor divorced looking for a suitable Groom, Ref 3556.

23. Age 30, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3519.

24. Age 28, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3535.

25. Age 32 , 5' 5", UK, chartered architect, Looking for a suitable Bride,Ref 3438.

26. Age 28, 5' 3", British Citizen, Engineer, Looking for a suitable Groom, Ref 3520.

27. Age 29, 5' 2", British Citizen, Doctor, Looking for a suitable Groom, Ref 3514.

28. Age 34, 5' 6", Sri Lanka, Accountant, Looking for a suitable Groom, Ref 3515.

29. Age 31, 5' 6", India, Graduate, working in HR, Looking for a suitable Groom, Ref 3510.

30. Age33,5'5",British Citizen, Graduate, working as a teacher, Looking for a suitable Groom, Ref 3509.

31. Age 29, 5' 5", UK PR, Engineer, Looking for a suitable Groom, Ref 3525.

32. Age 32, 5' 3", Sri Lanka, Doctor, Lookingforasuitablegroom,Ref3469.

33. Age 29, 5' 4, UK(student visa), studying in the medical sector, working part time, Ref 3461.

34. Age 23, 5' 4", German Citizen, Living in UK, studying Electronic engineering, Looking for a suitable groom, Ref 3455.

35. Age39,5'3",Sri Lanka, Engineer, Looking for a suitable groom, Ref 3453.

36. Age 27, 5' 6", India, Graduate, Administrative Service, Looking for a suitable groom, Ref 3451.

37. Age 24, 5' 5", British Citizen, Graduate, working in Public Service, Ref 3436.

38. Age 29, 5' 5", Sri Lanka,Graduate, working as senior software engineer, Ref 3434.

39. Age 28 , 5' 3", UK PR, Divorced, one child, Graduate, Ref 3418.

40. Age 29, 5' 6", UK , Divorced, Graduate, Ref 3404.

41. Age25,5'2",Sri Lanka, Graduate, working as a Financial Adviser, Ref 3406.

42. Age 25, 5' 3", UK, Graduate, working in Public Service, Ref 3392.

43. Age 24 , 5' 5", British Citizen , Graduate , Administrative Service , Ref 3388.

44. Age 29 , 5' 2", British Citizen, Financial Sector, Looking for a suitable groom, Ref 3382.

45. Age 29 , 5' 4", UK(student visa), BSc Computer Science, Looking for a suitable groom, Ref 3381.

46. Age 27,5' 5", British Citizen, Accountant, working as a Commercial Financial Analyst , Ref 3371.

47. Age 32, 5' 6", British Citizen, ACCA qualified, working in bank as manager, Ref 3365.

48. Age 31, Canada Citizen, Graduate, working as a Marketing Manager, Ref 3363.

49. Age 40 , 5' 2", British Citizen, Accountant, Looking for a suitable groom, Ref 3362.

50. Age 26, 5' 8", British Citizen, Medical Sector, Looking for a suitable groom, Ref 3359.

51. Age 42,, 5' 6", Canadian PR, Medical Sector, Looking for a suitable groom, Ref 3358.

52. Age 34 , 5' 5" , Canadian Citizen, working as computer programmer , Looking for a suitable groom , Ref 3342.

53. Age 29 , 5' 5" , British Citizen , Accountant , working as a Production Accountant , Looking for a suitable groom ,Ref 3316.

54. Age 32, 5' 2", British Citizen, Graduate, Financial Sector, Ref 3309.

55. Age 27 , 5' 3", British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3308.

56. Age 33 , 5' 2" , British Citizen , Doctor, Looking for a suitable groom, Ref 3307.

57. Age26,5'6",Sri Lanka, Graduate, Administrative Service , Ref 3299.

58. Age 26 , 5' 2" , Australian Citizen, Engineer,Lookingforasuitablegroom, Ref 3282.

59. Age 28 , 5' 3" , British Citizen, Engineer,Lookingforasuitablegroom, Ref 3275.

60. Age 32, 5' 2", British Citizen , Accountant, Looking for a suitable groom , Ref 3420.

61. Age 30 , 5' 6" , British Citizen , Doctor , Looking for a suitable groom Ref 3423.

62. Age 28 , 5' 8" , UK , Engineer , Looking for a suitable groom , Ref 865.

63. Age 30, 5' 7", Sri Lanka, Engineer Looking for a suitable groom , Ref 3340.

64. Age 41 , 5' 6" , British Citizen , Living in Australia , Graduate , working as a Pharmacist,Ref 3290.

65. Age 30 , 5' 4" , Australian Citizen Doctor , Looking for a suitable groom Ref 3232.

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# வாழத் தொடர்ந்து உழைக்கும் வலி-வடக்கு

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்



உயர் பாதுகாப்பு பிரதேசமென்று இன்றும் உள்ளவை வலிவடக்கு நான் பிறந்து வளர்ந்த பிரதேசம். சென்ற மாதம் அந்த மண்ணில் நிற்கின்ற வாய்ப்பு எனக்கு எட்டியது. யாழ்ப்பாணத்துக்குரிய கடும் உழைப்பு விடாமுயற்சி சிக்கனம் சேமிப்பு என்ற இயல்பான பண்புகள் அப்பிய மண் கடலோடு சேர்ந்த கீரிமலை, காங்கேசன் துறை, மயிலிட்டி கடல்வள மணல் பரப்பு, சீமந்து தொழிலக சுண்ணாம்பு கற்பாறை மண், பலாலி விமானத்தளம், தெல்லிப்பளை வைத்திய சாலை, எல்லைப்புற அரண்களில் ஒன்றான காங்கேசன்துறைத் துறைமுகம், பிரசித்தி பெற்ற சைவ கிறீஸ்தவ திருத்தலங்கள் என்பன வலிவடக்கை சிறப்பிப்பன. கீரிமலை கோவில், இளவாலை என்ற ஊர்த் தொடர்கள் பனங் கள்ளுக்கு பெயர் போனவை ஓங்கியுயர்ந்த பனைமர கூடல்கள், பனம்பழம், பனங் கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல், பனாட்டு, பனங்குட்டான் என்று பனம் பண்டங்கள் நினைத்தாலே கிடாய் மொச்சை மணத்தை மனத்தில் நிறுத்தும் கவுணாவத்தை மற்றும் தச்சன் காட்டு வைரவர் கோயில் வேள்விகள் குரக்கன் மிளகாய்ப்பழம், ஊறுகாய், அவித்த மிளகாய் என வீடுகள் தோறும் முற்றத்தில் அவ்வப்போது வெயில் காயும் உணவுப்பொருட்கள் என்று ஊரை நினைத்தால் நெஞ்சில் ஊர் வளமும் அழகும் நிழலாடும்.

வெற்றிலைச்செடி, இராசவள்ளிகிழங்கு என்பன இந்த மண்ணின் சிறப்புச் சொத்துக்கள் வெளியேறும் சீமெந்து தொழில்ச்சாலைப் புழுதிக் கழிவு ஒரு பருவத்தில் காற்றில் காவப்பட்டு மரம் செடிகள் வீடுகள் கூரைகள் எல்லாவற்றையும் புளுதிப்போர்வையில் மூழ்கடிக்கும். மாரி காலத்தில் வழுக்கையாறு குளங்களை நிரப்பி ஓடும். வெள்ளம் எங்கும் நிறைந்து பரவி வழிந்தோட நாள் எடுக்கும். திரட்ச்சியான காய் கறிகள் வெங்காயம் என தோட்ட வயல்கள் எல்லாம் பச்சைப் பசேல் என காட்ச்சியளிக்கும் அது ஒரு காலம்.

இத்தனை அழகிடையேயும் போர் இடம் பெயர்வுக்கு முதலில் உள்ளானது வலி வடக்கு தான் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்வு ஆரம்பம் இன்னும் மீள அமர்வு முழுமையாகாத நிலை விமான குண்டுவீச்சு செல் அடியால் வீடுகள் எல்லாமே தரை மட்டம் இன்றுவரை தொடரும் இராணுவ கட்டுப்பாடு மிச்ச சொச்ச சொத்துகளும் சூறையாடப்பட்ட கோரம். இத்தனைக்கும் மத்தியில் படிப்படியாக மீள் குடியேற்றம் அனுமதிக்கப்படுகிறது. மீள நிமிர ஊரவர்கள் எடுக்கும் விடா முயற்சி நேரில் காண நெஞ்சில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது வாழத் தொடர்ந்து முயன்றதினால் வழியைத் தேர்ந்த யாழ்ப்பாணம் என்ற கவிவரிகள் மீண்டும் நிதர்சனமாகின்றது கூலியாளின் ஒருநாள் கூலி எண்ணூறு ரூபா மேசன் கூலி 1200 ரூபா இன்னமும் இறைக்கப் படாத கிணறுகள் குடிதண்ணீர் கூட தூர இடத்திலிருந்து லோரியிலோ சைக்கிளிலோ எடுத்து வரவேண்டிய நிலை.

இத்தனைக்கும் மத்தியில் வேலிகள் மீண்டும் எழும்பி காணிகளை நிரல் படுத்துகின்றன. அரையந்தர் முள்ளுக்கம்பி 15 ஆயிரம் ரூபா சீமந்து தூண் ஒன்று எழுநூறு ரூபா இடையிடையே கம்பிகளை நிறுத்தி முட்கம்பிகளை இழுத்து வேலி கட்டி காணிகள் நிலைப்படுத்தப்படுகின்றது

அம்பனை, பன்னாலை, கொல்லங்கலட்டி, வீமன்காமம், மயிலிட்டி என்பன அண்மையில் விடுவிக்கப்பட்ட கிராமங்கள். அழிவுகள் இடிபாடுகள் அகற்றப்படும் முயற்சிகள் ஆரம்பம். எம் பரம்பரைக் காணி நிலம் என்ற வீராப்பு மீள என் சொந்தமண்ணில் வாழ்வேன் என்ற ஓர்மம் ஊரிலுள்ள ஒவ்வொரு தமிழ் குடி மகனையும் வியர்வை வழிந்தோட உழைக்க வைக்கின்றது காலா காலமாக கூடலாக காட்சி தந்த பனை வளவுகள்

இன்று பரந்த வெளிகள், தென்னைகள் எங்கே போயின என்று யாருக்கும் தெரியாத நிலை மா, பலா, வேம்பு, இலுப்பை, எலுமிச்சை, தோடை என்று வீட்டுக்கு வீடு இருந்த பயன் மரங்கள் வெடி குண்டுகளின் மணத்தில் கருகி சருகாகி பட்டு உக்கி மண் படலமாகிவிட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இவை உள்ளன. வீட்டுக்கு வீடு இருந்த நாய், பூனை, கோழி, ஆடு, மாடு என்பன இன்று இல்லை. மீள் குடியேறியவர்கள் கூட இவற்றை வளர்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை காகம் பறக்காத ஊரில்லை என்பது முன்னைய பழமொழி. ஆனால் காகங்களே இன்று வலி வடக்கில் இல்லை. இந்நிலையில் புரட்டாதி சனி விரதத்தை எப்படி வலி வடக்கு அனுபவிக்க போகின்றது என்பது சனி பகவானுக்கே வெளிச்சம்.

காலை வேளை துலா மிதித்து பட்டையால் பயிருக்கு நீர்பாய்ச்சி சீமெந்து தொழிலக சங்கு எட்டு மணிக்கு ஊத பள்ளிக்கு போவதற்காக வீட்டுக்கு ஓடி பழஞ் சோற்றை பூவரசம் இலையில் வாங்கி உண்டுவிட்டு பள்ளி மணி அடிக்க முன் ஓடிப்படித்த முன்னேறிய அந்த கல்வி முயற்சி இன்றும் உயர்ச்சியில் இருப்பதை பார்க்கும் போது இன்னுமொரு புளகாங்கிதம்.

நூற்றாண்டு கண்ட தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி போரின் இடம்பெயர்விலும் மாறாத அதே வீறோடு தன் 20 ஏக்கர் நீள் சதுர பரப்பில் இன்னும் நிமிர்ந்து நிற்கின்றது.

முன்னைய பச்சைப்பசேல் என்று காட்சி தந்த வயல் பரப்பு பெரும் பகுதி இன்றும் பரந்த பற்றை காடு பசுமையை காணும் முயற்சியின் அரிச்சுவடி மகாஜனாவுக்கு முன்னுள்ள வயற் பரப்பில் இப்போது தான் ஆரம்பம். போர் அனர்த்தங்கள் அதிகரிக்க 1990இல் மருதனாமடத்துக்கு இடம்பெயர்ந்த மகாஜனாக் கல்லூரி 1998 இல் மீண்டும் தன் சொந்த மண்ணுக்கு வந்து நிலைத்தது. கல்வி விளையாட்டு இடம் பெயர்வில் முன்னனி இடத்தில் நின்றது. இடம் பெயர்ந்த சுற்றுக் கிராமங்கள் வெறிச்சோடி விட்ட நிலையிலும் 1998இல் மீண்டும் தன் நிலத்தில் கல்விச் சேவையைத் தொடர்ந்த நிலையில் 1400 மாணவர்கள் 65 ஆசிரியர்கள் தாம் இடம்பெயர்ந்திருந்த தூர இடங்களில் இருந்து ஒற்றை அளவெட்டி வீதி வழியாகச் சுற்றி வந்து படிக்கவும் படிப்பிக்கவும் முயற்சி எடுத்த அந்தச் செய்தி ஒரு உருக்கமான சிறப்பான செயற்பாடு தான். கல்விப் பரம்பரையை உருவாக்க இன்றும் அயராது மகாஜனா உழைக்க வேண்டும்.

**காகம் பறக்காத ஊரில்லை என்பது முன்னைய பழமொழி. ஆனால் காகங்களே இன்று வலி வடக்கில் இல்லை. இந்நிலையில் புரட்டாதி சனி விரதத்தை எப்படி வலி வடக்கு அனுபவிக்க போகின்றது என்பது சனி பகவானுக்கே வெளிச்சம்.**

எங்கட பள்ளிக்கூடம் என்ற உணர்வோடு ஓங்கியுழைக்கும் பற்றுமாறாத ஊராரின் ஒத்துழைப்பு, ஆசிரியர் அதிபரின் அர்ப்பணிப்பான சேவை, இன்னும் தளர்வற்ற நிலைக்கு பள்ளியையும் ஊரையும் இட்டுச் செயல்கின்றது.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய நான் வளர்ந்த ஊர், படித்த பள்ளி என்ற நிலப்பரப்பில் நின்ற ஒவ்வொரு கணமும் நெஞ்சில் ஒரு பெருமிதம், புல்லரிப்பு.

விழ விழ எழுவோம் என்பது எம் தமிழினத்தின் மெய் வரிகளே.

## காலத்துடன்...

(24ம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டையாகக்கிடந்த யாழ்தேவி பயணித்த புகைவண்டித்தடங்கள் என்று என் மிதிவண்டியுடனான பயணங்கள் அத்தனையும் எத்தனை அழகானவைகள். இளவயது நண்பர்கள், பாடசாலை சென்றநாட்கள், கவலையற்று நண்பர்களுடன் சுற்றித் திரிந்த மாலைப் பொழுதுகள், அம்மாவின் குளையல் சோறு, அப்பா தரும் சில்லறைக்காசுகள், நாவல்ப்பழங்கள், மைக் கறை படிந்த பாடசாலைச் சீருடைகள், எங்கள் இளவயதுப் புன்னகைகள் என்று காலம் எல்லாவற்றையும் பறித்துவிட்டதைப் போலவே என் பயணத் தோழனையும் எங்கேயோ பறித்துச் சென்று விட்டது.

**மண்ணுக்கும் எங்களுக்குமான உணர்வுச்சங்கிலியை இணைத்து வைத்திருக்கும் எம்மூரின் மிதிவண்டிப்பயணங்களுக்கு அவை ஒருபோதும் இணையாக முடியுமா...?**

இழந்து இழந்து இழப்பதற்கு எதுவுமின்றி வெளிநாடுகளுக்கு ஓடிவந்த ஈழத்தமிழர்களைப் போலவே நானும் மிதிவண்டியுடன் சேர்த்து எல்லாவற்றையும் இழந்து நாடுகடந்து ஒற்றையாக நின்றாலும் என் நினைவுகளில் நீங்காது நின்று புன்னகைத்துக் கொண்டிருக்கிறான் என் பயணத்தோழன். வெளிநாட்டு நகரங்களின் சிமெண்ட் வீதிகளில் விலையுயர்ந்த துவிச்சக்கர வண்டிகளில் உடம்பு நோகாமல் சவாரி செய்தாலும் எம்பிஎம்பி மிதித்தபடி கால்களிலும் மட்காட்டிலும் புழுதியடிக்க வாழ்க்கையின் மிக அழகிய நாட்களைச் சுழற்றியபடி பயணிக்கும் மண்ணுக்கும் எங்களுக்குமான உணர்வுச்சங்கிலியை இணைத்து வைத்திருக்கும் எம்மூரின் மிதிவண்டிப்பயணங்களுக்கு அவை ஒருபோதும் இணையாக முடியுமா...?

## தமன்னா...

(18ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்ட பொழுது இவர் ஒரேயடியாகத் தர முடியாது என்று கையை விரித்தபோது அவன் கையை நீட்டியிருக்கிறான். அருந்தப்பில் மூக்குத் தப்ப தாடையில் அவனது உருண்டை கை மொளிகள் பதிந்தன. அழுது கொண்டே தமன்னாவைத் தாரை வார்த்தார் நண்பர். இம்முறை அவன் சரிவரக் கழுவிச் சுத்தம் செய்திருக்கவில்லை. முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று அவன் நினைத்திருக்கக் கூடும். தமன்னாவும் இனித் தாங்க முடியாதென்றோ என்னவோ உதட்டோரமாகக் கிழிந்து போயிருந்தா. நண்பருக்கும் தாங்க முடியாது போய் விட்டது.

இதழில் இருந்து அப்படியே தமன்னாவைக் கிழித்தெடுத்து இந்தா பிடி என் அன்புப் பரிசு என்று கொடுத்து விட்டாராம். அவன் அதில் நெகிழ்ந்து மேலும் இதுமாதிரியான புத்தகங்கள் உள்ளனவா என்று கேட்டானாம். என்ன மனிசரப்பா என்று இந்தக் கதையை முடித்தார் நண்பர்.

தலைவரைப் பார்க்கின்ற போது உங்களுக்கு உற்சாகம் பீறிட்டுக் கிளம்பலாம். அவனுக்குத் தமன்னாவைப் பார்க்கின்ற போது ஏதேனும் பீறிட்டுக் கிளம்பக் கூடாதா என்று நான் கேட்டேன். அதுக்கில்லையடாப்பா.. அவன் அப்பிடி அசிங்கப் படுத்திட்டுக் கொண்டு வந்து தந்த தமன்னாவை நான் இரவில தடவிக் கொண்டு படுத்ததை நினைக்கத்தான் வாந்தி வாந்தியா வருகுது என்று நண்பர் சொன்னது தான் இந்தப் பதிவின் ஹைலைட்..

நண்பர் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல மீண்டும் கனடாவுக்குப் பாய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். அடுத்த முறை அவர் புறப்படும் போது ஸ்ரேயா, ஸ்ருதி, திரிஷா, அசின் படங்கள் போட்ட ஆதவன் இதழ்களையும் கொடுத்து விடலாம் என்றிருக்கிறேன்.

- சயந்தன்

## கிழிஞ்ச நாட்கள்.....

–27.09.2011

இன்று காலை தபால் பெட்டியை திறந்தேன். திறைச்சேரி கடிதமொண்டு அரசாங்க முத்திரை(சீல்)யோடை வந்திருந்தது. அரசாங்க முத்திரை கடிதம் எண்டாலே நெஞ்சிடிதான். எதுக்கோ காசு கட்டவேணும் எண்டு நினைச்சபடி கடிதத்தை திறந்தன். என்ரை பழைய வீட்டு போன் பில் கடைசி மாதம் கட்டாதத் தாலை அவன் கடிதம் போட்டு களைச்சு திறைச்சேரிக்கு அனுப்பிட்டான். நான் பழைய வீடு விடேக்குள்ளை முறைப்படி பிரான்ஸ் ரெலிகொம்மிற்கு பதிவுத்தபாலிலை இணைப்பை துண்டிக்க சொல்லி கடிதம் போட்டிருந்தனான். ஆனால் அவங்கள் ஒரு மாதம் கழிச்சுத்தான் இணைப்பை நிறுத்தியிருக்கிறாங்கள். நான் ஏற்கனவே வீடு மாறி வேறையொரு கொம்பனிட்டை ரெலிபோன் லைனும் எடுத்திட்டன். ஆனால்...

பழைய இணைப்பை துண்டிக்காமல் விட்டது ரெலிகொம் காரனின்ரை பிழை நான் இல்லாத வீட்டிற்கு ஒரு மாத காசை கட்டச்சொல்லி பில் வந்திருந்தது நானும் அவங்களுக்கு போனடிச்சு விபரத்தை சொன்னன் சரி பாத்து அறிவிக்கிறம் எண்டாங்கள் ஆனால் பில் வந்து கொண்டேயிருந்தது. நான் போனடிக்கிறதும் அவங்கள் சரி பாக்கிறன் எண்டிறதும் திரும்ப பில் வாறதுமாய் ஆறு மாதம் ஓடிட்டுது 50 யுரோ பில் வட்டியோடை 80 யுரேவுக்கு வந்து நிண்டிது. போன மாதம் ஒரு கடிதம் வந்திது இதுதான் கடைசி கடிதம் இதுக்கும் காசு கட்டாட்டில் உங்கடை பைலை திறைச்சேரிக்கு அனுப்பிபோடுவம் எண்டு எழுதியிருந்திது....

நாங்கள் பாக்காத கோட்டா கச்சேரியா? மல்லாகம் கோட்டிலை தொடங்கி சங்கானை யாழ்ப்பாணம் எண்டு கொழும்பு சுப்பிறீம் கோட் வரை ஏறி இறங்கின ஆக்களாக்கும் இவன் சும்மா வெருட்டுறான் எண்டு நினைச்சு நானும் விட்டிட்டன். ஆனால் அவன் உண்மையாவே திறைச்சேரிக்கு அனுப்பிப் போட்டான். இப்ப திறைச்சேரி காரன் கடிதம் போட்டிருக்கிறான் அவனோடை விழையாட ஏலாது வீட்டை வந்து சாமானுகளை அள்ளிக்கொண்டு போடுவாங்கள். ஊரிலை சோலை வரி கேட்டு வாறவனை என்ரை காணிக்கு உனக்கெதுக்கு வரி தரவேணும் எண்டு கட்டபொம்மன் வசனம் பேசி கொடுவா கத்தியொடை கலைச்சமாதிரி இஞ்சை கலைக்க ஏலாது. உள்ளை தூக்கி போட்டிடுவாங்கள்.

**ஊரிலை சோலை வரி கேட்டு வாறவனை என்ரை காணிக்கு உனக்கு எதுக்கு வரி தரவேணும் எண்டு கட்டபொம்மன் வசனம் பேசி கொடுவா கத்தியொடை கலைச்ச மாதிரி இஞ்சை கலைக்க ஏலாது. உள்ளை தூக்கி போட்டிடுவாங்கள்.**

காசை ஒன் லைனிலை கட்டுவமெண்டு ரெலிபோனை எடுத்து இலக்கத்தை அமத்தினன். தொடங்கிச்சிது வில்லங்கம்..வணக்கம் எங்கள் சேவைக்கு அழைத்ததற்கு நன்றிகள். வீட்டு வரி கட்டப் போகின்றீர்களா? இலக்கம் ஒன்றை அமத்துங்கள். காணி வரி கட்டப் போகின்றீர்களா? இரண்டை அமத்துங்கள். வேறு ஏதாவது வரிகளா? மூண்றை அமத்துங்கள். இப்பிடியே ரெலிபோனிலை உள்ள ஒல்லா பட்டினையும் அமத்தி ஒரு மாதிரி காசை கட்டிப்போட்டன்..

இப்ப இன்சூரன்ஸ் வங்கி, ரெலிகொம், எண்டு எங்கை போனடிச்சாலும் உந்த ஓட்டோமற்றிக் மிசினின்ரை தொல்லைதான்.

ஒன்றை அமத்து ஸ்ராரை அமத்து புள்ளிறை அமத்து எண்டு வாழ்கை வெறுக்கப்பண்ணி கடைசியிலை ஒரு மியுசிக்கையும்போகும் ஒரு நாசமாய் போவாரும் கதைக்கமாட்டாங்கள்....

கிழிச்சது: சாத்திரி

# கேளுங்க கேளுங்க....

சிறப்பு நிகழ்ச்சியொன்றிற்காக 'நாட்டிற்காக நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்?' என்கின்ற கேள்வியை நகைச்சுவை நடிகர் சந்தானம் அவர்கள் சில முன்னணி சினிமா பிரபலங்களிடம் கேட்கின்றார்....

*கமல்ஹாசனிடம்*

சந்தானம்: நாட்டிற்காக நீங்க....(ள்) என்ன செய்திருக்கிறீங்க?

கமல் :- வெல், இதை கேள்விக்கு பதிலளிக்கணுமின்னா சுதந்திர காலத்தில நம்ம முன்னோர்கள் எவ்வளவு பாடுபட்டிருக்கிறாங்க எங்கிறத நாம நினச்சு பாக்கணும், அப்புறம் அமெரிக்கா எப்பிடி நல்ல வளத்தோட இருக்கிறாங்க எங்கிறத நாம தெரிஞ்சிக்கணும், நான் தசாவதாரம் பண்ணும்போது அமெரிக்காக்கு மூணு வாட்டி போயிருந்தன்,ஒவ்வொரு தடவையும் அமேரிக்கா பாக்கிறத்துக்கு புதுமையா இருக்கும், அந்த நேரங்களில் சின்ன வயசில எங்க தெருவில இருந்த....

சந்தானம் :- சார் கேள்விக்கு பதில் வரலையே....

கமல் :- நான் பதிலுக்குத்தான் வந்துகிட்டிருக்கிறன்......

சந்தானம்:- (உங்ககிட்டயிருந்து பதில் வாறதுக்குள்ள அடுத்த சுதந்திர தினம் வந்திருமே) பரவால்ல சார் நீங்க நின்னு நிதானமா ஜோசிச்சு பதில் சொல்லுங்க, இவரு நோட் பண்ணிக்குவாரு, டேய் தம்பி இங்கவர் சார் சொல்றதை நோட் பண்ணிக்கோ..... எனக்கு வயிறு கொஞ்சம் ஒரு மாதிரியா இருக்கு, நான் கிளம்புறன், நீங்க இவர் கிட்ட தெளிவா பதிலை சொல்லுங்க...

*நடிகர் விஜயிடம்*

சந்தானம் :- நாட்டிற்காக நீங்க....

விஜய் :- இந்த குடியரசு தின நன்னாளிலே...

சந்தானம் :- சார் இது சுதந்திர தினம்!!!!

விஜய் :- இருக்கட்டுமே, அதனால என்ன? எல்லாம் நம்ம காந்தி தாத்தா வாங்கி குடுத்ததுதானே?????

சந்தானம் :- (சுத்தம்) சார் அதுவந்து.......

விஜய் :- இப்ப அதுவா முக்கியம்? மேட்டருக்கு வாங்க நான் நாட்டுக்கு செய்த மிகப்பெரும் சேவையாக நினைப்பது இந்திய தேசத்திற்கு ஒரு டாக்டரை உருவாக்கியது தான்.

சந்தானம் :- யாராவது பசங்களை படிக்க வச்சு டாக்டராக்கினீங்களா ??

விஜய் :- யோவ்? நான் என்னை சொன்னன், ஐ ஆம் டாக்டர் விஜய்...

சந்தானம் :- சரி சார்! நன்றி, நாங்க கிளம்பிறம்!!!!!!

*டீ.ராஜேந்தரிடம்*

சந்தானம் :- நாட்டிற்காக நீங்க(ள்)...

டீ.ராஜேந்தர்:- நான் என்ன செய்யலையின்னு கேளு!!

சந்தானம் :- சரிசார், நாட்டுக்கு என்ன செய்யலை ?

டீ.ராஜேந்தர் :- டேய் நான் நாட்டுக்கு என்ன செய்தனின்னு கேளு!!!!

சந்தானம் :- (யார்ரா அவன்? என்னை இவன்கிட்ட கூட்டியாந்தது...) சரிசார் இப்ப என்னதான் சொல்லப்போறீங்க??

டீ.ராஜேந்தர் :- அப்பிடி கேளு வெய்யிலுக்கு தேவை மோரு, என் பையனுக்கு தேவை பீரு(Beer), ஓட்டுறதுக்கு தேவை காரு (Car), கிரிக்கட்டுக்கு தேவை போரு (Four), நாட்டுக்கு தேவை....

சந்தானம் :- (இந்த இடத்தைவிட்டு மாறு, இல்லை மூஞ்சீல விடுவன் சேறு) சூப்பரா சொன்னீங்க சார், இந்தமாதிரி பேச உங்க ஒருத்தராலதான் முடியும்.......

*இயக்குனர் விஜயிடம்*

சந்தானம் :- நாட்டிற்காக நீங்க.....

இயக்குனர் விஜய்:- அன்று வெள்ளையன் எம் மண்ணிலே எமக்கு தெரிந்தும் தெரியாமலும் பல வளங்களை சுருட்டிக்கொண்டு சென்றான். அதற்க்கு பதிலடியாக நானும் என்சக சில இயக்குனர்களும் சேர்ந்து வெள்ளையனின் திரைப்படங்களை அவனுக்கு தெரியாமல் இங்கு ஆட்டையை போட்டுக் எம் மண்ணுக்கு கொண்டு வந்துள்ளோம், கொண்டு வந்து கொண்டிருக்கின்றோம், கொண்டு வருவோம்!!!!

சந்தானம் :- இப்பிடி ஒரு பதிலை சத்தியமா நான் எதிர் பாக்கல, எனி வே, மிக்க நன்றி.

*நமீதாவிடம்*

சந்தானம் :- நாட்டிற்காக நீங்க.....

நமீதா :- ஹாய் மச்சான்..... எப்பிடி இருக்கிறது?

சந்தானம்:-(என் அப்பன்கூட உங்கம்மா பொறந்தாளா? இல்லை என் அம்மாகூட உங்கப்பன் பொறந்தானா ? இல்லை உன் அக்கா தங்கசச்சியை நான் கட்டினனா? இல்லை என் அண்ணன் தம்பியை நீ கட்டினியா? இல்லை நானும் நீயும் தோஸ்தா? எதுக்கு இப்ப இந்த மச்சான்? ) நான் இப்பவரை நல்லாத்தான் இருக்கிறன், நீங்க பதில் சொல்லுங்க மேடம்....

நமீதா :- எனக்கு காந்தி தாத்தா பிடிக்கும்.

சந்தானம் :- கதர் சட்டை இல்லாம கலர் சட்டையா இருந்தாலும், காந்தித் தாத்தா வேட்டி சைசில ட்ரெஸ் பண்ணியிருக்கிறதை பாக்கிறப்பவே அது தெரியுது மேடம். நீங்க நாட்டுக்கு என்ன நல்லது பண்ணியிருக்கிறீங்க?

நமீதா :- நான் விஜயகாந்த் சார், அர்ஜூன் சார் கூட படத்தில நடிச்சிருக்கு....

சந்தானம் :- புரியல மேடம் !!!!

நமீதா :- விஜகாந்த் சார், அர்ஜூன் சார் படங்கள்ல நிறைய தீவிரவாதிகள் பிடிக்கும், அது நாட்டுக்கு செய்யும் சேவை தானே? அவங்க கூட நான் நடிச்சது ராமர் பாலம் கட்ட அணில் ஹெல்ப் செஞ்சது போலதானே?

சந்தானம் :- (வாட் எ கிரேசி லேடி..... ) ஓகே மேடம், சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

*சிம்புவிடம்*

சந்தானம் :- நாட்டிற்காக நீங்க......

சிம்பு :- ஆக்சுவலி நான் என்ன சொல்ல வாறேன்னா் எனக்கு சுதந்திர தினம்னா ஞாபகத்துக்கு வாறது என்கூட இருக்கிற பசங்க எல்லாம் என்னை பாடச்சொல்லி, என்னோட பாட்டுக்கு கிளாப் அடிச்சு ஜாலியா இருக்கிறதுதான். என்னாலையே நம்பமுடியாத சில விசயங்களை என்னையும் அறியாம நான் செய்யிறதை எனக்கே....

சந்தானம் :- நான், எனக்கு, என், என்னை, என்னோட, என்னாலையே, என்னையும், எனக்கே் இந்த சொல்லுகள் இல்லாம உங்களால பேச முடியாதா?

சிம்பு :- எனக்கு அப்பிடியெ பேசி பழகிடிச்சு, என்னாலையே உடனடியா அதை கன்ரோல் பண்ண முடியல, நான் நினைச்சா முடியும்.

சந்தானம் :- சரி பதிலை சொல்லுங்க?

சிம்பு :- ஆக்சுவலி நான் என்ன சொல்ல வாறன்னா.....

சந்தானம் :- ரொம்ப நன்றிசார் நான் கிளம்பிறன்.

- *எப்பூடி*

திரை விமர்சனம்

## JOHNNY ENGLISH REBORN



ஒரு நடிகருக்குப் பொருத்தமான கதா பாத்திரம் இது தான் என்று ரசிகர்களால் நிச்சயம் செய்யப்பட்டிருக்கும் சூழலில், ரசிகர்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக வித்தியாசமான கேரக்டருடன் அந் நடிகர் திரையில் தோன்றி இன்ப அதிர்ச்சி கொடுத்தால் எப்படி இருக்கும்? ஹாலிவூட் நகைச்சுவை நடிகர்கள் மத்தியில் அன்று முதல் இன்று வரை தன்னுடைய அசத்தல் நிறைந்த நகைச்சுவை வசனங்களை உள்ளடக்கிய படங்களின் மூலமாகவும், ஆங்கிலம் புரியாத மக்களிடையே தன்னுடைய உடல் அசைவுகள் மூலம் நகைச்சுவை உணர்வுகளை வெளிப்படுத்தி மக்கள் மனங்களில் மிஸ்டர் பீனாக இடம் பிடித்திருக்கும் Rowan Atkinson அவர்கள் ஜேம்ஸ் பாண்ட் கதா பாத்திரத்திற்கு இணையாக நடித்து வந்திருப்பது தான் JOHNNY ENGLISH REBORN

ஐந்து வருடங்களிற்கு முன்பதாக பிரித்தானிய உளவுத் துறையில் பணியாற்றிய Johnny, மொசாம்பிக் நாட்டில் ஏற்பட்ட சதி முயற்சியினைக் கண்காணிக்கும் நோக்கில் அனுப்பப்படுகின்றார். அங்கே தன் கவனக் குறைவால், Johnny சென்ற முயற்சி தோல்வியில் முடிவடைந்து கொள்ள பிரித்தானிய உளவுத் துறையினரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட Johnny, தன் மனதிற்கு ஆறுதல் தேடி, சிறப்பான ஆன்மிகப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் திபெத்திற்குச் செல்கின்றார். திபெத்தில் பல் வேறு வகையான தற் பாதுகாப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டிருந்த Johnnyஐ மீண்டும் கடமைக்குத் திரும்புமாறு கோரி பிரித்தானிய உளவுத் துறை அழைப்பு விடுக்கின்றது.

சீனப் பிரதமர்- பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டு பிரித்தானியப் பிரதமர், மற்றும் பிரித்தானிய உளவுத் துறை அமைப்புக்களுடன் சந்திப்பு நிகழ்த்தும் சமயத்தில், அவரைப் பிரித்தானியாவில் வைத்து நவீன தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய ஆயுதங்கள் மூலம் கொலை செய்து, பிரித்தானிய உளவுத் துறையின் முகத்தில் கரிபூசுவதனை நோக்கமாகக் கொண்டு திட்டங்களைத் தீட்டும் சீன- ஹாங் ஹாங் மாபியா கும்பலைப் பற்றிய தகவல்களைத் தேடியறிந்து, அக் கும்பலின் நடவடிக்கைகளை முற்றாக அழிப்பதற்குப் பொருத்தமானவர் Johnny தான் எனக் கலந்தாலோசித்து Johnnyஐ திபெத்திலிருந்து மீண்டும் பிரித்தானியாவிற்கு வர வைத்து, தம்மோடு இணைத்துக் கொள்கின்றது உளவுத்துறை.

ஹாங்காங்-சீன என மாபியா கும்பலைத் தேடிச் சென்று அவர்களின் நடவடிக்கைகளை அறிவதற்காகச் சண்டையிட்டுத், தாம் ஹாங் ஹாங் சென்ற நோக்கத்தினை நிறை வேற்றி விட்டுத் திரும்பும் Johnny மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரினைப் பிரித்தானியா வரை பின் தொடர்ந்து, ஹாங் ஹாங் வரை சென்று பெற்றுக் கொண்டு வந்த கொலை முயற்சியைத் தடுப்பதற்கான ஆயுதத்தினைக் களவாடி, Johnny அவர்களைக் சேஸிங் பண்ணிக் கொலை செய்யும் நோக்கோடு பின் தொடரும் மாபிய கும்பலின் விறு விறுப்பான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஆக்சன் - மற்றும் அடுத்தது என்ன என்று ஒவ்வோர் தடவையும் திரையினை நோக்கி விழியின்ன நிமிர்த்திப் பார்க்க வைக்கும் அதிரடிக் காட்சிகளைத் தாங்கி நகர்கின்றது இந்தத் திரைப்படம்.

படத்தில் இடம் பெறும் ஒவ்வோர் அசைவுகளின் பின்னேயும், விறு விறுப்பான காட்சிகளும், அதற்கு குறைவில்லாத வகையில் படத்தினை இயக்கியுள்ளார் இயக்குனர் Oliver Parker. படத்திற்குப் பலமாக வசனங்கள் அமைந்திருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக படத்தின் வசனங்கள் அனைத்தையும் கதாநாகயன் Rowan Atkinson அவர்களே எழுதியுள்ளதோடு, தன்னுடைய நகைச்சுவைக் காட்சிகளில் சிறிதளவும் தொய்வு நிலை ஏற்படக் கூடாது என்பதனைக் கருத்திற் கொண்டு, வசனங்களினை அமைத்திருக்கிறார். மிக நீண்ட நாட்களாக ஜேம்ஸ் பாண்ட் படங்களைப் பார்க்க முடியவில்லையே எனும் ஆதங்கத்தில் இருப்போருக்கு, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களாக ஆக்சன் கலந்த காமெடி நிறைந்த - விறு விறுப்பிற்கு குறைவற்ற படமாக இப் படம் அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

- *ஆ.கண்ணன்*



திரை விமர்சனம்

# வாகை சூட வா



'களவாணி' என்ற அபார வெற்றிக்குப் பின்பு அந்த ஒரு வெற்றியை மட்டுமே அடையாளமாக கொண்டு இயக்குனர் சற்குணத்தின் இந்தப் படைப்புக்காக தமிழ்த் திரையுலகமே ஆவலோடு காத்திருந்தது. ஒரு கல்யாண விருந்துக்காக காத்திருந்தவர்கள் பாதி வயிறு நிரம்பிய நிலையில் எழுந்து போன மனநிலையைத்தான் இப்படம் தந்திருக்கிறது என்பது சோகமானது..!

கதைக்களம் 1966-ம் ஆண்டு நடப்பதாக உள்ளது. சர்க்கார் உத்தியோகத்தில் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக கே.பாக்யராஜை அவருடைய மைத்துனர் அவமானப்படுத்திவிட்டார். இதற்காக ஒரு வைராக்கியத்துடன் தனது மகன் விமலை டீச்சர் டிரெயினிங்கிற்கு படிக்க வைத்து அரசுப் பள்ளி ஆசிரியராக்குவதுதான் தனது லட்சியமாக்க் கொண்டிருக்கிறார்.

அரசுப் பள்ளி ஆசிரியர் ஆவதற்கு முன்பு கிராம சேவாவின் மூலம் கிடைக்கின்ற டீச்சர் வேலையில் சேர்ந்து அதன் மூலம் டீச்சர் அனுபவத்தைப் பெற்று பின்பு ரெகுலர் டீச்சர் வேலையில் மகனை சேர்த்துவிட்டு தனது லட்சியத்தை நிறைவேற்றலாம் என்று துடிக்கிறார் அப்பா பாக்யராஜ்..

இதற்காக கண்டெடுத்தான் காடு என்னும் குக்கிராமத்திற்கு வருகிறார் விமல். செம்மண் புழுதியில் செங்கல் சூளை மட்டுமே அக்கிராமத்தின் வாழ்வாதாரமாக இருக்க, படிப்பறிவே இல்லாத பாமர மக்கள் தங்களது குடும்பத்தினரோடு அடிமைகளை போல் நாளைய பொழுதை பற்றிக்கூட கவலைப்படாமல் உழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இவர்களுடைய குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கலாம் என்று வந்த விமலை அந்த ஊரிலேயே டீக்கடை நடத்தும் மதி என்னும் பெண் ஒரு தலையாக்க் காதலிக்கிறாள். பிள்ளைகள் பள்ளிக்கு வர மறுக்கிறார்கள். பெற்றோர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். செங்கல்களை மொத்தமாக வாங்கும் முதலாளி விமலை ஊரைவிட்டு துரத்த முயல்கிறான். இறுதியில் யார் வென்றது என்பதுதான் கதை..!

முருங்கைக்காய்களுடன் பாக்யராஜின் என்ட்ரியை பார்த்தவுடனேயே படம் பற்றிய எனது கணிப்பு லேசாக மாறியது.. பின்பு நாயகிக்குரிய பாத்திரத்தை பார்த்தவுடனேயே ஆஹா.. டிராக் மாறிருச்சு என்று கணிக்க முடிந்தது..

களவாணியைப் போலவே இதிலும் விமலின் பாத்திரத்தை அப்படியே வைத்திருக்கிறார். குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதைத் தவிர மீதியெல்லாம் தான் செய்து கொண்டிருக்கிறார். கூடவே ஒரு தலைக் காதலுக்காக அவ்வப்போது பாடுவதும், ஆடுவதுமாக கதை செல்கிறது..!

கதையின் முதல் முடிச்சே இடைவேளைக்குப் பின்பு அரை மணி நேரம் கழித்துதான் வருகிறது. அதுவரையில் நடந்த்தெல்லாம் எதற்காக..? முன்பே அந்தக் காட்சிகளை வைத்து பிற்பாடு காதலை சொல்லியிருக்கலாம்..! ஹீரோயினின் தீவிரமான ஒரு தலைக் காதலை புரியாத அளவுக்கு அப்பாவியாய் இருக்கும் விமலின் பாத்திரம் இறுதிவரையில் பொங்கி எழவே இல்லை. இறுதியில் கூட அமைதியாகத்தான் அவர் தனது அப்பாவிடம் தனது விருப்பத்தைக் கூறி கிராமத்துக்கு திரும்புகிறார்.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக உணர்த்தியிருக்க வேண்டிய திரைப்படம், வலுவான திரைக்கதையில்லாத்தால் ஏதோ லைட்டா சொல்லியிருக்காங்க என்றாகிவிட்டது..!

விமலின் நடிப்பில் அப்பாவித்தனம் ஓகே. ஆனால் எகத்தாளமாக பேசும்போது உண்மையாகவே வில்லனை போல் தெரிகிறார். ஆனால் கேள்விகள் கேட்கும்போது அப்பாவியாய் வருகிறது.. குழப்பமான பாத்திரப் படைப்பு. ஆடு முட்ட வருவதை பார்த்து பயந்து ஓடுபவர் என்ற ஒரு குணாதிசயத்திற்காக 3 முறை அதே காட்சிகளை வைத்து வெறுப்பேற்ற வேண்டுமா..?

ஹீரோயினுக்கு முதல் படம் என்றாலும் நிறையவே நடித்திருக்கிறார் நன்று. டீயின் விலையை பைசாவில் சொல்லி அறிமுகமாகும் முதல் காட்சியில் இருந்து தன்னுடைய திருமணச் செலவுக்காக டீயின் விலையை ஏற்றிவிட்டதாக அனைவரிடமும் சொல்லும் காட்சி ரசிப்பு..!

பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பித்தான் வேண்டும் என்று சொல்லி விமல் அவர்களுடன் சண்டையிடுவதாக நினைத்து 2 காட்சிகளை வைத்திருக்கிறார் இயக்குநர். ஆனால் அதில் விமல் காட்டும் முகபாவங்களையும், வசனங்களையும் கேட்டால் ஏதோ சம்பிராதயத்துக்கு கேட்பது போல் இருக்கிறது..படத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு முரண்.. படிப்பறிவே இல்லாத குழந்தைகள் பேசுகின்ற பேச்சைக் கேட்கும்போது அது அவர்களது வயதுக்கு மீறியதாக இருக்கிறது.

அப்பாவிகள்.. படிப்பறிவில்லாதவர்கள்.. இப்படித்தான் இருப்பார்கள் என்று நமக்கு நாமே சமாதானம் செய்து கொள்ளலாம். ஆனால் கல்வி வேண்டும் என்ற மனநிலை பெற்றோர்களுக்கு தோன்ற ஒரு காரணம் வேண்டுமே..? அது இங்கே அழுத்தமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மிகத் தாமதமாக.. செங்கற்களை எண்ணிப் பார்த்து கண்டுபிடிக்க தூண்டிவிடும் விமலின் இந்தக் காட்சியை முதற்பாதியில் வைத்திருந்தாலாவது படத்தின் ஓட்டத்திற்கு கை கொடுத்திருக்கும்..! எல்லாம் முடிந்து கடைசியில் என்ன செய்வது..?

எதுவுமே நல்லாயில்லையா என்று கோபப்பட வேண்டாம். கலை இயக்குநரும், ஒளிப்பதிவாளரும் அருமையாக வேலை செய்திருக்கிறார்கள் இருந்தும் அழுத்தமான, மனதை தைக்கக் கூடிய காட்சிகளை தேடித் தேடிப் பார்த்தேன். அவைகள் கிடைக்கவில்லை. இவ்வளவு அழகான கதையில் அது இருந்திருக்க வேண்டாமா..?

இந்தப் படத்திற்கு எதற்காக 1966-ம் வருட காலக் கட்டம்..? இப்போதுகூட தமிழ்நாட்டில் பல மலைக் கிராமங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். அப்படியொரு மலைக்கிராமத்தில் ஒரு இளைஞன் குழந்தைகளின் படிப்பறிவுக்காக போராடுகிறான் என்றே எடுத்திருக்கலாம்.. எதற்காக 1966 என்று தெரியவில்லை. மிகச் சிறப்பான ஒரு கதைக்களனில் விளையாட்டு காட்டியிருக்க வேண்டிய இடத்தில், வெறுமனே எழுத்தில் மட்டுமே அதனை செய்திருக்கிறார் என்பதுதான் வருத்தத்திற்குரியது.

வாகை சூட வா - திரைக்கதையில் மாற்றம் செய்திருந்தால் நிச்சயம் வாகை சூடியிருப்பான்..!

*- உண்மைத் தமிழன்*

## சினித்துளி

## நிராகரிக்கப்பட்ட ஆஸ்கார் கனவு !!



பிராந்திய மொழி படங்களுக்குரிய ஒஸ்கார் விருது தேர்விற்கு மலையாளப் படங்களே அனுப்பப்படுகின்றன ஆதாமின்டே மகன் அபு, உருமி ஆகிய இந்த இரண்டு படங்களில் ஆதாமின்டே மகன் அபு படம்தான் இந்தியாவில் இருந்து ஒஸ்காருக்கு அனுப்பப்பட்ட படங்களாகும். தேர்விற்கு சென்ற எந்திரன், கோ, தெய்வத் திருமகள், முரண், ஆடுகளம் உள்ளிட்ட ஐந்து திரைப்படங்கள் தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தன அங்கு தான் இந்த நிராகரிப்பு நடந்தது.

ஐந்து தமிழ்படங்களிலும், ஹொலிவூட் படங்களில் இருந்து பல காட்சிகள், சில படங்களின் கதைகளமும் சுடப்பட்டிருந்தது தெட்டத் தெளிவாக தெரிந்ததால், சென்ற ஐந்து திரைப்படங்களும் திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

## கைவிடப்பட்ட 'ராணா'!



கே. எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் நடிக்கவிருந்த ராணா திரைப்படம் 'கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இத் தகவல் உறுதி செய்யப்படாத நிலையில் தற்போது ரஜனி கே.எஸ். ரவிக்குமாரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இதன் போது இப்படம் நிறைவடைய ஒன்றரை வருடங்கள் வரை தேவையென்பதனால் தற்போதைக்கு ரஜனியால் அது சாத்தியமில்லை யென்பதனால் இப்படத்தினைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளனராம்.

எனினும் ரஜனி கே.எஸ். ரவிக்குமாருடன் இணைந்து வேறு படமொன்றில் நடிக்கலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன. இதன் படப்பிடிப்பு எதிர்வரும் ஜனவரி மாதமளவில் ஆரம்பமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சுந்தர்.சியுடன் இணையும் வடிவேலு!



சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு ஆதரவாக பட்டி தொட்டியெங்கும் கலகலப்புடன் பிரசாரம் செய்தார் நடிகர் வடிவேலு. தேர்தலில் திமுகவுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து சினிமாவை விட்டு விலகியிருந்த வடிவேலு, சுந்தர் சி இயக்கும் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இந்த இருவரும் இணைந்த வின்னர், கிரி, தலைநகரம், நகரம் என அத்தனைப் படங்களுமே நகைச்சுவையில் தனி முத்திரைப் பதித்தவை என்பது நகைச்சுவை வரும்பிகள் அறிந்தவையே.

இடைவெளிக்குப் பிறகு முழு வீச்சோடு நடிக்க வரும் வடிவேலுவும், மீண்டும் இயக்கத்தை கையிலெடுத்துள்ள சுந்தர் சியும் மீண்டும் பட்டையைக் கிளப்புவார்களா என்பது அம்மாவின் கையசில் தான் இருக்கிறதாம்....

## 'தனுஷ் எழுத, ஸ்ருதி பாட'...



தனுஷ், ஸ்ருதிஹாசன் நடித்து வரும் படம் '3'. தனுஷ் மனைவி செளந்தர்யா முதன் முறையாக இயக்கி வருகிறார். திரைப்படங்களில் சிலபாடல்கள் பாடி வந்த தனுஷ், 'மயக்கம் என்ன' படத்தில் அனைத்து பாடல்களையும் எழுதி மக்கள் பலருக்குப் பீதியைக் கிளப்பினார். இந்த நிலையில் '3' படத்தில் இடம் பெறும் ஒரு டுயட் பாடலை தனுஷ், ஸ்ருதிஹாசன் இணைந்து பாடி இருக்கிறார்கள். தாங்கள் பாடியுள்ள அந்த பாடலுக்கு அவர்களே நடிக்கவும் இருக்கிறார்கள். *கிழிஞ்சுது கதை.....*

T.N. MOTORS SERVICES
All Makes & Models

CROYDON
181 Handcroft Road,
West Croydon, CR0 3LF
T:020 8689 1984
tn.motors@hotmail.com
Working Hours:
Monday - Saturday 9.00 am to 6.00 pm
Services and repair all makes and models, MOTs, Air Conditioning, Welding Insurance Work, Bodywork, Tyres, Exhausts Automatic & Manual Gearbox Repairs, Engine Rebuilds Specialists, Courtersy Cars Available on Most Repairs and Vehicle Recovery Services
Accident Repair , Injurry Clients
020 8689 1984 • 020 8648 345
MITCHAM WORKSHOP 1
R/O 36A, Grenfell Road,
Mitcham, Surrey CR4 2BY
T : 020 8648 3458
M : 07956274764
F : 020 8665 9111

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS
Give your child the Learna Advantage. Today.
Maths & English Clases for 4- 16 years
Challenging Individualised learning path
Focus on Problem Solving, Reading and writing
Improve child's self - confidence and concentration skills
Thousands of computer acvities & Printed worksheets
Monthly progress tests and instant reports

LEARNA
• Individualised • Interactive • Inspiring
Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk
Learnies
0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU



ammaatel
Talk for Less

ரொம்ப பேசுங்க...! கொஞ்சம் காசுல...!

HOME ACCOUNT

INDIA 1/2 p/min
Landline + Mobile

SRI LANKA 4 p/min
Landline + Mobile

Join now and Get **100 min FREE*** to INDIA

www.ammaatel.com

PC & Mobile diallers available!
For more information call:
UK: 020 7784 6416
020 3318 9929
Canada: +(647) 724 5349

*Limited period only. Terms and conditions apply.

*Opening On Saturday!!!!*

Krishna Bhavan
Pure Vegetarian Indian Restaurant

**Aachi Masala** *Bar & Grill*

**The Indian & Srilankan Restaurant**

**120 Seated Function Hall Available**

Krishna Bhavan
*Our Croydon Branch*

337- London Road, Croydon
Surrey - CR0 3PA, London - UK
Ph: 0208 664 3100
Mob: 0774 625 3071

Aachi Masala Bar & Grill
Ph: 0208 514 2607

Bollywood Bowling
Ph: 020 8553 4130

CO2 Bar
Ph: 020 8553 4130

Hare Krishna Bhavan
Ilford & Croydon
Ilfo - Ph: 0203 514 7388
Cro - Ph: 0203 664 3100




நீங்கள் உங்கள் குடும்பத்துடன் விளையாடி உண்டு மகிழ ஓர் சிறந்த இடம்

Unit -2 Clements Road Ilford, Essex, London - IG1 1BP - UK

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with* **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

SSSS ATOL PROTECTED

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்


ORU PAPER

FREE

PAPER - 08 ♦ ISSUE - 155 ♦ 07 FRIDAY OCTOBER 2011

வழமையான
ஒசிப் பேப்பர்
உள்ளே...

# லண்டன் பழைய தொலைக்காட்சி (TV) சமிக்கைகள் ஏப்பிரலில் நிறுத்தப்படும்



get set for digital


## இலண்டன் தொலைக்காட்சி சமிக்கை சேவை ஏப்பிரல் மாதத்திலிருந்து நிறுத்தப்படுகிறது.

இலண்டனில் நடைமுறையிலிருந்த தொலைக்காட்சி சமிக்கைக்குப் பதிலாக கடந்த ஏப்பிரலில் இலக்க ரீதியான சமிக்கை முறைக்கு மாற்றப்பட்டது.

**உங்களிடம் இலவசமாகப்பார்க்கும்(Freeview) வசதி இருக்குமாயின்**
உங்களது தொலைக்காட்சி சமிக்கை நிறுத்தப்பட்டதும் சில ஒளி அலைகள் தடைப்படும். அவற்றை மீண்டும் பெறுவதற்கு ஒளி அலைகளை மீண்டும் சீர் செய்யுங்கள்.


**உங்களிடம் இருக்கும் துணைக்கோளம் அல்லது கம்பி வழி நிகழ்ச்சிகளைக் காணும் காட்சி வசதி (உ–ம்: ஸ்கை ரீவி அல்லது வேர்ஜின் மீடியா)**
உள்ள எல்லாத் தொலைக்காட்சிப் பெட்டியிலும் நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை.

**உங்கள் தொலைக்காட்சி இலக்க ரீதியானதாக இல்லாதிருந்தால்**
பழைய சமிக்கைகளை நிறுத்தியதும் உங்கள் தொலைக்காட்சி ஒளி ஒலி அலைகள் கிடைக்க மாட்டாது. இலக்க ஒளி அலைப் பெட்டி அல்லது பதிவுசெய்யும் பெட்டியைப் பயன் படுத்தி உங்கள் தொலைக்காட்சியை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். துணைக்கோள கம்பி தொலைக்காட்சி சேவையைப் பொருத்திக் கொள்ளுங்கள். அல்லது ஒரு புதிய இலக்க ரீதியான தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குங்கள்.


மேலதிக தகவல்களுக்கு எமது அறிவுரை தருபவருடன் ஆங்கிலத்தில் அல்லது எந்த மொழியில் நீங்கள் பேசுகிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்தி 08456 50 50 50 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்விவரம் பற்றிய செய்திகளை digitaluk.co.uk/languages என்ற இணைய தளத்தில் கிடைக்கப்பெறும்.

get set for digital



# உங்கள் தொலைக்காட்சி -TV அலைவரிசைகளை இழக்க வேண்டாம்.

நீங்கள் 75 வயதுக்கு மேற்பட்டவராக அல்லது குறைபாடு உள்ளவராக இருந்தால் நீங்கள் "நிலைமாற்ற உதவித்திட்டம்" ('Switchover Help Scheme') பெறலாம். நீங்கள் பெறக் கூடியவை:


- சுலபமாக உபயோகிக்கும் உபகரணம்
- உத்தியோக பூர்வமான ஒருவர் உங்களுக்கு உபகரணங்களைக் கொண்டுவந்து பொருத்தி விடுவார்.
- அடுத்த 12 மாதங்களுக்கு பழுது பார்க்கும் சேவையும் மறுபடி அலைவரிசைகளை சரி செய்யும் சேவையும் அளித்து உதவுவார்கள்.

இச்சேவைக்கு £40 செலவாகும். நீங்கள் குறிப்பிட்ட நலவுரிமை பெறுபவராக இருந்தால் இச்சேவை இலவசமாகும். இவ்வுதவித்திட்டத்தினர் உங்களுக்கு இதுபற்றிய விவரத்தை அனுப்பி வைப்பார்கள். தேவையானால் நீங்கள் 0800 40 85 900 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு உதவி தேவையெனில் தயவுசெய்து நீங்கள் பேசும் மொழியைக் குறிப்பிட்டு தொலைபேசியில் அழைக்கவும்.

BBC The Switchover Help Scheme is run by the BBC

switchover help scheme

# லண்டன் பழைய தொலைக்காட்சி (TV) சமிக்கைகள் ஏப்பிரலில் நிறுத்தப்படும்



get set for digital